**TAMIL SPEAKING**
*Personal Injury Lawyer*
INJURED IN A **ROAD ACCIDENT** ?
ACCIDENT AT WORK PLACE OR **PUBLIC PLACE**
WE ACT ON "NO WIN NO FEE" BASIS
YOU KEEP 100% COMPENSATION
FOR FREE ADVICE CALL
Ask for RAJ
**NOTMYFAULT LAWYERS**
**M : 0781 089 7754**
EMail : raj@notmyfaultlawyers.com
4, Prince Albert Drive, Ascot, SL5 8AG



BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 10 ♦ ISSUE - 209 ♦ FRIDAY 10 JANUARY 2013



**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)

Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk



உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM






**Save Electric Bill by 50-60% !!!!!!!!!**
For more details call us
* Installation
* Service & Maintenance
* Finance Arrangement
* Total Shop Fitting

Great Deals Available.
We are specialised in Commercial Refrigeration & Energy Management
**HYPERTECH Refrigeration**
M: 079 1010 1022 F: 020 8711 3145
E-Mail - hypertech.uk@gmail.com
60, Torrington Way, Morden, SM4 5QA



**HK Solicitors**
ஐக்கிய இராச்சிய குடிவரவு நிபுணர்கள்
தேர்ச்சி பெற்ற எங்களின் தமிழில் பேசும் சட்ட வல்லுனரால் உங்களது அனைத்து விதமான சட்ட பிரச்சினைகளையும் தீர்த்து வைப்போம்.
THE LAW SOCIETY ACCREDITED Immigration & Asylum
*We have legal aid for asylum and Immigration.*
*We represent clients for same day visa services.*
*We deal in all immigration matters including:*
- Failed Asylum Seekers
- Marriage applications / unmarried partner applications
- Visit visas/ Family Visa
- Student Visa Tier 4 applications
- Family reunion
- European national residence permits/ residence documents
- EEA Association agreement
- Applications under Tier 1, Tier 2 & Tier 5
- UK Travel document
- Applications which fall outside the immigration rules
- In country appeals
- Entry clearance appeals
- சகல விதமான அங்கத்தவர் பதிவு விண்ணப்பம்
- நாடு கடத்தலுக்கு எதிரான முறையீடு
- அரசியல் தஞ்சம் மனித உரிமைகள்
- குடிவரவு மேல் முறையீடுகள்
- பிரித்தானிய குடியுரிமை
- நீதி மீள்பார்வை
- உள்வரவு அனுமதி மனுக்கள்
- நீள் தங்கல்
- நிரந்தர குடியுரிமை விண்ணப்பம்
- வேலைவாய்ப்பு விசாக்கள்
- சொந்தத் தொழில் தொடங்குவோருக்கான ஆலோசனைகள்

Web: www.hksolicitors.co.uk
111 London Road, Morden, Surrey SM4 5HP. | Tel: 020 8646 7485 Fax: 020 8687 2438 | Email: hksolicitors111@gmail.com Email: Info@hksolicitors.co.uk



**SURREY PAWNBROKERS LTD**
நகை அடைவு சேவை
Interest Rate Start from
£1000 → 2.5 %
We pay maximum gold price for your Jewellery for 1 grams around £21.00
Money transfer service from sri lanka to UK
WE BUY GOLD - BEST PRICE PAID
WE BUY EURO --- BEST RATE PAID
94 Tolworth Broadway, Surbiton, KT6 7HT
P : 020 8399 9176 M: 09847 579 682



குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.

We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk



**சென்னையிலிருந்து UK விசா**
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
*UK Immigration Specialist*
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94



நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
**020 8215 1205**
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors | 115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk


## ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Do you want to become an Accountant?

**Sage**

- We teach Sage for those don't have exposure to accounting package.
- Our approach will be more practical oriented and focused on the real accounting issues.
- We will teach the candidate to enable them to work in Sage independently.
- Our course includes the preparation of Trial Balance, Balance Sheet, Profit & Loss Account and VATcomputation including EU Sales Listing.

**Excel**

- We conduct classes for Basic and Advanced Excel (such as V-Lookup, H-Lookup, IF functions, Pivot tables, data worksheet consolidation, IRR & NPV computations) for complex modelling for accountants.
- You will get the chance to learn how to model practical case scenarios.

**AIKON ACCOUNTANTS LTD**

CHARTERED MANAGEMENT ACCOUNTANTS

Tel: 020 3585 3484, Mob: 077 1632 4331

Email: accounts@a-accountants.com Web: www.a-accountants.com



## We may have herbal solutions for your problems

உங்கள் தாம்பத்திய
வாழ்க்கையில் சிக்கல்களா?

காலத்தை வீணடிக்காமல்
தொடர்பு கொள்ளுங்கள்.



ஆண்மைக் குறைவுக்கான
சிகிச்சைகளும் எம்மிடம் உண்டு

சகலவிதமான மருத்துவ ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**Herbal Aid Health Centre**

10 Park Avenue, Southall, Middx UB1 3AQ

**Tel: 020 8843 0330**

Email : herbalaid@hotmail.co.uk

web : www.herbalaidhealthcentre.co.uk



## SCAN Electronics




**4 Camera CCTV System £ 499**

* 4 N/V Cameras (600 TVL), 19" Monitor,
* 4 CHANNEL DVR
(1 Month Rec + Mob View)

**8 Camera CCTV System £ 749**

* 8 N/V Cameras (600 TVL), 22" Monitor,
* 8 CHANNEL DVR
(1 Month Rec + Mob View)



**16 Camera CCTV System £ 1249**

* 16 N/V Cameras (600 TVL), 32" Monitor,
* 16 CHANNEL DVR (1 Month Rec + Mob View)

**EPOS System £ 1500**

**Wire Free Alarm £ 350**

2 Door Contact, 2 PIR Sensor
1 Panic Button, Mobile Link

All the Prices Including
Fitting and Transport

EPOS - Access Control System - Remote Management - CCTV - Alarm - Biomatrics System



**SCAN ELECTRONICS**

UNIT - 06, Zeal House, 8, Deer Park Road,
London, SW19 3UU. Mob 07956263068
Email - info@scanelectronics.com
Web - www.scanelectronics.com



REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

## UK COOL

AND SHOPFITTING Ltd.

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK

MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk



நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய
தைத்திருநாள் நல் வாழ்த்துக்கள்

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**

Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**

Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**

Roofing
Extension

**MOVING & DEVILERY**

**7 Days 24 HRS services & Repair**

URGENT REPAIR?
CALL:07951854057

1 YEAR PARTS &
LABOUR WARRANTY



## GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக
தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்

நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்



எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

**07983 589 993**

**07723 467 012**




## அருமையான விளக்கம்!

பாதைகள் மாறலாம், எடுக்கும் முடிவுகளில் தோல்விகள் காணலாம். இலட்சியத்தில் உறுதியாக இருந்தால் வெற்றி நிச்சயமென அக்குவேறு ஆணி வேறாக புட்டுப்புட்டு வைத்த மட்டைக்கிளப்பானின் அருமையான விளக்கம் வரவேற்கத்தக்கது.

*- அன்புடன் உமா மகாலிங்கம்*

## சாஸ்திரியார்–பாவை.ஜெயபாலன்

சாஸ்திரியார் பற்றிய விடயமாக பாவை.ஜெயபாலன் கடந்த ***ஒரு பேப்பர்*** பல ஆய்வு செய்த பின்னர் எழுதிய சிறப்பான கட்டுரை பலரையும் கவர்ந்துள்ளது. சோதிடம் உண்மை, ஆனால் சோதிடர்கள் தான் சரியான, பூரணமான சாஸ்திர அறிவு இல்லாமையால் பிழையாகக் கூறுகிறார்கள்.

இக்கட்டுரையை வாசித்த பின்னர் தன்னும் எமது மக்கள் சாஸ்திரத்தில் மிகவும் அவதானமாக நடந்து பணம், நேரம் முதலியவற்றை விரயம் செய்யாமல் இருப்பது சாலச் சிறந்தது.

*- வி.சக்திவேல்*

## ராதிகா எம்.பி எதை உடுக்கிறது?

கனடா தமிழ் எம்.பி. ராதிகா போடுகிற உடுப்பை விமர்சிக்கிறது என்று ஒரு கூட்டம் இருக்குது. கடந்த வருடம் கனடாவில் நடந்த கரீபியன் கொண்டாட்டத்தில் அவர் கரீபியன் நடனக்காரரின் உடை அணிந்துவிட்டா கலாச்சாரம் சீரழிஞ்சு போச்சுது என்று சிலர் ஒப்பாரி வைத்தார்கள். இப்ப அவர் கிளிநொச்சிக்கு போன போது கோர்ட் போட்டிட்டா என்று வேறை சிலர் அவவை நக்கலடிக்கிறார்கள். இப்பிடியே போனால் அவ என்னத்தைத்தான் உடுக்கிறது?

*- நந்தினி சண்முகம்*

## மந்தைகள் என்று ஏன் சொன்னார்?

கடந்த ***ஒரு பேப்பர்*** ல் 'ஆசிரியர்களை மந்தைகள் என்று அழைக்கலாமா?' என்ற தலைப்பில் சண்முகலிங்கம் அவர்களது கடிதத்தை பிரசுரித்திருந்தீர்கள். நடந்தது என்ன என்று தெரியாமல் இக்கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அல்லது திரு. சிறீகந்தராசா அவர்கள் மீதான காழ்ப்புணர்ச்சியில் எழுதப்பட்டுள்ளது. லண்டனில் நடந்த தமிழ் ஆசிரியர்களுக்கான பயிற்ச்சிப்பட்டறை ஒன்றில் தமிழ் இலக்கியத்தில் சொற்புணர்ச்சிக்கு தவறான விளக்கம் அளிக்கப்பட்ட போது ஆசிரியர்கள் கேள்வி எதுவுமின்றி ஏற்றுக்கொண்டார்களாம். அதனைக் குறிப்பிட்டு ஆசிரியர்கள் மந்தைகள் போல் இருந்தார்கள் என அவர் குறிப்பிட்டார். அதுவும் அவ்வாறு ஆசிரியர்களை மந்தைகள் எனக்குறிப்பிடுவதற்கு வருத்தம் வெளியிட்டிருந்தார். இந்த விடயங்களை மறைத்துவிட்டு தனித்து ஆசிரியர்களை மந்தைகள் என அழைத்தார் எனக்குறிப்பிடுவது தவறு.

*- அருணோதயன்*

## றாலாமி கவலைப்படுகிறான்

"யாழ்ப்பாணத்தில் கடமையாற்றியது மிக்க சந்தோசத்தை ஏற்படுத்துகின்றது. தற்போது இடமாற்றம் பெற்றுச்செல்வது மிகக் கவலையையும் தருகின்றது. யாழ்ப்பாணம் ஒரு சிறந்த மாவட்டம். இங்குள்ள மக்கள் சிறந்தவர்கள்" எண்டு யாழ் மாவட்ட சிங்கள இராணுவத்தளபதியாயிருந்த ஹத்துருசிங்க என்பவன் கூறியிருக்கிறான். றாலாமி கவலைப்படுறது சரிதான். இப்பிடி நினைச்ச மாத்திரத்திலை ஆட்களை போட்டுத்தள்ளவும், கொன்று புதைக்கவும், கோடி கோடியாய் பணத்தை சுருட்டவும் வேறு எங்கை முடியும்?

*- இணுவை இரங்கன்*

## யாருக்காவது பதில் தெரியுமா?

இலங்கையில் பலத்த விளம்பரத்துடன் உலகத் தமிழ் எழுத்தாளர் மகாநாடு கொழும்பில் நடந்தபோதோ, அல்லது அதி ஆடம்பரமாக இலக்கிய சந்திப்பு யாழில் நடந்தபோதோ. பெரிய கமரா கொண்டு 'வெள்ளைவான் கதை' எடுத்த போதோ, மேலும் பல்வேறு சிறுசிறு கூட்டங்கள் அங்காங்கே நடந்தபோதோ அல்லது பல தொலைக்காட்சி நிகழ்சிகளில் அரசியல் ஆய்வு செய்தபோதோ, பாயாத இந்த 'சுற்றுலா விசா விதிமுறைகள்' தற்போது ஒரு சிலரின் மேல் மாத்திரம்தான் பாயும் மாயம்தான் என்ன?

*- தாசன்*

## கெட்டு அழிவதானால் பாருங்கள்

தமிழ் தொலைக்காட்சிகளில் கடந்த பத்தாண்டுகளாக மெகா தொடர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. முன்பெல்லாம் மாலை நேரங்களில் மட்டுமே ஒளிபரப்பான இந்த தொடர்கள் இப்போது காலை பத்து மணி தொடங்கி இரவு பதினொரு மணி வரை ஒளிபரப்பாகிறது. பெரும்பாலான கதை இருதார மணம், கள்ளத் தொடர்பு, குடும்பத்தைக் கெடுப்பது, குழந்தையை விஷம் வைத்துக் கொல்வது என இருக்கிறது. ஏன் இப்படி என்று கேட்டால் மக்கள் அதைத்தான் விரும்புகின்றனர், நாங்கள் ஒளிபரப்புகிறோம் என்று பதில் சொல்லுகின்றார்களாம் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள்.

*- தமிழ்ச்செல்வன்*

## சிறி இணையங்கள் படுத்தும்பாடு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தனக்கு அரசியலில் போட்டியாக இருப்பவர்கள் பற்றி அவரது சகோதரின் லங்கா சிறி இணையங்கள் மூலம் பொய் தகவல்களை வெளியிட்டு வருகின்றன. லங்காசிறி, தமிழ்வின், மனிதன், ஜே.வி.பி நியுஸ் இத்தியாதி இத்தியாதிகள் இந்த கள்ளத்தனத்தில் ஈடுபடுகின்றன. அனந்தி சசிதரனையும் இவர்கள் விட்டு வைப்பதாகத் தெரியவில்லை.

*- முகுந்தா*

## விளம்பரப் பணமும் விடுதலையும்!

புதுவருட தினத்தன்று ஈலிங் அம்மன் ஆலயத்திற்கு சென்றிருந்தேன். அங்கு சில இளைஞர்கள் வெளியீடுகளை வைத்து விற்றுக் கொண்ருந்தார்கள். அவ்விடத்திற்கு வந்த ஒரு முதியவர் இலவசமான சஞ்சிகை ஒன்றை விநியோகித்துக் கொண்டிருந்தார். அங்கு நின்ற இளைஞர்களிடம் தான் ஒரு தமிழின உணர்வாளர் என்றெல்லாம் கூறிக்கொண்டிருந்தார். அவர்களில் ஒரு இளைஞன் நீங்கள் தமிழ் உணர்வுள்ளவர் என்றால் ஏன் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவான சிம்கார்ட் கொம்பனிக்கு விளம்பரம் போடுகிறீர்கள் என அந்த முதியவரிடம் கேட்டார்.

"இருநூற்றம்பது பவுண்ஸ் தருகிறார்கள். அதை விட்டுட்டு என்ன செய்யிறது" என்று நடையைக் கட்டினார் முதியவர்.

*- சின்னராசா*

## அருட்தந்தைக்கு வாழ்த்துகள்

ஜனவரி 6ம் திகதி தனது எண்பதாவது பிறந்ததினத்தைக் கொண்டாடும் அருட்தந்தை இமானுவல் அடிகளாருக்கு எனது வாழ்த்துகளை கூறிக் கொள்கின்றேன். சர்வதேச அழுத்தங்களால் அடிகளாரது உலகத் தமிழர் பேரவையானது தற்போது சற்று பாதை மாறிப் போவது போல் தோன்றினாலும், முன்னர் அவர் ஆற்றிய பணிகளை நாம் மறந்துவிட முடியாது.

*- அழகானந்தன்*

# உண்மையும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு தொடர்பான மாநாட்டிற்கு கூட்டமைப்பு செல்வது மிகப்பெரிய துரோகம்

**– கஜேந்திரகுமார்**

தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள ரிஆர்சி என்றழைக்கப்படும் உண்மையும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு தொடர்பான மாநாட்டிற்கு கூட்டமைப்பு செல்வது தமிழ் மக்களிற்கு செய்யும் மிகப்பெரிய துரோகமாக இருக்குமென தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். யாழ்.ஊடக அமையத்தினால் ஜனவரி 2ம்திகதி இடம்பெற் பத்திரிகையாளர் மாநாட்டினில் பேசிய அவர் தென்னாபிரிக்காவினில் இரு தரப்புக்களும் பேசி தீர்வு திட்டமொன்று எட்டப்பட்டிருந்தது. அதன் பின்னர் இரு தரப்பும் பரஸ்பரம் மன்னிப்பு வழங்கும் நடை முறையினை அமுல் படுத்தியிருந்தன. ஆனால் இங்கோ இன அழிப்பு தொடர்கின்றதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் பொறிமுறை சாத்தியமற்றது எனத்தெரிவித்த அவர் இங்கு இடம்பெற்று வருகின்ற இன அழிப்பிற்கு பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணையே அவசியமென்பதே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு எனவும் தெரிவித்துள்ளார்.

இன அழிப்பிற்கு உண்மைக்கும் நல்லினக்கத்திற்மான பொறிமுறை பொருத்தப்படாற்றதென நிராகரித்துள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனை இங்குள்ள தமிழ்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமாயின் ஒட்டு மொத்த தமிழ் மக்களுக்கும் செய்யும் துரோகமாகவே அமையுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கு போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையிலும் தமிழ்த்தேசியத்தை அழிக்கும் நடவடிக்கைகள் தான் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.இங்கு ஜனநாயகமும் இல்லாத நிலையில் அராஜக இராணுவ ஆட்சியே நடக்கின்றது. இந்நிலையில் இங்கு இடம்பெற்ற இன அழிப்பு நடவடிக்கைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு பொறிமுறையை கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகள் தென்னாபிரிக்கா அரசின் ஆதரவுடன் மேற்கொளப்பட்டு வருகின்றது.இலங்கை வந்திருந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி கூட இதை பற்றி பிரஸ்தாபித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

இங்கு இடம்பெற்றது இன அழிப்பு என்றே நாம் தெரிவித்து வருகின்ற நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அவ்வாறில்லை என தெரிவித்து வருகின்றனர். ஜெர்மனியினில் துறைசார் நிபுணர்கள் கலந்து கொண்ட தீர்ப்பாயமே கூறவிட்டது இலங்கையினில் நடந்தது இனப்படுகொலையேயென. ஆனால் நடந்தது இனப்படுகொலையில்லையென கம்பெனி விடயங்கள் பற்றி மட்டும் தெரிந்த கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் எம்.பி சுமந்திரன் சொல்கின்றார்.

இவ்வாறு இங்கு இன அழிப்பு நடைபெறவில்லை என அரசிற்கு வக்காலத்து வாங்குகின்ற தரப்பினர்கள் யாருக்கு பாதிப்பை ஏற்படுத்துமென்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அவர் இவ்வாறு செயற்படுவது யாருடைய நிகழ்ச்சி நிரலில் எனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஆகவே இந்த விடயத்தில் தெளிவானதொரு நிலையை மண்ணிலும் புலம் பெயர் நாடுகளிலும் உள்ள மக்கள் எடுக்க வேண்டும். அதாவது வெற்றுக் கோசங்களுக்கு எடுபடாமல் சிறந்ததொரு தீர்மானத்தை எடுக்க வேண்டுமெனவும் கஜேந்திரகுமார் கேட்டுக் கொண்டார். இந்தச் சந்திப்பின் போது கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் சர்வதேச விவகாரங்களிற்கான தலைவர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

*(தகவல் - யாழ் செய்தியாளர்)*

ஒரு பேப்பர் தொடர்பான கருத்துக்களுக்கு
facebook.com/orupaper Email: info@orupaper.com
Tel : 020 7043 4314 Fax : 020 7043 4312

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400
Head Office: 694-712, London Road, Hounslow, TW3 1PG (SATNV TW31PX)
0207 099 2400




OUR 100% COMMITMENT
YOU PAY ONLY ONCE & WE TRAIN YOU UNTIL YOU PASS
Life in the UK Preparation Course
B1 Speaking and Listening
- All Applicants after 28th October 2013
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport / Naturalisation
New rules applicable from October 28th
for British Citizenship and Indefinite Leave to Remain (ILR)
FREE INITIAL ASSESSMENT
IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test
Other Centres: Hounslow High Street, Wembley, Holloway Road, Whitechapel

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, JANUARY 10, 2014, ISSUE 209

## பொதுக் கோரிக்கையில் உடன்படுதல்

கடந்த மாதம் ஜெர்மனியில் நடைபெற்ற மக்கள் தீர்ப்பாயம், தனது விசாரணையின் முடிவில் இலங்கைத் தீவில் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கெதிரான இனவழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது என்ற தீர்ப்பினை வெளியிட்டிருந்தது. சர்வதேச அளவில் அறியப்பட்ட ஆனால் சுயாதீனமான முறையில் செயற்படும் துறைசார் நிபுணர்களைக் கொண்ட இத்தீர்ப்பாயத்தின் முடிவினை ஏற்றுக்கொண்டு ஐ.நா. அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற அமைப்புகள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் இதுவிடயத்தில் ஒரு பொதுவான முடிவுக்கு வருவதற்கு தமிழ் அமைப்புகளுக்கும் அவற்றின் தோழமைச் சக்திகளுக்கும் இத்தீர்ப்பு உதவியிருக்கிறது.

சிறிலங்கா அரசினால் ஈழத்தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வருகிற மானிடத்துக்கு எதிரான குற்றச்செயல்கள் தமிழர்களின் இருப்பையும், குடிப் பரம்பலையும் அழிக்கும் நோக்குடைய கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு (structural genocide) நடவடிக்கை என்பதனை தமிழ் அமைப்புகளில் பெரும்பாலானவை ஏற்றுக்கொள்கின்றன. இருப்பினும் பொதுவில் தயக்கத்துடன் `the G word' அழைக்கப்படுகின்ற இனவழிப்பு என்ற சொல்லை பயன்படுத்தும் பட்சத்தில் தாம் கடுங்கோட்பாளர்களாகக் கணிக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தில் அதனை பயன்படுத்துவதனைத் தவிர்த்து 'இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை' ஏற்படுத்துவது பற்றி பேசிவருகின்றன. சர்வதேச விவகாரங்களில் செல்வாக்குடைய 'சர்வதேச முரண்பாடுகளுக்கான குழு' போன்ற சிந்தனை மையங்களும் இச்சொல்லாடலைத் தவிர்க்குமாறு தமிழ் அமைப்புகளுக்கு ஆலொசனை வழங்கி வருகின்றன. ஆகவே இவ்விடயத்தில் பொதுவானதொரு நிலைப்பாட்டினை ஏற்படுத்த முடியவில்லை.

இனவழிப்பு என்பதற்கு பதிலாக போர்க்குற்றம் பற்றியே பேசிவரும் சில தமிழ் அமைப்புகள், தற்போது 'இரண்டு தரப்பினரும்' நடாத்திய போர்க்குற்றங்களும் விசாரிக்கப்பட வேண்டும் என தம்மை நடுநிலையாளர்களாக காட்டுவதற்கு முயற்சிக்கின்றன. தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் செயற்படும் தமிழ் அமைப்புகள் மத்தியிலும் இக்குழப்பம் தொடர்ந்து நிலவி வருகிறது.

தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயலில் இறங்கியுள்ளதாகக் குறிப்பிடும் இவ்வமைப்புகள் கொள்கையிலும், அணுகுமுறையிலும் வேறுபாட்டைக் காட்டி பிரிந்து நிற்பது, பன்மைத்துவம் பேணப்படும் ஒரு இயற்கையான நடைமுறை என ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் 'இனவழிப்பு' என்ற ஒற்றை விடயத்திலாவது அவை உடன்படவேண்டியது அவசியமானது. உலக வரலாற்றிலும் போராடும் இனங்கள் இவ்வாறுதான நடந்திருக்கின்றன.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*உங்கள் எல்லாருக்கும் புதுவருசம் நல்லாவே பிறந்திருக்கும் எண்டு நம்பிறம். இனி தைப்பொங்கல், இந்தக் குளிருக்கிள்ளை என்னத்தை பொங்கிறது எண்டு நீங்கள் முணுமுணுக்கிறது கேட்குது. இருந்தாலும் தமிழருக்கு எண்டு இருக்கிற திருநாளை விட்டு விடேலாது. அண்டைக்கு ஒரு நாளாவது தமிழராய் இருக்கப் பார்ப்பம்.*

***ஒரு பேப்பர்*** *ஒரு சமூகப்பத்திரிகை எண்டதிலை உங்களுக்கு ஒரு சந்தேகமிருக்காது எண்டு நம்பிறம். அப்பிடியெண்டால் சமூகத்திலை இருக்கிற நல்லது கெட்டதுகளை விவாதிக்க நாங்கள் இடம் குடுக்கோணும். குடுக்கிறம். பிரச்சினை என்னெண்டால் தங்களுக்கு பிடிக்காதவையளைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் எழுதிறதிற்கு சிலர்* ***ஒரு பேப்பர்*** *ரை பாவிக்க பார்க்கினம். ஆனபடியாலை நாங்கள் இதிலை கொஞ்சம் கவனமாயிருக்கிறம். நீங்கள் கந்தனோ, சுப்பனோ, வள்ளியோ, கறுப்பியோ எண்டு புனைபெயரிலை எழுதலாம். ஆனால் எங்களுக்கு உங்களின்ரை தொடர்பு விபரம் முழுசாய் தெரியோணும். மற்றது அப்பிடியான ஆக்கங்களை வெள்ளன அனுப்பினால்தான் நாங்களும் நாலுபேரை விசாரிச்சு நீங்கள் எழுதின விசயம் கிட்டமட்டவாவது சரியாய் இருக்கும் எண்ட முடிவுக்கு வரலாம். அதை விட்டுட்டு நாங்கள் அனாமதேயமாய்த்தான் இருப்பம் ஆனால் நாங்கள் எழுதிறது உண்மையைத்தவிர வேறொன்றுமில்லை எண்டு ஒற்றைக்காலிலை நிப்பிங்கள் எண்டால் எங்களுக்கு இதிலை மினக்கெடுகிறதுக்கு நேரமில்லை.*

*ஒரு பேப்பர் 207 இலை ஒரு பிழை நடந்து போச்சுது, Kids பேப்பரிலை போட்ட Jokes இல் ஒண்டு வளந்தாக்களுக்கானது. தவறுதாலாக அதிலை போட்டிட்டம். தயவு செய்து மன்னிச்சுக் கொள்ளுங்கோ. இனி இப்பிடிச் செய்யமாட்டம்!*

*'நடக்கவிருக்கு நிகழ்வுகளை'ஏன் பிரசுரிக்கிறதில்லை எண்டு கேட்கிற ஆட்களுக்கு, நிகழ்ச்சி நடத்திறவை எங்களுக்கு நேரகாலத்துக்கு விபரங்களை அனுப்பி வைக்கிறதில்லை எண்ட பதிலைத் தவிர வேறொண்டும் இல்லை. ஓசியிலை போடுற விசயத்திற்கும் இவ்வளவு பாடாய் இருந்தால் நாங்கள் என்ன செய்யிறது?*

*போன பேப்பரிலை வந்த சில ஆக்கங்களை அப்பிடியே லே அவுட்டுடன் எடுத்து கனடாவிலிருந்து வெளிவரும் 'நெற்றிக்கண்' என்ற பத்திரிகையிலை போட்டிருக்கு.* ***ஒரு பேப்பர்*** *எண்டு எழுதின இடங்களை கவனமாய் அழித்திருக்கினம். நல்லது, பிரச்சனையில்லை, ஏதோ விசயம் எல்லாருக்கும் போய் சேரட்டும் எண்டு விடலாம். ஆனால் நீங்கள் ஏன் அண்ணை 'நெற்றிக்கண்' இலிருந்து எடுத்துப் போட்டிட்டு அவங்களுக்கு நன்றியும் சொல்லாமல் விட்டுட்டியள் எண்டு எங்களிலை சிலர் குறைபிடிக்கினம். எங்களாலை நக்கீரன் கணக்கிலை குற்றம் குற்றமே எண்டு வாதாட முடியாது. விளங்கி நடந்தால் சரி.*

*வேறை என்ன?*

*சந்திப்பம்*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகள்*

# Tribunal delivers Sri Lanka's guilty verdict



*Tamil refugees stranded in North Pagai, Indonesia.*

Bruce Haigh

A tribunal of 11 eminent judges has unanimously found the Sri Lankan government guilty of the crime of genocide against ethnic Tamil people. Sitting in Bremen, from December 7 to 10, the Second Session of the Peoples' Tribunal on Sri Lanka found that the crime of genocide has been and is being committed against the Eelam Tamils as a national group.

I was invited to appear before the tribunal as an expert witness on the treatment of Tamils from Sri Lanka by the Australian government. The Second Session in Bremen was convened in response to the determination of the First Session, held in January 2010 in Dublin, that war crimes and crimes against humanity had taken place against the Tamil population in the final months of the war in early 2009, and that further investigation be undertaken regarding the question of genocide.

The two sessions of the Permanent Peoples' Tribunal were established in response to submissions made by the International Human Rights Association, Bremen, and the Irish Forum for Peace in Sri Lanka. The Permanent Peoples' Tribunal is based in Rome under the auspices of general secretary Gianni Tognoni. Thirty eye-witnesses and other experts appeared before the Second Tribunal, some at great personal risk.

The tribunal found that genocide against the Eelam Tamil group has not yet reached the total destruction of their identity; however, the genocide is a process and the process is ongoing. The military killings of May 2009 have been transformed into other forms of conduct causing serious bodily and mental harm to members of the group. The tribunal considered that the proof established beyond any reasonable doubt that the following acts were committed by the government of Sri Lanka:

Killing members of the group, which includes massacres, indiscriminate shelling, the strategy of herding civilians into so-called "no fire zones" for the purpose of killings, targeted assassinations of outspoken Eelam Tamil civil leaders who were capable of articulating the Sri Lankan genocide project to the outside world.

Causing serious bodily or mental harm to members of the group, including acts of torture, inhumane or degrading treatment, sexual violence including rape, interrogations combined with beatings, threats of death, and harm that damages health or causes disfigurement or injury.

Deliberately inflicting on the group conditions of life calculated to bring about its physical destruction in whole or part, including expulsion of the victims from their homes; and seizures of private lands; declaring vast areas as military high security zones to facilitate the military acquisition of Tamil land.

The tribunal undertook to further examine allegations of forced sterilisation of Tamil women.

Britain and the US were found to be guilty of complicity in the crime of genocide, including complicity by procuring means, such as weapons, instruments or any other means, used to commit genocide, with the accomplice knowing that such means would be used for such a purpose; and complicity by knowingly aiding or abetting a perpetrator of a genocide in the planning or enabling of such acts.

The tribunal recognised that Sri Lanka did not have the capacity to achieve genocide without assistance and, on the basis of evidence provided, came to the conclusion that Britain, the US and possibly India are guilty of complicity. However, due to the constraint of time, the tribunal limited its findings to Britain and the US, pending the availability of further evidence against India and other states.

After the recent gift of two patrol boats to Sri Lanka's navy, Australia is in danger of being one of those states. The gift adds to the military capacity of the Rajapaksa regime to illegally detain and harm Tamil asylum seekers fleeing repression.

In recent times the Rudd and Abbott governments took it upon themselves to send Tamil asylum seekers back to Sri Lanka without hearing their claims. This was done on the basis that they were economic refugees - although how this determination was reached without first hearing claims was not explained.

Australians outside of government involved with the welfare of Tamil asylum seekers have long known of the genocidal intent of the government. But it has been puzzling why the Australian government was not informed of this by its high commission in Colombo.

I took the opportunity at the hearings to ask some of the Tamil witnesses from within the country whether they thought the high commission was informed and they said yes, on the basis that they had briefed Australian diplomatic officers. This raises the question of what was done with that information. The assumption must be that it had gone to Canberra and had been ignored by government for reasons of policy and politics. This would suggest that both major parties knowingly acted illegally with respect to processing Tamil asylum seekers. How low can we go?

Lower, it seems. I was also informed that the high commission has now ceased briefings from Tamil sources in the north, presumably on the basis of what they don't know they don't have to lie about. A form of deniability adopted and refined by Hitler's Third Reich towards the final solution of the Jewish question.

The tribunal requested that states able to do so should take Tamil asylum seekers as refugees.

Bruce Haigh is a political commentator, human rights activist and retired diplomat.

*Courtesy: canberratimes.com.au*

# சர்வதேச நகர்வுகளும்; அதையொட்டிய மிகைப்படுத்தல்களும்



ஸ்ரீபன் ரப் இன் இலங்கை பயணத்தை எதிர்த்து சிறிலங்கா அரச ஆதரவாளர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டம்

**கோபி**
*ஒரு பேப்பர்*

வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் இருபத்தைந்தாவது கூட்டத்தொடரில் இம்முறையும் இலங்கைத்தீவு தொடர்பில் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில், இத் தீர்மானம் பற்றிய பரபரப்புச் செய்திகளை தமிழ் ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. அடுத்து வரும் வாரங்களில் இது மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம். இந்நிலையில் உண்மை நிலையினைத் தெளிவுபடுத்துவதே இப்பத்தியின் நோக்கமாக அமைகிறது.

அமெரிக்கா கொண்டுவரவிருக்கும் தீர்மானம் பற்றிய தகவல்கள் இதுவரை வெளிவரவில்லையாயினும், இது தொடர்பாக அமெரிக்க இராஜதந்திரிகள் வெளிப்படையாகவே பேச ஆரம்பித்திருக்கிறார்கள். தமது நாடு முன்வைக்கவிருக்கும் தீர்மானத்தில் சர்வதேச விசாரணை உட்பட காத்திரமான விடயங்கள் அடங்கியிருக்கும் என அவர்கள் கூறுவதாகத் தெரியவில்லை. மாறாக கடந்த முறை கொண்டுவரப்பட்ட தீரமானத்தை விட இம்முறை கொண்டுவரப்படுவது சற்று கடுமையானதாக அமையும் என்பதையே அவர்கள் கூறி வருகிறார்கள். ஆனால் தமிழ்த்தரப்புகளும், சிறிலங்கா அரசதரப்பும் இத்தீர்மானம் சமர்பிக்கப்படு முன்னரே இதனை முன்வைத்து தமது நலன் நோக்கிய பரப்புரைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளன. இவை தத்தமது வாக்கு வாங்கிகளை பலப்படுத்தும் நோக்கிலானவை. புலம்பெயர் தமிழ் அமைப்புகளும், தம்பங்கிற்கு, தமது லொபி(lobby) முயற்சியினால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டாதாகக் கூறி தமது இருப்பை நியாயப்படுத்த முயலலாம். சர்வதேச தரப்பினருடன் உறவுகளைப் பேணுவதையோ, லொபி நடவடிக்கைகளில் ஈடுபடுவதனையோ தவறென இப்பத்தி குறிப்பிடவில்லை. மாறாக மக்களுக்கு உண்மை நிலை வெளிப்படுத்தவேண்டும் என்பதனையே இங்கு வலியுறுத்தப்படுகிறது.

இவ்வாரம் இலங்கைத்தீவிற்கு பயணம் செய்துள்ள அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் சர்வதேச குற்றவியல் தொடர்பான உயர்ஸ்தானிகர் (US Ambassador for Global Criminal Justice) ஸ்ரிபன் ரப் அவர்கள், கொழும்பில் சிறிலங்காவின் இராணுவத் தளபதிகளையும், 'மாற்றுக் கொள்கைகளுக்கான நடுவத்தின்' தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து போன்ற மேற்கின் தாராளவாத ஜனநாயகத்தை வலியுறுத்தும் குடிசார் சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்களையும் சந்தித்துப் பேசியுள்ளார். அதுபோல் யாழ்பாணத்திற்கு பயணம் செய்து கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களான அனந்தி சசிதரன், விக்னேஸ்வரன், சுமந்திரன், மாவை சேனாதிராசா, மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் மற்றும் யாழ் குடிசார் சமூகத்தினரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருக்கிறார். யாழ்ப்பாணத்தில், தமிழ்த்தரப்புகளுடான சந்திப்புகளில், ஸ்ரிபன் ரப் அவர்கள் 'சர்வதேச விசாரணை' பற்றி எந்தவிடத்திலும் குறிப்பிடவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் யாழ் 'உதயன்' பத்திரிகை, சுமந்திரனுடான சந்திப்பில், தாம் சர்வ தேச விசாரணையைக் கோரவுள்ளதாக ஸ்ரீபன் ரப் தெரிவித்தாக ஒரு செய்தியை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால் மறுதினமே 'சர்வதேச விசாரணை கோருவதில் சவால்கள்' இருப்பதாக தம்மை சந்தித்த குடிசார் சமூகப்பிரதிநிதிகளுக்கு ஸ்ரீபன் ரப் கூறியதாக இன்னொரு செய்தியை 'உதயன்' வெளியிட்டது.


அனந்தி சசிதரனுடன் ஸ்ரிபன் ரப்

குடிசார் சமூகப்பிரதிநிதிகளுடனான சந்திப்பில், இலங்கை மீது சர்வதேச விசாரணையை முன்வைப்பதற்கும் அதனை நோக்கி நகர்வதற்கும் இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்று 'கோழியைக் கேட்டுத்தான் ஆணம் காய்ச்ச வேண்டும்' என்ற சாரப்படி ஸ்ரீபன் ராப் கூறியுள்ளார். இதன்போது குடிசார் சமூகப் பிரதிநிதிகள், "சூடானிய அரசு கேட்டா அங்கு நீங்கள் போர்க் குற்ற விசாரணை செய்தீர்கள்? ஏனைய நாட்டு அரசுகள் கேட்டா நீங்கள் அங்கு போர்க்குற்ற விசாரணை செய்தீர்கள்?" என்று அவரிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்குப் பதிலளித்த ஸ்ரீபன் ரப், சர்வதேச விசாரணை கொண்டு வருவதில் சில சவால்கள் இருக்கின்றன, ஐநா பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவ நாடுகளான ரஷ்யா, சீனா என்பவை தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தும். அதுபோல் ஐநா மனிதவுரிமைச் சபையில் மேலும் கடுமையான பிரேரணையை முன்வைத்தால் சில நாடுகள் பிரேரணைக்கு ஆதரவளிக்க மாட்டா, பிரேரணை தோல்வியடைந்து விடும் எனக் கூறியதாகத் தெரிய வருகிறது. சீனா சிறிலங்காவில் மேற்கொண்டுள்ள முதலீடுகளைக் காட்டிலும் அதிகளவு மூலதனத்தை சூடானில் வைத்திருக்கிறது என்ற தகவலை இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இத்தகவல்கள், வரும் மார்ச் மாதத்தில் அமெரிக்கா கொண்டு வரவிருக்கும் தீர்மானம் எத்தகையதாக இருக்கும் என்பதனைக் கோடிட்டு காட்டுவதாக அமைந்துள்ளன. ஆனால் தமிழ் ஊடகங்களில் சில இதையிட்டு மிகைப்படுத்திய செய்திகளை வெளியிட்டு மக்களை மீளவும் இருட்டில் வைத்திருக்கவே விரும்புகின்றன அல்லது தாம் சார்ந்திருக்கும் அரசியல் தலைமைகளுக்கு ஆதரவு தேட முற்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு சார்பான ஊடகங்கள், சர்வதேச இராஜதந்திரிகளுடான சந்திப்புகளில் பேசப்பட்ட விடயங்களை ஊதிப்பெருக்க வைத்து 'சர்வதேச விசாரணை', 'ஐ.நா. மேற்பார்வையில் சர்வதேசப் பொறிமுறை' போன்ற தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் உள்ளடக்கியதான தீர்மானம் கொண்டு வரப்படவிருப்பதாக செய்தி வெளியிட ஆரம்பித்துள்ளன. மேற்படி விடயங்களில் உள்ள உண்மைத்தன்மையை தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இருப்பினும் முன்பு இவ்விடயங்களைப் பேசத்தயங்கிய கூட்டமைப்பினர் இப்போது இவை பற்றி பேசத்தலைப்பட்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடையலாம்.

ஸ்ரீபன் ரப் அவர்களைத் தொடர்ந்து, இம்மாத இறுதியில், தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் தலைமையிலான இராஜதந்திரிகள் குழுவொன்றும் இலங்கைத் தீவிற்கு பயணம் செய்யவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. போர்க்குற்றம் தொடர்பான ஆவணங்களையோ, தகவல்களையோ சேகரிக்கும் நோக்கில் இராஜதந்திரிகளின் இவ்வாறான பயணங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை. அதுபோல் உடனடியான அரசியல் மாற்றங்கள் எதனையும் இப்பயணங்கள் ஏற்படுத்தப்போவதில்லை. இவை பிரதமர் டேவிட் கம்ரனின் அவர்களது பயணம் போன்றதொரு அடையாள நடவடிக்கையாக அமைந்துள்ளன. தவிரவும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள், பாக்கியசோதி சரவணமுத்து உட்பட இலங்கைத்தீவின் அரசியலுடன் தொடர்புடைய பல்வேறுதரப்பினரையும் கிரமமான முறையில் சந்தித்து வருவது வழமையான நடவடிக்கையே. ஆனால் இவை சிறிலங்கா அரசாங்கத்தின் மீது மென் அழுத்தத்தினையும், எதிர்த்தரப்பு அரசியல் செயற்பாட்டிற்கான வெளியினையும் அதிகரித்துள்ளன என்பதனை மறுப்பதற்கில்லை.

மேற்படி பயணங்களையும், சந்திப்புகளையும், சந்திப்புகளில் பேசப்படும் விடயங்களையும் பயன்படுத்தி, தமிழ் அரசியல்வாதிகள் தமது வாக்கு வங்கியை பலப்படுத்த விழைவதுபோல், சிங்களத் தரப்பினரும், இவற்றை சிறிலங்காவின் இறையாண்மைக்கு வெளியிலிருந்து விடுக்கப்படும் அச்சுறுத்தலாகக் காட்டி தமது வாக்கு வங்கியை பலப்படுத்திக் கொள்கிறார்கள். சிறிலங்காவின் இறையாண்மையை விட்டுக் கொடுப்பதைக் காட்டிலும் மகிந்த இராஜபக்ச குடும்பத்தின் சர்வாதிகார ஆட்சியை ஏற்றுக்கொள்ளலாம் என்பதாக சிங்களத் தேசியவாதிகள் வெளிப்படையாகவே பரப்புரை செய்கின்றனர். இவை மகிந்த இராஜபக்ச அரசாங்கத்தை தொடர்ந்தும் ஆட்சியில் வைத்திருக்கவே உதவுகின்றன.

கடந்த டிசம்பர் மாத இறுதியில் யாழ்ப்பாணத்திற்கு தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த கனேடிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் இராதிகா சிற்சபையீசன் விடயத்தில் சிறிலங்கா அதிகாரிகளும், ஊடகங்களும் நடந்து கொண்ட விதம் சிங்கள மக்கள் மத்தியில் இராதிகாவை ஆபத்தான ஒருவராகக் காட்டிக்கொள்ளும் ஒரு பரப்புரை முயற்சியே தவிர வேறொன்றுமில்லை. ராதிகா சுற்றுலா நுழைவு அனுமதியில் இலங்கைக்கு சென்றிருந்த போதிலும், அவர் ஒட்டாவாவிலுள்ள சிறிலங்கா தூதரகத்தின் அழைப்பின் பேரிலேயே அங்கு பயணம் செய்ததாக பிறிதொரு தகவல் தெரிவிக்கின்றது. தான் அரசியல் ரீதியான அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டதாக ராதிகா தெரிவித்திருந்தார். இருப்பினும் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னரும், அங்கு என்ன நடந்தது என்ற தகவல்களை அவர் இதுவரை வெளியிடவில்லை. இவற்றை வைத்துப் பார்க்கையில் அவரும் தனது பயணம் ஏற்படுத்திய பரபரப்பினை தமிழ் வாக்காளர்களின் வாக்குகளை பெறுவதற்கு பயன்படுத்துகிறாரோ என எண்ணத் தோன்றுகிறது.

ஐநா மனிதவுரிமைச் சபையில் கொண்டுவரப்படவிருக்கும் தீர்மானம் ஒருபுறமிருக்க, சர்வதேச இராஜதந்திரிகள் யாழ்ப்பாணத்திற்கு சென்று தமிழ் தரப்பினரை சந்திப்பது, தமிழ் மக்களுக்கும் சர்வதேச சக்திகளுக்கும் இடையிலான உறவாடலை அதிகரித்திருக்கின்றது. இது தமிழ்த் தேசிய சக்திகளுக்கு ஒரு மறைமுகமான அங்கீகாரத்தையும் வழங்கி, அவற்றை பலப்படுத்தியிருக்கிறது எனப்பலரும் முன்வைக்கும் கருத்தினை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்தி தமிழ் அரசியற்தரப்புகள் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகள் நோக்கி பயணிப்பார்களா அல்லது காலனித்துவ விசுவாசத்துடன் அடிவருடிகள் போன்று செயற்படுவார்களா என்பதுதான் எல்லோர் முன்னிலையும் உள்ள கேள்வியாக உள்ளது.

கருத்துக்களுக்கு @orupaper & facebook.com/orupaper

## ஒரு பேப்பர்
### கிடைக்குமிடங்கள்

**New Malden**
- Ayngaran ............... 020 8949 6734
- Megaa Superstore .. 020 8336 0061
- Vaaniyan ............... 020 8605 0434
- Murugan Kovil ....... 020 8942 4475
- Vaishna Superfoods 020 8399 4488
- Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
- Yhaal House ........... 020 8767 8585
- Rainbow Restaurant. 020 8640 4230
- Amman Kovil ......... 020 8795 4258
- Niru Con.Store ........ 020 8672 3200
- Ayngaran ............. 020 8540 1500
- Suvai Aruvi............. 020 8543 6266
- Adchaya ............. 020 8540 8192

**Croydon**
- Best Foods............. 020 8684 6269
- Haran Bros............. 020 8686 2552
- Chennai dosa ......... 020 8665 9192
- Eelam Video........... 020 8664 8351
- Spice Land............. 020 8667 1700

**Lewisham**
- Chandra ................. 020 8333 8680
- Eelam Shop ........... 020 8690 6545
- Katpagam ............. 020 8694 8810
- AJ Video ................ 020 8691 8888
- Sivan Kovil ............ 020 8318 9844
- KRS ........................ 020 8297 9432
- Best Food ............. 020 8692 9811

**Eastham**
- Seelans .................. 020 8471 5733
- Sakthi Cash & Carry 020 8394 4560
- Murugan Temple..... 020 8478 8433
- Station Super Store 020 8503 4711
- Best Food ............. 020 8552 9578
- Akilan Enterprise .... 020 8548 0033

**Ilford**
- Vinnayagar Kovil..... 020 8911 8934
- Nathan ................... 020 8514 1744
- Angels ................... 020 8553 0490
- Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
- New Kannan Stores 020 8884 4979
- Sayas ..................... 020 8805 9529
- Nagapoosani Temple 020 8884 3333

**Walthamstow**
- Vinayagar Kovil....... 020 8527 3819
- Kumarans ............. 020 7609 1912
- Prabas .................. 020 8509 3322

**Harrow**
- Tsk food & Wine ..... 020 7622 4258
- Eelavan ................. 020 8863 6160
- Prabhas ................ 020 8866 0977
- South Harrow F&W. 020 8423 6321
- Best foods.............. 020 8423 9933
- Sambal Express...... 020 8799 7171

**Wembley**
- Malar Super Market 020 8795 5797
- Ganapathy C & C..... 020 8795 4627
- Best foods.............. 020 8900 0100
- Vahizan Disc .......... 020 8795 0648

**Ealing**
- Amman kovil........... 020 8810 0835

**Greenford**
- Ambiha .................. 020 8813 0967

**Coventry**
- Eellakanthan Temple...02476663554

**South hall**
- Thamilini C & C....... 020 8606 9900
- Duvaraka C & C ..... 020 8813 9126
- Palm Palace Restaurant 020 8574 9209
- Spicy Palace Restaurant 020 8574 4087
- Luxmys C & C ......... 020 8571 4599
- Tamilan C & C......... 020 8561 8174
- Lady Margret .......... 020 8571 4434

# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

*ஆசிரியர் குழு:*

*பிரித்தானியா*
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

*கனடா*
**தயா - அரவிந்தன் - சிந்து**

*பொறுப்பாசிரியர்*
**- கோபி -**

*மக்கள் தொடர்பு*
**சோபனா அருந்தவச்செல்வம்**

*விளம்பரம்*
**சோபனா - அஜந்தா**

*அச்சு*
**தர்சினி (கனடா) - சுகன்யா**

*வடிவமைப்பு*
**மயூ - யுகன்**

*முகப்பு வடிவமைப்பு*
**seven zero graphics**

*விளம்பர வடிவமைப்பு*
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

*தமிழ் எழுத்துரு உதவி*
**சுரதா யாழ்வாணன்**

*நிதி – நிர்வாகம்*
**சோபனா அருந்தவச்செல்வம்**

*வழங்கல்*
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**

**உங்கள் தொடர்புகட்கு:**

*தொலைபேசி* (Tel)
**லண்டன்** 020 7043 4310
**கனடா** 416 613 2850

*தொலைநகல்* **(Fax)**
**லண்டன்** 020 7043 4312
**கனடா** 416 438 7855

*ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:*

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

*மின்னஞ்சல்:*
**info@orupaper.com**
*இணையம்:*
**www.orupaper.com**


*'**Oru Paper**' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# 'நல்லிணக்க' நாடகத்தை நிராகரிக்குமாறு, சர்வதேசத்திற்கு அழைப்பு விடுக்கிறது பிரித்தானியத் தமிழர் பேரவை

தென்னாபிரிக்க அரசாங்கத்தின் அனுசரணையுடன் சிறிலங்கா அரசாங்கத்தினால் ஏற்படுத்தபடவிருக்கும் உண்மையை கண்டறிதலும் மற்றும் நல்லிணக்கத்திறகான ஆணைக்குழவினை நிராகரிக்குமாறு பிரித்தானிய தமிழர் பேரவை அறிக்கை மூலம் சர்வதேச சமூகத்தைக் கேட்டிருக்கிறது.

"நல்லிணக்கத்திறகான ஆணைக்குழவினை ஏற்படுத்த தயாராகவிருப்பதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்திருப்பது சர்வதேசத்தை ஏமாற்றும் நடவடிக்கை" என அருட்தந்தை இமானுவல் அடிகளாரின் உலகத்தமிழர் பேரவையினால் வெளியிட்டப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகத் தமிழர்பேரவையானது சிறிலங்காவின் தென்பகுதியிலுள்ள அரசியல் மற்றும் அரசியலற்ற நிறுவனங்களுடனுன் தொடர்ந்து செயற்படவுள்ளதாக குறிப்பிட்டிருக்கும் மேற்படி அமைப்பின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன், சர்வதேச சுயாதீன விசாரணையை நடாத்த வேண்டும் என்ற தமது கோரிக்கைக்கு அனைத்துலக சமூகம் ஆதரவளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் பிரித்தானிய தமிழர் பேரவை பேரவை வெளியிட்டிருக்கும் அறிக்கையினை இங்கு தருகிறோம்.

"இலங்கையில் போர் முடிவுற்று நான்கரை யாண்டுகள் தாண்டியுள்ள போதிலும் இன்னமும் 146,679 மக்களின் உண்மை நிலை பற்றி எவ்வித நம்பகத்தன்மையுள்ள விபரங்கள் வெளிவரவில்லை. போர்க் காலத்தில் இலங்கையரசின் நடவடிக்கைகள் பற்றிய ஒரு சுயாதீனமான சர்வதேச விசாரணை அவசியம் என்பதை வலியுறுத்தும் எண்ணிலடங்கா ஆதாரங்கள் வெளிவந்துள்ளது. இருப்பினும் இது தொடர்பாக சர்வதேச சமூகம் விடும் அனைத்து அழைப்புக்களையும் இதுவரை இலங்கையரசு நிராகரித்த வண்ணமே இருந்து வந்திருக்கிறது.

ஆனால், தற்சமயம் சர்வதேச அழுத்தங்கள் அதிகமாகிக் கொண்டிருப்பதனால், இலங்கையரசு சில தந்திர நாடகங்களை மேடையேற்ற முனைகிறது. அதன் ஒரு கட்டமாக, அண்மையில் தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (Truth and Reconciliation Commission ) உதவியை நாடியுள்ளது.

தமிழ் தேசியப் பிரச்சனையின் நதி மூலத்தை அலசி, அதன் காரணங்களை ஆராய்ந்து, தாம் இழைத்த கொடுமைகளுக்கு பொறுப்பேற்பதை தவிர்த்து, சர்வதேசத்தின் கவனத்தை திசை திருப்ப இலங்கையரசு மேற்கொள்ளும் இவ்வகையான முய்ற்சிகளை பிரித்தானியத் தமிழர் பேரவை வன்மையாக கண்டிக்கிறது.

போலியான ஆணைக்குழுக்களுக்கு பெயர் பெற்ற நாடான இலங்கையில், கடந்த 50 வருடங்களில், எந்தவொரு விசாரணைக் குழுவுமே, அர்த்தமுள்ள தீர்ப்பெதனையும் வழங்கவில்லை. இலங்கையின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவென்பது, தமிழருக்கெதிரான தனது திட்டமிட்ட இனவழிப்பை சர்வதேசத்தின் கண்களிலிருந்து மறைக்கும் ஒரு திரைச் சீலையாகவே பயன்படும் என்பதில் சந்தேகமில்லை.

தனது அரசாங்கத்தை ஐ.நாவின் மனித உரிமை சபையெடுக்கக் கூடிய தீர்மானங்களிலிருந்து காப்பற்றவும், போர்க்கால குற்றங்களைப் பற்றிய சுயாதீன சர்வதேச விசாரணையை தவிர்ப்பதற்காகவுமே இலங்கை இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு என்ற புதியதோர் சித்தாந்தை முன் வைக்கிறது.

தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் முடிவிற்கு வராத நிலையில், நல்லிணக்கம் காண்பதோ, அமைதியை கட்டியெழுப்புவதென்பதோ முடியாத காரியம். தென்னாப்ரிக்க போலன்றி, போர் முடிவுற்ற பின்னாலும் இலங்கையில் முரண்பாடுகள் இன்னும் கடுமையாகி உள்ளது. இருதரப்பு, ஆயுத முரண்பாடு 2009இல் முடிவிற்கு வந்த போதும், தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான மூல காரணிகள் எதுவும் களையப்படவில்லை. போர் முடிவுற்ற நிலையில் இலங்கையில் இன முனைவாக்கம் (Ethnic polarization) மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது,

தமிழர் தாயகத்தில் சிங்கள இராணுவம் தொடரும் இனவழிப்பு தாக்குதல்கள், சிங்கள தேசம் தொடரும் தமிழ் தேச ஆக்கிரமிப்பு ஆகியவை இன முனைவாக்கத்திற்கு முக்கிய காரணங்களாக அமைகிறது. துரித கதியில் நடைபெறும், கொலைகள், ஆட்கடத்தல்கள், கற்பழிப்புக்கள், கட்டாய பிறப்புக் கட்டுப்பாடு மற்றும் கருக்கழைப்புகள், தமிழ் பள்ளிகள் அழித்தல், தமிழ் நிலங்களை ஆக்கிரமித்தல் போன்றவை சர்வதேச சமூகத்தால் உடனடியாக கவனிக்கப்பட வேண்டியவை. தமிழர் தாயகங்களில் இனப்படுகொலை செயல்களை தொடர்ந்த வண்ணம் இருக்கும் பொது, இனங்களுக்குள் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

ஆட்சி மாற்றம் ஒன்றை கொண்டுவருவதன் மூலம் இலங்கையில் இனங்களுக்குள் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என்ற ஒரு சிந்தனை சர்வதேசத்திடம் இருக்கிறது. இலங்கையின், அடிப்படை அரசியல் கட்டமைப்புகளும், அரசியல் சாசனமுமே, இந்த முரண்பாடுக்களுக்கு மூல காரணம். ஆட்சி மாற்றம் ஒன்றை மட்டும் வைத்து இலங்கைத் தீவினில் அமைதியையோ நல்லிணக்கத்தையோ உருவாக்க முடியாது.

தமிழ் மக்களது ஜனநாயக விருப்புகளையும், அவர்கள் வேண்டும் சுய நிர்ணய உரிமையையும் தொடர்ந்து சிங்கள தேசம் நிராகரித்துக் கொண்டிருப்பதே, இலங்கையிலுள்ள இன முரண்பாட்டிற்கு மூல காரணம். தமிழ் மக்களது இந்த அரசியல் அபிலாசைகள் தாமதமின்றி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். தமிழ் தேசத்தின் மீதான சிங்கள தேசத்தின் ஆதிக்கம் முடிவடையும் போது தான், இரு இனங்களுக்கிடையே நல்லிணக்கம் உருவாகும்.

நீதி மற்றும் பொறுப்பேற்கும் தன்மை ஆகியவை எந்தவொரு, குறிப்பாக, இனவழிப்பு பரிணாமங்களைக் கொண்ட ஒரு முரண்பாட்டுக்கான தீர்விற்கு முக்கியமானவை. ஆதலினால், இலங்கையரசு முன்வைக்கும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிராகரிக்கக் கோரியும், சர்வதேச நீதிமன்றம் ஒன்றையமைத்து, போரில் பங்கு பற்றிய அனைத்து தரப்பினர் மேற்கொண்ட, போர் குற்றங்கள், மனித குலத்திற்கெதிரான குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்கள், ஆகிவற்றை தாமதமின்றி விசாரிக்குமாறு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக்கான ஆணைக்குழுவை பிரித்தானியத் தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது.'

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## எதையும் வாங்கும் செல்வம்

சிந்திப்பதற்கு செல்வத்தைவிட வேறு என்ன உள்ளது? அநேகருக்கு செல்வம்? என்றால் பணம். அதுவே பலம். நாம் ஒவ்வொருவரும் செல்வத்தைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டு இருக்கின்றோம். செல்வத்தால் நாங்கள் எல்லாவற்றையுமே வாங்கலாம். ஏன் மதத் துறவிகள், போதகர்கள்கூட ஒருவிதத்தில்செல்வத்தைப் பற்றித்தான் சிந்திக்கின்றார்கள். அவர்கள் அதை அருட் செல்வம் நன்நெறி, சொர்க்கம் என்று அழைக்கிறார்கள். நன்நெறியின் மூலம் சொர்க்கத்தை அடையலாம் என நினைக்கிறார்கள்.

ஒரு மனிதன் நிகழ் காலத்தில் வாழ ஆரம்பிக்கும் போது மட்டும்தான் அவன் பணம்பற்றி சிந்திக்காமல் இருக்க முடியும். பணம் என்பது எதிர்காலம். பணம் என்பது எதிர்காலத்தின் பாதுகாப்பு. எதிர் காலத்திற்கான உத்தரவாதம். எங்களது வங்கிக் கணக்கில் நிறைய பணம் இருந்தால் எங்களது எதிர்காலம் பாதுகாப்புடையதாக இருக்கும். அதேபோல் துறவிகள் போதகர்கள் போதனைகளின்படி நல்லொழுக்கம் உள்ளவனாக இருந்தால் இறப்பிற்கு பின்னரும் எங்களது வாழ்க்கை பாதுகாப்பானதாக இருக்கும்.

இந்த உலகம் முழுவதும் பணத்தைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டு இருக்கிறது. அரசியல் அதிகாரத்தைப்பற்றி சிந்திப்பதுகூட ஒருவகையில் பணத்தைப் பற்றி சிந்திப்பதற்கு சமனாகும். ஏனெனில் பணம் என்பது அதிகாரத்தின் அடையாளம். ஆகவே நாங்கள் பணத்தை மேலும் மேலும் சேர்த்துக்கொண்டு இருக்கின்றோம். இன்னும் சேர்க்க வேண்டும் என்ற ஆசை ஒருபோதும் எங்களை விட்டு போகாது. அதன் தாகம் முடிவில்லாதது. ஆகையால் ஏதாவது வழியில் பணத்தைப் பற்றித்தான் ஒவ்வொருவரும் சிந்திக்கிறார்கள்.

மேலும் ஒவ்வொருவரும் அதிகாரத்திற்காக ஏங்குகின்றோம். ஏனெனில் நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்குள்ளே வெற்று மனிதர்களாக உள்ளோம். அந்த வெறுமையை எப்படியாவது எதைக்கொண்டாவது நிரப்பப் பார்க்கின்றோம். அது பணமாக இருக்கலாம், அதிகாரமாக இருக்கலாம் அல்லது புகழாக இருக்கலாம். பண்பு நல் ஒழுக்கம் ஆகியவற்றால் வரும் மதிப்பாகக்கூட இருக்கலாம். ஏதாவது ஒன்று மட்டும் போதும். அதன்மூலம் எங்களுக்குள் இருக்கும் வெற்றிடத்தை நிரப்ப விரும்புகின்றோம்.

சிந்தனையில் பணம் ஒன்றுதான் தொடர்ந்து இருப்பது எங்களுக்கு மட்டும் உள்ள தனி இயல்பு அல்ல. பொதுவான ஒன்றுதான். நாங்களும் எல்லோரையும்போல் சிறிது அறிவு வேறுபாடு உள்ளவர்கள்தான். இந்த அறிவு வேறுபாட்டை விட்டு வெளியே வந்து எங்கள் முன் இருக்கும் நிகழ் காலத்தில் வாழவும் பழகி எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பதையும் விட்டுவிட்டால், பணத்தின் கவர்ச்சி குறையும் அல்லது கவர்சியையே இழந்துவிடும்.

நாம் எதிர்காலத்தை என்று எண்ணி வாழ்வதால் பணம் மிகவும் முக்கியமான பொருளாகி விட்டது. மேலும் நாம் நலமாகவும் வாழ்வதில்லை. மற்றையவர்களைப்போல் வாழப் பார்க்கிறோம். அதனாற்றான் பணம் மிகவும் முக்கியமானதாகிவிட்டது. மற்றையவர்கள் முன்னேற்றத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதால் எங்களிடம் திருப்தி அளிப்பவையாக இருந்தவை எல்லாம் திருப்தி அற்றவையாக மாறிவிடுகிறது. இது எங்கள் மனதைக் குழப்புகிறது. தன்முனைப்பை தாக்குகிறது. உடனே நாம் அதிக பணம் அடையவேண்டுமென்று எண்ணுகிறோம். யாராவது எதையாவது செய்தால் எங்களின் 'நான்' என்னும் தன்முனைப்பு தாக்கம் அடைகிறது.

ஆகவே பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்தலை விட்டு விட்டால் எங்கள் வாழ்க்கை சீரானதாகிவிடும். வாழ்வை முழுமையாக அனுபவிக்கலாம். எவன் வாழ்வை நன்றாக அனுபவிக்கின்றானோ அவனுக்கு பணம் சேர்த்து வைக்கும் ஆசை இருக்காது. காரணம் வாழ்வின் உண்மையான விடயங்கள் எல்லாம் விலை கொடுத்து வாங்க முடியாதவை என்பதை அவன் அறிந்துகொள்வான்.

**நாங்கள் ஒவ்வொரு வரும் எங்களுக்குள்ளே வெற்று மனிதர்களாக உள்ளோம். அது பணமாக இருக்கலாம், அதிகாரமாக இருக்கலாம் அல்லது புகழாக இருக்கலாம். பண்பு நல் ஒழுக்கம் ஆகியவற்றால் வரும் மதிப்பாகக்கூட இருக்கலாம்.**

இயற்கையும் இயற்கைத் தன்மையும் எப்படி என்று புரிந்து கொண்டால் அல்லது இயற்கைத் தன்மைக்கு ஒப்ப வாழ்வது என்று தெரிந்து கொண்டால் அதன் பின்பு பணத்தின் மீது நாம் இந்த அளவுக்கு ஆசை கொள்ள மாட்டோம். பணத்தைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்கும் அளவிற்கு நாம் வாழ்வின் தார்ப்பரியத்தை மறந்து விட்டதாற்தான் பணத்தின்மீது அதிக ஆசை எழுந்துள்ளது. பணத்தைப் பற்றி மட்டுமே பேசும் அளவிற்கு எமது வாழ்வு ஒன்றுமில்லாததாக மாறி விட்டது. காலம் காலமாக அப்படித்தான் சொல்லித் தந்தார்கள். அது மாறவே இல்லை.

அதற்காக பணத்தைத் தேடக்கூடாது என்ற சிந்தனை வேண்டாம். நாங்கள் வாழ்க்கையை மகிழ்சியாகக் கொண்டாடும்போது, பணத்தின் மீது உள்ள அதீத ஆசை தானாகவே மறைந்து போகும்.

*- மனோகரன்*

# பூர்வீக நிலமெங்கும் மனிதப்புதைகுழிகள்!









மன்னார் மாந்தைப் பகுதியில் மனிதப் புதைகுழிகள் என்கிற செய்தி, ஊடகங்களை நிரப்பிக்கொண்டிருக்கின்றன.

தோண்டுதல் இடைநிறுத்தப்பட்டு, மீண்டும் ஆரம்பித்தபோது சிறுமி ஒருவரின் உடல் எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்களின் உடல்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல், நீதி விசாரணைக்கு அகப்படாமல் புதைக்கப்பட்டால், அதனை மனித குலத்திற்கு எதிரான குற்றம் என்று சர்வதேச நீதி நியமங்கள் கூறும். இது குறிப்பிட்ட இனத்திற்கு எதிராக திட்டமிட்ட வகையில் செய்யப்பட்டால், இனவழிப்பு என்று அர்த்தப்படும்.

**போர் நடைபெற்ற பூமியில் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவது புதிய விடயமல்ல.. இறுதிப்போர் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இன்னமும் எத்தனை புதைகுழிகள் மறைந்து கிடக்குமென்பதை, அதனைத் தோண்டியவர்களைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது.**

மாவிலாற்றில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை இனவழிப்பின் சாட்சியங்கள் புதைக்கப் படிருக்கின்றன. சனல்4 தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட இளம் யுவதிகள் கூட்டம், எங்கே என்று தெரியவில்லை.

அதைச் சொல்வதற்கு, படிப்பாளிகளும் (scholars), அறச்சீற்றக் கவசம் அணிந்தவர்களும் சங்கோஜப்படுகிறார்கள்.

போர் நடைபெற்ற பூமியில் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவது புதிய விடயமல்ல.. இறுதிப்போர் நிகழ்ந்த முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இன்னமும் எத்தனை புதைகுழிகள் மறைந்து கிடக்குமென்பதை, அதனைத் தோண்டியவர்களைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது.

இருப்பினும், கூட்டுப்படுகொலைகள் நிகழ்ந்திருக்கக்கூடிய நிகழ்தகவு அதிகம் இருப்பதாகவே, கண்டெடுக்கப்படும் வயது வேறுபாடற்ற, கைகள் கட்டப்பட்ட உடல் எச்சங்கள் புலப்படுத்துகின்றன.

மாவிலாற்றில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை இனவழிப்பின் சாட்சியங்கள் புதைக்கப் படிருக்கின்றன. சனல்4 தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட இளம் யுவதிகள் கூட்டம், எங்கே என்று தெரியவில்லை.

இதற்கான விசாரணையை நிலைமாற்றுக் கால நீதிப் பொறிமுறை ஒன்றின் ஊடாக முன்னெடுத்து, தென்னாபிரிக்கா போல, இன நல்லிணக்கத்தை உருவாக்கிவிடலாமென்று சிலர் எண்ணலாம். இலங்கை அதிபரை நெல்சன் மண்டேலா போன்று சித்தரிக்க முயலலாம். ஆனால் அரசியல் யதார்த்தம் இதற்குப் பொருத்தமாக இங்கு இல்லை என்கின்ற உண்மையை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

நடந்தது மனிதாபிமான யுத்தம் என்றும், ஒரு பொது மகனும் கொல்லப்படவில்லை என்று இந்த அரசு முயலுக்கு மூன்று கால் கதை பேசும் போது, நல்லிணக்கத்தை எந்தக் குழியில் தேட முடியும்?.

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்களின் புதைக்கப்பட்ட உடலங்களை பல தடவைகள் தோண்டி எடுத்து ஆய்வு செய்தும் இன்னமும் நீதி கிட்டவில்லை.

சன்சொனிக் கமிஷன் பற்றி அதிகமாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. இந்த ஆணைக்குழுக்களைப்பார்த்து, இலங்கையில் ஜனநாயகம் உயிர் வாழ்கின்றது என்று பெருமை பேசிய நாடுகளும் உண்டு. LLRC ஐ பாராட்டியபடியே பலர் அரசியல் செய்கிறார்கள்.

பாதுகாப்புப் படையினரால் இந்த அழிவுகள் நிகழ்த்தப்பட்டன என்கிற குற்றச்சாட்டு எழும் போது, அரச இயந்திரத்தின் முக்கிய அங்கம் என்ற வகையிலும், அதியுச்ச அதிகாரத்தைக் கொண்ட சனாதிபதியின் கீழுள்ள பாதுகாப்பு அமைச்சின் முப்படை என்ற வகையிலும், அதற்கான முழுப் பொறுப்பினை அதிபரே ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அரசியலுக்கான அறம். அது இலங்கையில் இருக்கிறதாவென்று இருள்மிகுந்த மறைவிடங்களில்தான் தேடிப்பார்க்க வேண்டும்.

நாங்களும் சுயாதீன விசாரணையை மேற்கொள்ள மாட்டோம், நீங்களும் அதுபற்றி பேச வேண்டிய அவசியமில்லை, இறைமை மிக்க நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட உங்களுக்கென்ன உரிமை இருக்கிறதென, கேள்விக் கணைகளை தொடுத்துக்கொண்டிருக்கிறது இலங்கை அரசு.

மடியில் கனம் இல்லையென்றால் வழியில் பயமெதற்கு என்கிற பழமொழியை நீதிய மைச்சர் ஹக்கீம் அவர்கள், அரச தலைவருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

போப்பாண்டவரைச் சந்திப்பதாலும், நெல்சன் மண்டேலாவின் வாரிசுகளை வைத்து உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக் குழுக்களை அமைப்பதாலும், பாலஸ்தீன அதிபர் முகம்மது அப்பாசின் ஆதரவினைப் பெறுவதாலும், எதுவும் மாறிவிடப் போவதில்லை.

## அரசியல் பார்வை

**இதயச்சந்திரன்**

இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்டுவரும் ஆதிக்கப்போட்டியில் சிக்குண்டு போகாமலிருக்க இதுவரை உதவிய தந்திரோபாயங்கள், இனிமேலும் பலனளிக்கப் போவதில்லை என்பதைப் புரிந்து கொண்டதால், சர்வதேச அரங்கில் மேற்குலகிற்கு எதிரான சக்திகளுடன் தன்னை அடையாளப் படுத்தும் நிலைப்பாட்டினை மகிந்த ராஜபக்ச எடுக்க முயல்கிறார்.

அதேவேளை, தூதரக அதிகாரி தேவயானியின் விவகாரத்தால், அமெரிக்க- இந்திய இராஜதந்திர உறவு நிலை சீர்குலைந்து சிதைந்துவிட வேண்டுமென்கிற நப்பாசையும் இலங்கை அரசிற்கு உண்டு.

நாடாளுமன்ற தேர்தல் காலமாதலால், தேவயானியின் பிரச்சினையை வைத்து தம்மை தேச பக்தர்களாகக் காட்டிக்கொள்ள காங்கிரஸ் அரசு முயற்சிப்பதாகவும் ஒரு விமர்சனம் உண்டு.

ஆகவே, இந்தியாவில் ஆட்சி மாறமுன், தற்போதைய ஆட்சியாளரின் ஆதரவுடன், மார்ச் ஜெனீவா தீர்மானத்தை நீர்த்துப்போக வைக்க வேண்டுமென இலங்கை அரசு அவசரப்படுகிறது.

பேச்சளவில், சில உயர்நிலை அதிகாரிகளாலும், இராஜதந்திரிகளாலும் உச்சரிக்கப்படும் 'சுயாதீன சர்வதேச விசாரணை' என்பது, வருகிற மார்ச்சில் ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் முன்வைக்கப்படலாம் என்கிற அச்சம் அரச உயர் மட்டத்தில் ஏற்பட்டுவிட்டது போல் தெரிகிறது.

அனைத்துலகின் ஆதரவினைத் திரட்ட, இராஜ கீரியும், அதன் படைபரிவாரங்களும் எட்டுத்திசைகளிலும் பயணித்துக்கொண்டிருப்பதை காண்கிறோம்.

**மாவிலாற்றில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை இன வழிப்பின் சாட்சியங்கள் புதைக்கப் படிருக்கின்றன. சனல் 4 தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட இளம் யுவதிகள் கூட்டம், எங்கே என்று தெரியவில்லை.**

மறுபுறமாக, ஒரு தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை நிராகரிக்கும் மார்சியவாதிகளும், ஒட்டுமொத்தப் புரட்சிக்கனவினைச் சுமந்தவாறு கோமா நிலையில் இருப்பவர்களும், புலி எதிர்ப்பு பிரசங்கிகளும் , அதிகாரங்களைப் பகிர்ந்தால் நாடு உடைந்துவிடும் என்று சப்புக்கொட்டுபவர்களும், தம் பங்கிற்கு, தம்மாலான அரச ஆதரவு பரப்புரைகளை சர்வதேச மட்டத்தில் ஆரம்பித்துள்ளனர்.

**நடந்தது மனிதாபிமான யுத்தம் என்றும், ஒரு பொது மகனும் கொல்லப்படவில்லை என்று இந்த அரசு முயலுக்கு மூன்று கால் கதை பேசும் போது, நல்லிணக்கத்தை எந்தக் குழியில் தேட முடியும்?.**

தமிழர் தரப்பில் என்ன மாற்றங்கள் நிகழ்கிறது என்று பார்த்தால், எழுத்தாளர் தீபச்செல்வன் சொல்வது போல, 'அரசியல்இயக்கம்' ஒன்று உருவாகுவதற்கான எதுவித அறிகுறிகளும் தென்படவில்லை.

படிப்பாளிகள், படிப்பாளிகளோடு பேசுகிறார்கள். மக்கள் அதனை வேடிக்கை பார்க்கின்றார்கள். அவ்வளவுதான்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper



Most Trusted and Reliable Name in the Trade Since 1985



# Glen Carriers

Laksiri Seva

## Services We Offer;

- இலங்கை மற்றும் உலகின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக குறைந்த விலையில் பொதிகள் அனுப்பும் சேவை
- தனிப்பட்ட மற்றும் வர்த்தக சேவைகளும் உண்டு
- பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வீட்டுக்கு வீடு சேவை
- உங்கள் பொருட்களை நம்பிக்கையுடன் பாதுகாப்பாக உரிய நேரத்தில் அனுப்பி வைக்கவும் மேலும் 36 க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக நடாத்திச் செல்லப்படும் ஒரே ஒரு நிறுவனம் கிளென் கரியர்ஸ்

- Sea Freight and Air Freight
- Full Container (20ft and 40 ft)
- Pick-up and Delivery Services in UK and EU
- House Removals with FREE Survey

இலங்கையில் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமிடங்கள் — Laksri Seva Customs Bonded Warehouses

Collection from £ 10 within London *

Collection from your door point in any part of UK or Europe*

2 x Tea Carton for £ 19.50 *

| Colombo Warehouse | Eastern Province Warehouse |
|---|---|
| Laksiri Seva Pvt Ltd. | Laksiri Seva Pvt Ltd. |
| 66, New Nuge Road, | 26, Hmyl Lane, Main Street, |
| Peliyagoda, Colombo | Addappallam, Ninthavur. |
| +94 1129 177 29-31 | T: 0672 0510 50-51 |

* Conditions Apply

அழையுங்கள் : 020 8743 7353

Mon - Sat : 9:30am to 5:30pm
Sun: 10:30am to 2:00pm

Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ





# OM GURU SHAKTHI ASTROLOGICAL CENTRE

## GURUJI: KRISHNA SHASRI





இந்தியாவில் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவர்த்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சனை, வியாபார முன்னேற்றமின்மை, பில்லி சூனியம் மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலலும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்களால் குணப்படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங்களை உங்கள் கைநாடி மூலம் கண்டுபிடித்து போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்கு சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமே இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.

**21 LEE HIGH ROAD**
**LEWISHAM SE13 5LD**

Near: SIVAN TEMPLE, Opposite: KAVIAYA (SATHYAM) SUPER MARKET

**Tel: 07404567306**
**07506737606**

Open 7 Days a Week 9.30am to 8.00pm



# Shoptek .co.uk

A2 Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3HQ

## USED SHOP SHELVING

## NEW SHOP SHELVING









Suppliers of New and Used Shop Shelving
From our Cash & Carry Warehouse

Shoptek .co.uk Tel: 01455 221512
Email: info@shoptek.co.uk

# ஈழத்தமிழர் விவகாரம்: தென்னாபிரிக்காவின் இன்னொரு பக்கம்



## பரா பிரபா

***ஒரு பேப்பர்*** - இதழ் 207 இல் 'சர்வதேச விசாரணையைத் தடுக்க உதவும் தென்னாபிரிக்காவும், சில தமிழரமைப்புக்களும்' என்ற தலைப்பில் கோபி எழுதிய பத்தியின் தொடர்ச்சியாகவே இப்பத்தி அமைகிறது. சில தமிழர் அமைப்புக்களும், தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைவர்களும் தென்னாபிரிக்காவின் 'உண்மையைக் கண்டறிதலும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக் குழு' (TRC – Truth and Reconciliation Commission) தொடர்பாக தமிழ் மக்களை தவறாக வழிநடத்த முனைவதாகத் தெரிவதால், இது பற்றிய மேலதிக தகவல்களை எழுதுதல் இங்கு அவசியமாகின்றது.

ஆர்ஜன்ரீனா, சிலி, பெரு, சியராலியோன் மற்றும் பஹ்ரெயின் போன்ற நாடுகளில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட இவ்வாறான ஆணைக்குழுக்களின் மாதிரி தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வாக அமையாது என்பதற்கு சிலி தவிர ஏனைய நாடுகளில் இந்த ஆணைக் குழு உண்மைத்தன்மையை இழந்தமையே காரணமாகும். தென்னாபிரிக்காவின் ஆணைக் குழு பற்றி சர்வதேசமட்டத்தில் பெரிதாகப் பேசிக்கொண்டாலும், அதன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்திருந்தன. இவர்களில் தமிழர் பிரச்சனைக்காக அவ்வப் பொழுது குரல் கொடுக்கும் தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மனட் ருற்ருவும் (Desmond tutu) அடங்குகின்றார்.

சிறுபான்மை வெள்ளையின இனவெறி ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர் கறுப்பினத்தவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னரே இந்த ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. இதில் விடுதலைப் போராளிகளான ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் (ANC) புரிந்த மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்தி தண்டனை பெற்றுத் தருவோம் என தேசியக் கட்சி அச்சுறுத்தியதால் தேசிய கட்சி புரிந்த போர்க்குற்றங்களும் மறைக்கப்பட்டு, மறக்கப்பட்டு, 'மறப்போம், மன்னிப்போம்' என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டதே இந்த ஆணைக்குழு. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் ஆட்சி கையளிக்கப் படவுமில்லை, தீர்வு எட்டப்படவுமில்லை, தவிர இன அழிப்பை மேற்கொண்டவர்கள், மேற்கொண்டு வருபவர்களை தமிழ் மக்கள் மன்னிக்கவும் தயாராகவும் இல்லை. இது ஒரு காரணமே போதும் இந்த ஆணைக்குழுவைப் புறக்கணிப்பதற்கு. சரி அப்படியென்றால் சிறீலங்கா அரசாங்கம் ஏன் இதில் அக்கறை காட்டுகின்றது. தமிழ் தலைவர்கள் சிலர் ஏன் இது பற்றிப் பேசுகிறார்கள்.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு கொழும்பில் நடைபெற்றதும், அங்கு தென்னாபிரிக்க அரச அதிபர் ஜேக்கப் சூமா சென்றதன் பின்னணியில் தென்னாரிக்க ஆணைக்குழு பற்றிய பேச்சுக்கள் அடிபட ஆரம்பித்தன. இதன் முன்னேற்றமாக சிறீலங்கா அரச தரப்பில் ஒரு குழு இந்த மாதம் தென்னாபிரிக்கா சென்று குறித்த ஆணைக்குழுவை இலங்கையில் உருவாக்குவது பற்றி ஆராய இருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் சிறீலங்கா அரசாங்கம் மற்றொரு நாடகத்திற்குத் தயாராகிவிட்டது. கடந்த கூட்டத்தொடரின்போது வேண்டுமென்றே தமது ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடாது இழுத்தடித்த மகிந்த அரசாங்கம் மேடையேற்றும் மற்றொரு நாடகத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்போ, புலம்பெயர் தமிழர் அமைப்புக்களோ துணைபோக முடியாது. தவிர தமிழ் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட 'கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே தென்னாபிரிக்க முறைமையை தாம் நோக்குவதாகவும், ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதியாளர் சி.ஜி.வீரமந்திரி, அல்லது உடலகம தலைமையில் தமது ஆணைக்குழு நியமிக்கப்படும் எனவும், 'கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவில் அங்கம் வகித்த கலாநிதி றொஹான் பெரேரா, எச்.எம்.ஜி.எஸ்.பாலிஹகார போன்றவர்களும் இதில் உள்ளடங்குவதாக ஆளும் கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க கூறியிருக்கின்றார்.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள 25வது மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கொண்டுவரப் படவுள்ளதாக கருதப்படும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிரான பிரேரணையை கனடா, பிரித்தானியா போன்ற நாடுகள் முன்னின்று வரவேற்கும், அல்லது முன்மொழியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2012ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் இரண்டு தடவைகள் கொண்டு வரப்பட்ட சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிரான தீர்மானங்கள் தோற்றுப்போனதற்கு, இந்திய ஆதரவு நாடுகளும், அமெரிக்க எதிர்ப்பு நாடுகளும் காரணமாகின. பொது நலவாய மாநாட்டை இந்தியப் பிரதமர் புறக்கணித்திருந்தாலும், ஈழத்தமிழருக்கான தீர்வு, மற்றும் சிறீலங்கா அரசாங்கம் பற்றிய இந்தியாவின் கொள்கை என்பன புரியாத புதிராக இருந்து வருகின்றது. இவ்வாறான பிராந்திய பலப்போட்டியின் பின்புலத்தில் தென்னாபிரிக்க அரசாங்கம் களமிறக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும், மனித உரிமைகள் பேரவையில் தமக்கான எதிர்ப்பைக் குறைக்கும் என்றும் ஒரு கல்லில் குறி வைக்கின்றது சிறீலங்கா அரசாங்கம்.

2009 காலம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் பல நாடுகளில் இருந்து அங்கு பிரதிநிதிகள் வந்திருந்தனர். தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் தென்னாபிரிக்க அரசாங்கத்துடன் பல கட்ட சந்திப்புக்கள் இடம்பெற்றன. இவ்வாறு தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பில் நானும் கலந்துகொண்டிருந்தேன். இதன்போது வன்னியில் போர் உச்சக்கட்டத்தை அடைந்து கொண்டிருப்பதால், விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து அவசரமான கோரிக்கைகள் மக்கள் இழப்பைச் சுட்டிக்காட்டி முன்வைக்கப்பட்டன. ஒரு கட்டத்தில் கோபமடைந்த வெளிவிவகார அமைச்சர் கையை நீட்டி "நீங்கள் பேசிக் கொண்டிருப்பது தென்னாபிரிக்க அரசாங்கத்துடன், ஏ.என்.சியுடன் அல்ல" எனக் கூறினார். தம்மைப்போன்று விடுதலைப் போரில் ஈடுபட்டவர்கள் ஏ.என்.சி என்ற எண்ணத்தில் பேசிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆடிப்போனார்கள். இந்தத் தகவல் உடனடியாக வன்னிக்குப் பரிமாறப்பட்டது. தமக்காக ஐ.நாவில் தென்னாபிரிக்கா குரல்கொடுக்கும் என எண்ணியிருந்த விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்பு அன்றுடன் நொருங்கிப்போனது.

தேர்தலில் வெற்றிபெற்ற ஏ.என்.சி மீண்டும் ஜேக்கப் சூமா தலைமையில் ஆட்சியமைக்க இருக்கின்றது என்ற உறுதியான செய்தியுடன் தேர்தல் வெற்றிவிழா இடம்பெற்றது. ஜேக்கப் சூமாவும் கலந்துகொண்ட இந்த விழாவிற்கு நாமும் அழைக்கப்பட்டிருந்தோம். இந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை வெளியே தனியாக அழைத்துச் சென்ற ஏ.என்.சியின் பிரதான பதவியில் இருக்கம் ஒருவர், நீங்கள் எமது அரசாங்கத்தை அணுக முன்னர் இந்தியாவின் மனதை வெல்ல முயற்சி செய்யுங்கள் எனக்கூறினார். இந்தியாவை மீறி தம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதே யதார்த்தம் என அந்த முன்னாள் போராளி வெம்பினார்.

இதே காலப்பகுதியில் மற்றொரு சம்பவமும் இடம்பெற்றது. நானும் அவுஸ்திரேலிய ஊடகர் ஒருவரும் மறைந்த முன்னாள் துணை அமைச்சர் ராதாகிருஸ்ணா படையாச்சி (Radha krishna Padayachie), மற்றும் நெல்சன் மண்டேலிவிற்கு நெருக்கமாக இருந்த முன்னாள் போராளி சீசா இன்ஜிகிலானா (Sisa Njikelana) போன்றவர்களைச் சந்தித்து செவ்வி கண்டிருந்தோம். தமிழ் மக்களின் விடுதலைக்கும், தனியாட்சிக்கும் ஆதரவாக 'தமிழ்நெட்' இணையத்தில் வெளியிடப்பட்ட இச்செவ்வியால் கலவரம் அடைந்த தென்னாபிரிக்க அரசாங்கம், வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின்போது, அதன் பிரதிகளை மேசையில் போட்டு, இவ்வாறான செவ்வியில் தமது நட்பு நாடுகள் மத்தியில் பிரச்சினையை உருவாக்குவதாகவும், செவ்வியை வெளியிடுவது விடுதலைக்கான ஆதரவைத் தடுக்கும் என்ற கோணத்தில் பேசப்பட்டது. இதன்போது தற்பொழுது உலகத் தமிழர் பேரவையின் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவர் தென்னாபிரிக்காவில் இருந்த எம்மைத் தொடர்புகொண்டு ஏன் இந்தச் செவ்வியை வெளியிட்டீர்கள், தென்னாபிரிக்க அரசாங்கத்தின் மனம் கோணாமல் நடந்துகொள்ள வேண்டும் என அறிவுரை சொல்ல முயன்றார். நாங்கள் எதையோ சொல்லாததை எழுதி வெளியிட்ட பாணியில் பேச்சு நீண்டது. எங்களிடம் ஒலிப்பதிவுகள் இருந்ததால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு உச்சக் கட்டத்தில் இருந்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த வேண்டுகோளை ஏற்க மறுத்த, தமிழ் மக்களின் அழிவைத் தடுக்கத் தவறிய தென்னாபிரிக்க அரசாங்கம் இப்பொழுது 'மறக்கவும், மன்னிக்கவும்' உதவ முன்வந்துள்ளதன் உள்ளார்ந்த அர்த்தம் புரியவில்லை. இந்த இடத்தில் சிறீலங்கா அரசாங்கம் மீது போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என ஏ.என்.சி வெளியிட்ட அறிக்கையை, தென்னாபிரிக்க அரசாங்கம் வெளியிட்டதாக மகிழ்ந்த தமிழ் தலைவர்களும், தமிழ் ஊடகங்களும் விடுதலைப் போரை நடத்திய ஏ.என்.சி வேறு, தற்பொழுது பொருண்மிய, பிராந்திய நலனுடன் ஊழல் நிறைந்த ஆட்சி நடத்தும் தென்னாபிரிக்க அரசாங்கம் வேறு என்பதை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். போர் இடம்பெற்ற வேளையிலும், போரின் பின்னரும், போர்க்குற்றம் இழைக்கப்படவில்லை எனவும், மக்கள் உயிரிழப்பு எதுவும் இடம்பெறவில்லை என சிறீலங்கா அரசாங்கம் கூறி வருகின்றது.

இவ்வாறான சிறீலங்கா அரசாங்கத்துடன் இணைந்து தென்னாபிரிக்க அரசாங்கம் மேடையேற்றும் கால இழுத்தடிப்பு நாடகத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்போ, உலகத் தமிழர் பேரவை போன்ற அமைப்புக்களோ துணைபோக முடியாது. தமிழினம் மீதான இன வழிப்பை நிறுவ, நிறுத்த - சிறீலங்கா அரசாங்கம், மற்றும் அதன் படைகள் மீதான அனைத்துலக சுயாதீன போர்க்குற்ற விசாரணை அவசியம்.




## Tamil Speaking Personal Injury Lawyer

**Accident Claim | Vehicle Repair | Hire | Medical Treatment**

Your Claim will be dealt by *Raj Rajamohan* a *Tamil Speaking Personal Injury Lawyer* with 12 Years Experience in pursuing a wide variety of Personal Injury Claims. He has recovered over 15 million in compensation settlements for all his valued clients over the years.

*We deal with:* Whiplash Injury claims from Road Traffic Accidents, Car, Van, Motorcycle, Bicycle, Bus, Taxi Passenger, Accident at Work, Slip, Trip & Fall Injury (Public/Private Property or Road), Injury Caused by an Animal, Criminal Injury Claim, Fatal Accidents, Untraced & Uninsured Drivers claim and Others.

*We are authorised and regulated by the Solicitors Regulation Authority*

email: raj.claim@gmail.com / raj@notmyfaultlawyers.com

We'll make your life easier by:

- Speaking the same Language.
- Written advice provided in Tamil
- Treatement & Expert medical advice arranged.
- Vehicle Inspection and Replacement Vehicle.
- Get your maximum compensation for your injuries with no deductions.
- No Obligation free Advice on Telephone

We will pay you £1000 upfront upon accepting your claim




**NOT MY FAULT LAWYERS - Mobile : 0781 089 7754 - 4, Prince Albert Drive, Ascot, SL5 8AG**

# சின்னத் திரையிலும், விளையாட்டு சனலிலும் எம் உறவுகள் சிக்கித் தவிக்கின்றனவா ?




**சுகி**

*(ஒரு பேப்பருக்காக)*

ஒருசாரார் தொலைக்காட்சியா? எமக்கெங்கு நேரம் அதைப்பார்க்க, ஏதும் சிறப்பு நிகழ்ச்சி அல்லது செய்தி என்றால், நேரம் இல்லாமல், அரையும் குறையுமாக பார்க்கின்றோம். அல்லது அந்த சிறப்பு நிகழ்ச்சியை, பிறகு தேடி You Tube இலும், டேப்பண்ணியும் பார்க்கின்றோம். இந்த லட்சணத்தில் சின்னத்திரை வேற என்று அலப்பரிக்கின்றார்கள்.

இன்னும் ஒரு சாரார், 'ஐயோ இதுதான் எங்கட குடும்பத்தில் பெரிய தரித்திரம், விடிந்தால் பொழுதுபடுமட்டும் ஒன்றுமாறி ஒன்று என்று இந்த சின்னதிரையில், மனைவி பிள்ளை, மாமியார் மருமகள், தாய் தகப்பன் எனக்குடும்பமே மூழ்கிக் கிடக்கின்றது. இதனால் ஒவ்வொரு நாளும் சண்டைதான், என்று அலுத்துக் கொள்ளுபவர்களும் உண்டு. இதில் அதிக வித்தியாசம் இல்லாவிட்டாலும், பெண்களில் கூடிய பங்கினர் சின்னத்திரை பார்பதாகவும், ஆண்களில் அதிகம் பேர் விளையாட்டு சனல் பார்பதாகவும் தான் முறைப்பாடு.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், விளையாட்டு சனல்களை கண்வெட்டாது பார்ப்பவர்கள், அது ஆங்கிலத்தில் இருப்பதாலும் விதிமுறைகள், விளையாட்டு வீரர்களினதும், குழுக்களினதும் சரித்திரம் முழுக்க தெரிந்து வைத்திருப்பதாலும் தாங்கள் சின்னத்திரை பார்ப்பவர்களை விட உயர்ந்த ஒரு பொழுது போக்கில் காலத்தை கழிப்பதாக ஒரு நினைப்பு.

ஆனால் அவர்களின் மனைவிமார்களோ 'யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே', என்ற மாதிரி, அவர்களின் கணவர் வருவார் பின்னே அவர்களின் வயிறு வரும் முன்னே என்று ஒரு வேலையும், வீட்டிலோ, வீட்டுத் தோட்டத்திலோ செய்யாமல், காலை நீட்டி கதிரையில் படுத்துக்கொண்டு எம்பி எம்பி கைதட்டுவதில் என்ன பலன்' என்று அலுத்துக்கொள்கிறார்கள்.

சின்னத்திரை பார்ப்பவர்கள், அதைப்பார்த்து விட்டு, அதில் வரும் பாத்திரங்களின் பிரச்சனையோடு ஒன்றிப் போய், கண்ணீர் விட்டு அழுது, அடுத்து என்ன நடக்குமோ என்று மனச்சஞ்சலத்துக்கு உள்ளாகி, எப்போ அடுத்த ஒளிபரப்பு வரும் என்று எல்லா வேலைகளையும் அரக்கபரக்கவோ, அரைகுறையாவோ முடித்துவிட்டு வந்து தொலைக்காட்சியோடு ஒன்றிவிடுகிறார்கள். அம்மா பார்ப்பதால் வளர்ந்த பிள்ளைகளும் அதைப் பார்க்கப் பழகி விடுகிறார்கள்.

மொத்தத்தில் பொழுது போக்கு என்று பார்க்கும் போது, அது போகாத பொழுதை, மனதிற்கு பிடித்த ஒரு விடயத்தில் போக்குவதாக இருக்க வேண்டும். அதைவிடுத்து இல்லாத பொழுதை, வேறு மனஅழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்காக போக்க வெளிக்கிட்டு அதற்கு அடிமையாகிப் போவதாகவும், மேலதிக பிரச்சனைகளை கொண்டு வருவதாகவும் இருக்கக் கூடாது.

குடும்பம் என்றால் குடும்ப நேரம் என்று ஒன்று இருக்க வேண்டும். வேலையால் வந்தால் வேலைக் களைப்பு போல, வீட்டில் இருப்பவருக்கும் வீட்டு வேலை செய்த களைப்பு இருக்கும் ஒப்பீட்டு அளவில் வேலை அதிகம் இல்லாமல், அம்மா, மாமி என்று அணை துணையோடு இருப்பவர்களுக்கும், திறமைகளை வெளிக்கொணர இயலாத அல்லது வெளியில் போய் வேலை செய்ய வேண்டும் என்று விருப்பம் இருந்தும், பிள்ளைகளை தனித்துக் கவனிக்க வேண்டிய சூழ்நிலையினால், வீட்டுக்குள் அடைபட்டு கிடக்க வேண்டிய நிர்பந்தம் போன்றவற்றால் மனச்சோர்வும், இயலாமை உணர்வும் அவர்களையும் களைப்படையச் செய்யும். இதற்கு அவர்களைப் புரிந்து கொண்டு, செய்யும் வேலைகளில் சரியானவற்றைப் பாராட்டி, மற்றவர்களுக்கு முன்னாலும், தனிமையிலும் அவர்களின் திறமையை தட்டிக் கொடுத்தல். அது அவர்களின் மனச்சோர்வைப் போக்கும்.

அதைவிட்டு குறைகளை மட்டுமே 'சோறு ஏன் குழைந்துள்ளது', 'உடுப்பேன் அடுக்கவில்லை' 'கறிக்கு உப்பும் இல்லை உறைப்பும் இல்லை' என்று அடுக்கிக் கொண்டு போனால், இதற்கு over time இருந்தால் அதையும் செய்து விட்டு late ஆக வந்திருக்கலாமே என்றுதான் எண்ணத் தோன்றும்.

அத்தோடு பிடித்தமான பொழுது போக்கு நீந்துவது என்றால், நீந்த போகாதே. சைக்கிள் ஓடப்பிடிக்கும் என்றால், அது ஓட வேண்டாம். ஆங்கில வகுப்புக்கு வகுப்புக்கு போகட்டோ என்றால், அது எல்லாம் பிள்ளைகள் வளர படிக்கலாம், இப்ப வீட்டை ஒழுங்காக பாரும், அது காணும் என்று முற்றுப்புள்ளி. தனியாக ஒரு ஈ-மெயில், பேஸ்புக் என்றால், தனியத்தேவையில்லை, கேட்டால் என்னுடையதை குடும், எல்லாம் ஒன்று காணும். காலாற ஒருக்கால் நடப்போம் என்றால், இப்பத்தானே வெளியில் இருந்து வருகிறேன் அல்லது இன்றைக்கு நான் எல்லோருடனும் போன் கதைக்க போகிறன் என்று பதில்.

சரி சின்னதிரை பார்ப்பதை விட்டு அவர்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டால், வீட்டை இன்னம் கொஞ்சம் வடிவாக துப்பரவாக்கலாம், பிள்ளைகளுக்கு தமிழ் படிப்பிக்கலாம், கூட்டலாம், குப்பை அள்ளலாம் என்று வேலையைத் தான் சொல்கிறார்களே தவிர, அவர்களுக்கு இதை தவிர என்ன பொழுது போக்கு விருப்பம், என்ன செய்ய விருப்பம், என்ன படிக்க விருப்பம், கீறுவார்களா? எழுதுவார்களா? பின்னுவார்களா? பேசுவார்களா? நடிப்பார்களா? படிப்பிப்பார்களா? என்று அறியாமல், தாம் விரும்பும் வகையில் அவர்கள் பொழுது போக வேண்டும் என்கிறார்கள்.

**ஐயோ இதுதான் எங்கட குடும்பத்தில் பெரிய தரித்திரம், விடிந்தால் பொழுது படு மட்டும் ஒன்று மாறி ஒன்று என்று இந்த சின்னதிரையில், மனைவி பிள்ளை, மாமியார் மருமகள், தாய் தகப்பன் எனக்குடும்பமே மூழ்கிக் கிடக்கின்றது.**

அவர்களை கேட்டால், 'வீட்டில் இருந்து பார்க்கக் கூடியதொன்றாக உள்ளது என்று பார்க்கத் தொடங்கி இப்போ கதைப்புத்தகம் வாசிப்பது போல அடுத்தபக்கம் என்ன இருக்கிறது என ஆகிவிட்டது' என்கிறார்கள்.

Sun TV, Vijay TV, Puthu Yugam, Catain TV, Polimer TV, Mega TV, Zee TV, KTV, Jaya TV, GTV, Deepam, Raj TV என்று பல. ஒவ்வொன்றிலும் சின்னத்திரைகள் பல. விஜேய் டிவியை எடுத்துக் கொண்டால் தெய்வம் தந்த வீடு, என் வாழ்க்கை, இது காதலா, மகாபாரதம், நந்தவனம், Office, புது கவிதை, சரவணன் மீனாச்சி, சிவம், தாயுமானவன், உறவுகள் தொடர்கதை என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

மொத்தத்தில் 'நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ, தூங்கணாம் குருவிக்கு கூடு கட்டுதல் எளிது. சிலந்திக்கு வலை எளிது'. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் திறமையும், விருப்பும் உள்ளது. அதை அறிந்து அதையே விட்டுக்கொடுப்போடும், புரிந்துணர்வோடும், மனதைப் புண்படுத்தாமல், சுயநலம் பார்காது, குடும்ப நேரத்திற்கேற்ப செம்மைப் படுத்தி குற்றவுணர்வின்றி கழிக்கலாம்.



# NEED URGENT CASH?

UAE XCHANGE®
*Service is our Currency*

## GOLD LOANS

FROM
**2.75%**
TO
**3.99%**
PER MONTH*

*Terms & Conditions apply

World's trusted money transferrer




**Tel: 0203 078 7623 | www.uaeexchange.com/gbr**

**Birmingham:** 0121 515 5921 I **Croydon:** 0208 683 1010 I **Eastham:** 0208 503 4234 I **Forest Gate:** 0208 586 7716
**Ilford:** 0208 514 4237 I **Leicester:** 0116 268 8930 I **Manor Park:** 0208 911 0208 I **Soho Square:** 0207 478 0720
**Southall:** 0208 843 2332 I **Walthamstow:** 0203 233 0069 I **Wembley:** 0208 903 7884 I **Whitechapel:** 0207 655 4999
**Wolverhampton:** 0190 233 2793

# தமிழ்நாட்டு அரசியலில் கூடாத கூட்டணிகள்



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

இந்த மே மாதம் நடக்க விருக்கும் இந்தியப் பாராளமன்றத்தின் மக்களவைக்கான தேர்தலில் தமிழ்நாட்டில் வெறும் வெத்து வேட்டாக இருந்து கொண்டு சூப்பர் லீடர் போல் துள்ளுபவர் தெலுங்கரும் நடிகருமான விஜயகாந்த் ஆகும். தனது தலைமையில்தான் கூட்டணி அமைய வேண்டும் என்கிறார். விஜயகாந்துடன் கூட்டணி வைக்க திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரசு, பாரதிய ஜனதாக் கட்சி ஆகிய முன்னணிக் கட்சிகள் விருப்பம் கொண்டுள்ளன. இத்தனைக்கும் விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாக்கு வங்கி 9 மட்டுமே. விஜயகாந்தின் கட்சியுடன் கூட்டுச்சேர அதிக அக்கறை காட்டுபவர் கருணாநிதியே. ஆனால் வரவிருக்கும் தேர்தலில் யாரோடு யார் கூட்டுச் சேர விரும்புகிறார்கள் என்பதிலும் பார்க்க யாரோடு யார் சேர்வதை விரும்பவில்லை என்பதுதான் இப்போது அதிகம் செய்திகளில் அடிபடுகின்றது.

### ◆ தீண்டக் கூடாத கட்சிகள்

கூட்டுச் சேரக் கூடாத கட்சிகளின் பட்டியலில் காங்கிரசுக் கட்சி முதலாம் இடத்திலும் திமுக இரண்டாம் இடத்திலும் பாரதிய ஜனதாக் கட்சி மூன்றாம் இடத்திலும் இருக்கின்றன. திமுகவுடனும் காங்கிரசுடனும் இணைந்தால் தமிழின உணர்வாளர்களின் வாக்குகளையும் ஊழலுக்கு எதிரான கருத்துக் கொண்டவர்களின் வாக்குகளையும் இழக்க வேண்டியிருக்கும். பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தால் முற்போக்கு சிந்தனை கொண்டவர்களினதும் இசுலாமியர்களினதும் வாக்குகளை இழக்க வேண்டியிருக்கும். விஜயகாந்தின் கட்சி இருக்கும் கூட்டணியில் தனது பாட்டாளி மக்கள் கட்சி இருக்க மாட்டாது என்கிறார் மருத்துவர் ராமதாஸ். கூட்டுச் சேரமாட்டோம் என உறுதியுடன் நிற்கும் கட்சியாக ஜெயலலிதாவின் அண்ணா திமுக திகழ்கிறது. ஓரிரு தொகுதிகளைக் கொடுத்து ஒரு கூட்டணி அமைக்க ஜெயா நினைத்தார். அது சரிவரவில்லை.

### ◆ தனித்து விடப்பட்ட காங்கிரசுக் கட்சி

1967-ம் ஆண்டு தமிழ்நாட்டு ஆட்சிக் கதிரையில் இருந்து தள்ளிவிடப்பட்ட காங்கிரசுக் கட்சி மத்தியில் தனது ஆட்சி அதிகாரத்தால் திமுகவுடனும், அண்ணா திமுகவுடனும் மாறி மாறி கூட்டணி அமைத்து சில தொகுதிகளில் வெற்றி பெற்று வந்தது. இவ்விரு கட்சிகளும் மத்திய அரசில் சில அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்காக காங்கிரசுடன் போட்டி போட்டுக் கொண்டு கூட்டணி அமைத்தன. ஐக்கிய நாடுகள் சபைதான் கச்சதீவை இந்தியாவிடமிருந்து பிடுங்கி இலங்கைக்குக் கொடுத்தது, இலங்கையில் மாகாணசபைக்கு ஆளுனரை மாற்றும் அதிகாரம் உண்டு, கிழக்கு மாகாண முதல்வராக பிள்ளையான் என்னும் ஒரு தமிழர் இருக்கிறார், விடுதலைப் புலிகள் ஒரு போர் நிறுத்தத்திற்கு சம்மதிக்கவில்லை, இறுதிப் போரின் போது தமிழர்களைப் பாதுகாக்க நாம் கடும் முயற்ச்சி எடுத்தோம் இப்படிப்பட்ட பொய்களை தமிழ்நாட்டு காங்கிரசுத் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

### ◆ திசை மாறிய வைக்கோ ஐயா

நான்கு விழுக்காடு வாக்கு வங்கியைக் கொண்ட வைக்கோ ஐயாவின் மறுமலர்ச்சி திமுக பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டுச் சேர்கின்றது. கடைந்தெடுத்த படு பிற்போக்குவாதிகளும் தமிழின விரோதிகளுமான சுப்பிரமணிய சுவாமியும் சோ இராமசாமியும் இருக்கும் பாரதிய ஜனதாக் கட்சியுடன் இணைவதை நினைக்கவே அருவருப்பாக இருக்கிறது. பாரதிய ஜனதாக் கட்சி விஜயகாந்தின் கட்சிக்கு வாக்குகளைப் பிரித்து வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் வலு இருக்கிரது என நினைக்கிறது. இதனால் விஜயகாந்தின் கட்சி காங்கிரசுடன் இணையாமல் தம்முடன் இணைய வேண்டும் என பாரதிய ஜனதாக் கட்சி நினைக்கிறது. காங்கிரசுக் கட்சி திமுகவுடனும் விஜயகாந்துடனும் எப்படியாவது கூட்டணி அமைக்க வேண்டும் என நினைக்கிறது. காங்கிரசு, திமுக போன்ற பணக்காரக் கட்சிகளுடன் இணைவது கடன் தொல்லையில் தவிக்கும் விஜயகாந்திற்கு நன்மை பயக்கும் ஆனால் திமுகவுடன் இணைவதை விஜயகாந்தின் மனைவி விரும்பவில்லை. காங்கிரசு திமுகவுடனும் விஜயகாந்துடனும் கூட்டணி அமைக்காவிடில் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியாது.

### ◆ தமிழருவி சனியன்

முன்னாள் காங்கிரசுக் கட்சியின் தலைவரும் காந்திய மக்கள் இயக்கத்தின் தலைவருமான தமிழருவி மணியன் பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டணியாக இணைந்துள்ளார். சிறந்த பேச்சாளரும் ஓரளவு நேர்மையானவருமான மணியன் பிற்போக்குக் கும்பலுடன் இணைந்தது அவரது ஆதரவாளர்களை கடும் அதிருப்திக்கு உள்ளாக்கி உள்ளது. அவர் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமையிலான கூட்டணியில் வைக்கோவை இணைய வைத்தார். அதில் பாட்டாளி மக்கள் கட்சியையும் விஜயகாந்தின் கட்சியையும் புதிய தமிழகம் கட்சியையும் இணைக்க கடும் முயற்சி செய்கின்றார். தமிழ்நாட்டில் ஒரு விழுக்காடு வாக்கு வங்கியை மட்டும் கொண்ட பாரதிய ஜனதாக் கட்சிக்கு ஒரு வலுவான கூட்டணி அவசியம். பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்கள் மாறி மாறி விஜயகாந்தையும் அவர் மனைவி பிரேமலதாவையும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### ◆ வாக்குப் பிரிப்பு அரசியல்

2009-ம் ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரசும் திமுகவும் விஜயகாந்தை தனித்து எல்லா இடங்களிலும் போட்டியிட வைத்து தமக்கு எதிரான வாக்குகளை பிரிக்க வைத்தார்கள் எனப்படுகின்றது. இதனால் காங்கிரசு எதிர்பாராத வெற்றியைப் பெற்றது. பணபலமும் கடன் பளுவும் கூட்டணிகளையும் கூடாதவர்களையும் தீர்மானித்தது. இம்முறை தேர்தலில் விஜயகாந்த் தான் 15 தொகுதிகளில் வெற்றி பெறலாம் என நினைக்கிறார். 2014 மே மாதம் நடக்கவிருக்கும் தேர்தலில் தேசிய அளவில் பெரும் வாக்குப் பிரிக்கும் கட்சியாக அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி திகழவிருக்கிறது. தமிழ்நாடு உட்பட இருபது மாநிலங்களில் இந்தக் கட்சி போட்டி போடவிருக்கிறது. இந்தியாவில் அதிக தொகுதிகளைக் கொண்ட உத்தரப்பிரதேசத்தில் எல்லத் தொகுதிகளிலும் போட்டியிடவிருக்கிறது. அத்துடன் காங்கிரசுக் கட்சியின் முக்கிய தலைவர்கள் போட்டியிடும் எல்லாத் தொகுதிகளிலும் ஆம் ஆத்மி கட்சி போட்டியிடவிருக்கிறது. இது காங்கிரசுக் கட்சியின் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கும். இதனால் ஆம் ஆத்மி கட்சி காங்கிரசுக் கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு இணங்கச் செயற்படுகின்றதா என்ற ஐயம் கடுமையாக எழுந்துள்ளது.

### ◆ மோடி அலைமீது மோதல்

சமூக வலைத் தளங்களில் பெரும் செல்வாக்குச் செலுத்தி வந்த நரேந்திர மோடிக்கு ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் பெரும் சவாலாக அமைந்துள்ளார். இப்போது மோடியின் பெயரிலும் பார்க்க அரவிந்த் கெஜ்ரிவாலின் பெயர் சமூக வலைத் தளங்களில் அதிகம் அடிபடுகின்றது. ஆம் ஆத்மி கட்சி தமிழ்நாட்டிலும் போட்டியிடவிருக்கின்றது. தமிழ்நாட்டில் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதற்கு ஒரு தெலுங்கு நடிகர் அவசியம் என ஆம் ஆத்மியும் உணர்ந்துள்ளது போல் இருக்கின்றது. இதற்கு தெலுங்கரான நடிகர் விசால் அணுகப்பட்டுள்ளார். மோடி நல்லவர் என்று சொல்லி அவர் கட்சியுடன் கூட்டணி அமைக்க கருணாந்தி ஒரு தூண்டில் போட்டுப் பார்த்தார். ஆனால் திமுகவுடன் கூட்டுச் சேர முடியாது என பஜக தெரிவித்துவிட்டது.

### ◆ தனித்து நிற்கும் ஜெயலலிதா

2014 மே மாதம் நடக்க விருக்கும் இந்தியப் பாராளமன்றத்தின் மக்களவைக்கான தேர்தலில் எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற மாட்டாது அதனால் தான் ஒரு கூட்டணி அரசில் இந்தியாவின் தலைமை அமைச்சராக வரலாம் என நம்பியிருக்கும் ஜெயலலிதாவிற்கு தமிழ்நாட்டின் 39 தொகுதிகளிலும் புதுச்சேரியின் ஒரு தொகுதியிலும் தனது கட்சி வெற்றி பெற வேண்டும் என எதிர்ப்பார்க்கிறார். தனித்து நின்று வெற்றி பெறுவது சிரமம் என்பதால் வைக்கோவினதும் சீமானினதும் ஆதரவை அவர் வேண்டினார்.

**கூட்டுச் சேரக் கூடாத கட்சிகளின் பட்டியலில் காங்கிரசுக் கட்சி முதலாம் இடத்திலும் தி.மு.க. இரண்டாம் இடத்திலும் பாரதிய ஜனதாக் கட்சி மூன்றாம் இடத்திலும் இருக்கின்றன. தி.மு.க.வுடனும் காங்கிரசுடனும் இணைந்தால் தமிழின உணர்வாளர்களின் வாக்குகளையும் ஊழலுக்கு எதிரான கருத்துக் கொண்டவர்களின் வாக்குகளையும் இழக்க வேண்டியிருக்கும்.**

ஆனால் வைக்கோவிற்கு ஒரு தொகுதியை மட்டும் ஜெயா கொடுக்க முன்வந்தார். ஆனால் ஐந்து தொகுதி கொடுக்க முன்வந்த பாரதிய ஜனதாக் கட்சியுடன் வைக்கோ இணைந்து விட்டார். தமிழ்நாட்டிலேயே அதிக வாக்கு வங்கியான 26 விழுக்காடு வங்கியைக் கொண்ட ஜெயலலிதாவின் கட்சிக்கு 2011இல் நடந்த சட்ட சபைத் தேர்தலில் விஜயகாந்த் கட்சியுடன் கூட்டணி அமைத்ததால் 52 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது. ஆனால் அதன் பின்னர் விஜயகாந்தை பல விதங்களில் அவமானப் படுத்தினார் ஜெயலலிதா. ஜெயலலிதா தனது திமிரால் யாருடனும் கூட்டணி அமைக்க முடியாத நிலையை ஏற்படுத்தி விட்டார். 2014 மே மாதத்தில் நடைபெறவிருக்கும் தேர்தலில் கூட்டணி அமைப்பதில் உள்ள சிக்கல் போல இதற்கு முன்னர் எப்போதும் ஏற்பட்டதில்லை.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper


கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

# Transcend South African model, SL State and West's mechanisms in seeking justice





Fr Elil Rajan

The South African model that betrayed its people is now taken up by Colombo just to save war criminals. It is futile for Tamils to expect justice from any future government of SL State. Tamils also have to reconsider approaching their struggle once again through West's mechanisms of justice. The current TNA failed to combine moderate politics with the politics of struggle. Steering Tamil national polity for crumps can't be justified as 'diplomacy.' Tamil intellectuals have to think beyond the trap of 'Transitional Justice' and investigate potentialities of the concept Post-Transitional Justice, which is non-state, multi-sited, multi-actor and multi-referential, said Fr Elil Rajan, advocating Chile model, at a gathering in Batticaloa last week that remembered slain TNA parliamentarian Mr Joseph Pararajasingham.

Fr. Elil Rajan delivered the 2013 Memorial Address remembering Maamanithar Mr. Joseph Pararajasingham, who was assassinated by the agents of the genocidal state of Sri Lanka on the Christmas day of 2005, while attending services at the St Mary's co-cathedral in Batticaloa.

The meeting, organized by the Tamil National Peoples' Front (TNPF) was presided by Mr. Gajendrakumar Ponnambalam.Bishop of Batticaloa, Rt. Rev. Dr. Joseph Ponniah, took part at the memorial event held at the Hope Inn hotel on 29 December.

Jesuit priest Fr. Elil Rajan is a part-time lecturer at the Trincomalee campus of the Eastern University.

Following are excerpts of the address translated into English :

After Mu'l'livaaykkaal, the guns (of Tamils) have been silenced. But structural genocide is pushed forward in an accelerated way. Another Mu'l'livaaykkaal is being staged silently.

All external agendas, whether from the West of from the neighbouring country, are intent on hijacking the Tamil national polity in order to diffuse it.

The subtly programmed 'counterinsurgency' war waged against Tamils has to be viewed as a continuation of genocide.

If a nation has to come out of genocide, it is inevitable that it has to create a space for struggle. Such a struggle gains righteousness and acceptance when it becomes a people's struggle.

The Tamil National Alliance was formed by the efforts of Mr Sivaram to get rid of bi-polar polity. But the TNA of post-Mu'l'livaaykkaal, failing in bringing together moderate polity and the polity of struggle, is travelling on a self-seeking path of moderatism, which is sad as well as an insult to those who sacrificed their lives for the cause of Tamil nationalism. Steering the Tamil national polity for just crumps could never be justified as diplomacy.

Tamils have to take into account the hitches in approaching their struggle once again through the West's mechanisms of justice.

The Permanent Peoples' Tribunal in its latest session has accepted that the USA, UK and India were in complicity in the genocide.

The post-2009 situation in the island has to be investigated as a unique situation. It can't be compared with other post-war transition situations.

While the SL State is pushing forward a South African model 'truth and reconciliation commission', Tamil intellectuals are compelled to investigate and raise a historic question whether the model is suitable to the island or not.

States and governments are expected to follow transition models acceptable to the international law. There are several models brought out by different geographical, political and cultural situations.

The South African model is just one such. But there is a political background for why the SL government wants to follow the South African model. It wants to thrust a model that is based on 'pardon', with an intention to save its war criminals.

In post-apartheid South Africa, the National Party trapped the African National Congress into a situation to compromise, through insisting on punishment to war criminals of both sides. The very black politicians, who captured the government in the name of their people, abandoned the truth and the findings of the TRC commission. The people seeking justice became victims of the double exploitation polity. The South African model is the best example to question the validity of such commissions, whether any State machinery is ever prepared to accept the truth.

In the world history of the last decade, transitional justice was the most important requirement for peace. It will be a slanderous discourse if the genocide is reduced into mere human rights violations in the descriptions.

According to Cath Collins post-transitional justice has the following characteristics:

"Post-transitional justice activity, in the form of continued or renewed contestation over accountability of past HRVs, can observed in a number of of present day post-transitional settings in Latin America. Six characteristics of post-transitional justice distinguish it clearly from the transitional justice school of thought. Frist, where transitional justice is centrally concerned with attaining and preserving the minimum institutional requirements of formal democracy, post-transitional justice focuses of subsequent questions of the quality, reach, and perfectibility of that democracy. Second, post-transitional justice accordingly questions the comprehensiveness and sufficiency of initial transitional justice compromises, particularly the renunciation of prosecution over HRVs. Third, since most subsequent administrations have regarded official renunciations of prosecution as irrevocable, post-transitional justice has been largely non-state, driven by private actors operating both „above" and „below" the state. Fourth. When contrasted with state-driven transitional policy making, post-transitional justice is notably multi-sited, multi-actor, and multi-referential. A multiplicity of forms and sites can be used, depending of such actors as actor expertise, goals, resource access and perceptions of likely success. Fifth, this multiplication of potential forms, sites, and actors means that post-transitional justice initiatives come to be adopted in pursuit of a wide variety of possibly divergent aims. Sixth, post-transitional justice activity is empirically more likely than transitional justice policy making to have an "internationalized" character, encompassing norms and sites of contestation beyond the domestic sphere".

It is futile to expect that any future government of the State of Sri Lanka could deliver justice to Tamils. Therefore, we the affected people should form our own justice mechanism either within the space of the island or outside of the island, along with global partners. The best example for such a model is Chile in Latin America. The Chile model of Post-Transitional Justice could help to institute a neutral mechanism for justice and it could bring in many benefits to Tamils. The current times compel Tamil intellectuals to consider the model of Chile, Fr. Elil Rajan said.

### TamilNet published responses from Tamil activists for alternative politics in the island:

Whether transitional justice or post-transitional justice; whether the South African model or the Chile model, what the Eezham Tamils urgently need today is the arrest of the on-going structural genocide of their nation in the island, commented Tamil activists for alternative politics in the island.

The South African model pushed by genocidal Colombo is coupled with sealing and pocketization of Eezham Tamils in their own land, perhaps to suit the South African model of 'reconciliation.' This is engineered and blessed by all the powers that were in complicity in the genocidal war. To what extent the Chile model addresses the context; i.e., a national question of centuries of genocidal intent and an on-going genocide, is not clear, the activists said, adding that any model that was used in the transition of a country by keeping it as a country is useless to the context.

What the Eezham Tamils should demand, along with the people's power of Tamil Nadu, deploying all possible strategies, is a transitional State for them to come out of the genocide and to freely think of post-transitional models of justice. Perhaps they should evolve their own model to meet the requirements of their case that was made into 'unique' thanks to the international community of establishments, commented Tamil activists for alternative politics in the island, appreciating and adding to the address of Fr Elil Rajan.

*Courtesy: Tamil Net*




அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!!

- ✓ Accountancy & Auditing
- ✓ Business Start up Advice
- ✓ Business Plans & Cash Flow Forecasts
- ✓ Personal tax Affairs & Self Assesment
- ✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- ✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
- ✓ Company Formation
- ✓ Attending VAT & PAYE visits
- ✓ Tax Investigations
- ✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# Child Abuse at the Vavuniya Children's Home and the Lack of Prudent Action by the SL Government

Women's Action Network

In October 2013 Kalyana Tissa Thero of the Seth Sevana Lama Nivasa of Attambagaskanda, Vavuniya was arrested for sexually abusing a 9 year old child. The Buddhist monk was kept in remand custody and medical evidence confirmed the sexual abuse of the child on 12.10.2013. Subsequently the custody of the remaining 22 children of the children's home was taken by the National Child Protection Authority (NCPA) on 15.10.2013. Fearing that the remaining children may have also been sexually abused the Vavuniya magistrate requested the medical examination of the 22 children. Through the court order the suspect remained in custody. However on 31.12.2013 the suspected monk was granted a non-conditional bail on the basis that the Attorney General Department (AG), on the instructions of the NCPA has informed court that it has no objections for the suspect to be granted bail. The next hearing is to be on the 11th of February.

Most of the children at this home are victims of war. These children have been placed in this home to ensure their education, safety and care by family members who are unable to provide the same for these children. Some of these children have lost their fathers in the war, their mothers are daily wage laborers who work in jobs such as breaking stones and barely earn a living. These mothers placed their children hoping they would have a better chance in life through education and hoping for their care and protection. In such a context how far these children's rights and lives are being protected by the head of this home is a question. Even though the children in the Seth Sevana Lama Nivasa are Tamil, they have been enrolled in Kaatumankulam Sinhala school. Their right to learn their mother tongue, practice their religion and culture, the protection of their ethnic identity has been violated and they are being compelled to assimilate into a Sinhala Buddhist cultural and ethnic identiy. Upon receipt of complaint from the civil society and others an exhaustive investigation was carried out by Vavuniya NCPA child protection officer, probation officer, public health inspector and the police and they jointly submitted a report on 29.11.2010 to NCPA's head office. But due to NCPA's irresponsible investigation it has risked a group of young vulnerable children continue to suffer emotional and psychological abuses.

In Sri Lanka child protection and care services such as the NCPA, Task force on child protection are under the Ministry of Women and Children's Affairs. Each province and districts have officers who have been appointed for the care and protection of children. In the current incident the bail was granted due to the report given by the NCPA to the Attorney General. It raises serious concerns as to the evenhandedness of the NCPA in regards to children from minority communities. Because even though complaints in regards to the said Buddhist monk have been made to the NCPA since 2010 actions have only been taken to protect the offender rather than the children. It must be noted that only after the protests of the child protection officers in Vavuniya in regards to the inaction of the NCPA that the arrest was made.

> the protection of their ethnic identity has been violated and they are being compelled to assimilate into a Sinhala Buddhist cultural and ethnic identiy.

The NCPA's vision and mission claims to create a child friendly and protective environment for children and to ensure children are free from all forms of abuse. There is a hotline no: 1929 that provides 24 hour service in all three languages. The reluctance of such an institution to push for the arrest of this monk and the subsequent report recommending his release places the actions of the NCPA in doubt.

The Lawyer, K.S. Ratnavel who is representing the victim states that 'the AG should have taken further stringent action against the suspect. Requesting the bail of such a suspect places the independence of the AG's department in question. Instead of protecting victims they are protecting the suspect thus there is a conflict of interest both in the role played by the AG and the NCPA. The NCPA was created for the protection of children. However the NCPA has come out in support of the suspect in this case, it has failed to submit the relevant reports of the 22 children to the court and instead submitted the same to the AG. It has claimed to have completed investigations while investigations are still pending and has thereby misled the court. Consequently it has caused the possibility of the intimidation of witnesses through the release of the suspect. This reflects on the failure of public institutions in working for the people. Instilling the rule of law and justice is difficult when judicial institutions themselves undermine these goals."

Ensuring the protection of children especially those children who have lost their families due to war and undergone several rights abuses is the paramount obligation of governmental institutions, especially those created for the protection of children.



If children are to be refused protection due to their ethnicity and their abuse is to be ignored then the ability and intentions of such government organizations must be questioned.

The increase of violence against women and children has been on the rise since the end of the war. The recent abuse of a 4 year old child in Trincomalee by a person suspected to be a Navy officer who ran and hid in the navy camp reflects the impunity with which such abuses occur against women and children. **It is with deep regret that we note that the NCPA has failed to protect children and this trend can be seen across the country through various reports of child abuse and long drawn process in investigation and prosecution of offenders.**

*(Women's Action Network a network of 8 women's organisations based in the North and East )*


MASS GLOBAL SHIPPING
MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக...
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
* Packers * Movers * Shippers
We Offer the Best Services than all the Other in the trade!

உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

Special rates for Containers and Machinery
4 Collection Points :
Harrow
Watford
Knightsbridege
Croydon

T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30
FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions




Meera Arnold & Co
for all your accounting needs...
Accountancy
Auditing
pay roll
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333



ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!
SUBSCRIPTION FORM
Name:
Address :
Postcode:
Telephone:
மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும்,
G11, Lombard House,
PURLEY WAY, CROYDON,
CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# KIDS பேப்பர்

## Fact ... Fact... Fact!

### Science Facts (Space)

- The Sun is over 1.3 million times larger than earth. More Sun facts.
- Halley's Comet was last seen in the inner Solar System in 1986, it will be visible again from Earth sometime in 2061 (get your camera ready). More comet facts.
- Venus is the hottest planet in our solar system with a surface temperature of over 450 degrees celcius.
- Many scientists believe that an asteroid impact caused the extinction of the dinosaurs around 65 million years ago. More asteroid facts.
- The Solar System formed around 4.6 billion years ago. More Solar System facts.
- Saturn isn't the only ringed planet, other gas giants such as Jupiter, Uranus and Neptune also have rings, they are just less obvious.
- Jupiter's 4 biggest moons are named Europa, Ganymede, Callisto and Io. More Solar System moon facts.

விரும்பியது கிடைக்கவில்லை
யென்று வருந்தாதே.
கிடைத்துள்ளதை விரும்பு

## பழமொழிகள் சில

- உழைப்பு உடலை வலிமை யாக்கும். கஷ்டம் மனதை வலிமையாக்கும்
- நம்பிக்கை இல்லாத இடத்தில் அன்பு இருக்காது.
- திறமைதான் ஏழையின் மூலதனம்
- பசியுடையவனின் புன்னகை, செயற்கையாயிருக்கும்.
- மன அமைதியோடு இருப்பவனுக்கு என்றும் ஆபத்து இல்லை
- அறிவாளி, ஒருபோதும் சோம்பேறிகளுடன் நேரத்தை வீணடிக்க மாட்டான்.
- எப்போதும் மனம் தூய்மையாக இருந்தால், முகம் புத்துணர்ச்சியுடன் பிரகாசிக்கும்
- கண்ணைக் குருடாக்கி, காதைச் செவிடாக்கி, மூளையை மழுங்கச் செய்கிறது ஆசை!

## தினம் ஒரு குறள்

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்*
*அப்பொருள் மெய்ப்பொருள்*
*காண்பதறிவு.*

குறளின் பொருள்:-

எந்தவொரு பொருள்குறித்து எவர் எதைச் சொன்னாலும், அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவதுதான் அறிவுடைமையாகும்.

## விளையாடுவோமா சதுரங்கம் ?



*த.செல்வரத்தினம்*

Wikipedia இணையத்தளத்திலிருந்தும் Sue Polgar (USA) DVD இல் இருந்தும் தயாரிக்கப்பட்டது.

*சதுரங்கம் :*

'இருவருக்கிடையேஒருபலகையில் விளையாடும் ஒருவித உள்ளரங்க விளையாட்டு எலாம். இது இரு நாட்டு சேனைகளுக்கு இடையே நடக்கும் ஒரு சமரை ஒத்ததாகும்.'

*குறிக்கோள் :*

'இவ் விளையாட்டின் குறிக்கோள் தனது எதிரியின் இராசாவை ஒரு சதுரமும் நகர முடியாத வண்ணம் முடக்குவதாகும்.'

*சதுரங்க பலகை :*

சதுரங்கப் பலகையானது எட்டு நீள் கோடுகளையும், எட்டு குறுக்குக் கோடுகளுமாக (8X8) 64 சதுரங்களைக் கொண்டது. அடுத்தடுத்த சதுரங்கள் வெள்ளைச் சதுரமாகவும், கறுத்த சதுரமாகவும் அமையும். சதுரங்கப் பலகையின் வெள்ளை சதுரம் எப்போதும் வலது பக்கமே இருக்கும். இது இரு தரப்பினருக்கும் பொருந்தும்.

*சதுரங்க காய்கள் :*

ஒவ்வொரு பக்கமும் 16 காய்களைக் கொண்டதாக அவரவர் நாட்டுச் சேனையைப் பிரதிபலிப்பதாக இவை இருக்கும்.

ஒவ்வொரு பக்கமும்

**1)** ஒரு இராசா (King)(K என்று அழைப்போம்.)

**2)** ஒரு இராணி (Queen) (Q என்று அழைப்போம்.)

**3)** இரண்டு போதகர்கள் (Bishops) (B என்று அழைப்போம்.)

**4)** இரண்டு குதிரைகள் (Knights) (N என்று அழைப்போம்.)

**5)** இரண்டு கோட்டைகள் (Rook/ Castle) (R என்று அழைப்போம்.)

**6)** எட்டு சிப்பாய்கள் (Pawn) (P என்று அழைப்போம்.)

*சதுரங்க காய் ஒழுங்கு :*

**1)** அடித்தளத்தின் இரு எல்லைகளிலும் ஒவ்வொரு கோட்டை (R) அமைந்திருக்கும்.

**2)** அதன் உட்புறத்தில் ஒவ்வொரு குதிரைகள் (N) அமைந்திருக்கும்.

**3)** அதன் உட்புறத்தில் ஒவ்வொரு போதகர்கள் (B) அமைந்திருக்கும்.

*மிகுதி அடுத்த வாரம் தொடரும்..*



**தம்பி, தங்கைகள் அனைவருக்கும்**
**இனிய தைப்பொங்கல்**
**நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக...**

## 'இல்லவே இல்லாத' நாடுகள்

இல்லவே 'இல்லாத' நாடுகள் தொடர்பான சில சுவையான தகவல்கள்..!

1) 'காகங்கள்' இல்லாத நாடு - நியூசிலாந்து
2) 'தினசரி பத்திரிகைகள் ' இல்லாத நாடு - காம்பியா
3) 'திரையரங்குகள்' இல்லாத நாடு - பூட்டான்
4) 'ரயில்' இல்லாத நாடு - ஆப்கானிஸ்தான்
5) தனக்கென 'உத்தியோகபூர்வ தலைநகரம்' இல்லாத நாடு - நவ்ரு
6) தனக்கென 'தாய்மொழி' இல்லாத நாடு - சுவிட்சர்லாந்து
7) 'வாடகைக்கார்கள்' இல்லாத நாடு - பெர்மு.அ

*- அஸ்டன் தேவராசா*

## The Lion and the Mouse

Once when a Lion was asleep, a little Mouse began running up and down upon him. This soon wakened the Lion, who placed his huge paw upon him and opened his big jaws to swallow him.

"Pardon, O King!" cried the little Mouse, "Forgive me this time. I shall never repeat it and I shall never forget your kindness. And who knows, but I may be able to do you a good turn one of these days?"

The Lion was so tickled at the idea of the Mouse being able to help him, that he lifted up his paw and let him go.

Short StoriesSometime later a few hunters captured the King and tied him to a tree while they went in search of a wagon to carry him on.



Just then the little Mouse happened to pass by, and seeing the sad plight in which the Lion was, ran up to him and soon gnawed away the ropes that bound the King of the Beasts. "Was I not right?" said the little Mouse, very happy to help the Lion.

MORAL: Little friends may prove great friends.

## Colouring - 209





**Dear Kids...**

Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from Orupaper Gift Team.

நீங்களும் ஒரு பேப்பர் வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

**Visit our Web: www.facebook.com/ orupaper**



**Issue 208 Winner**
**K.R. Mazneen**



Rengeeshan- C



Nyantha Eswaran



Manasvi



Raagavi. C



Rajlingam - N



T. Kavinuki

### தம்பி தங்கைகளே.....

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள், பழமொழிகள் என்று எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வையுங்கள். அனுப்பும் போது உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள்.



உங்கள் குழந்தைகளுக்குள்
ஒளிந்திருக்கும் திறமைகளைக்
கண்டு பிடித்து அவர்கள்
எதிர்காலத்தைப் பிரகாசமாக்கிடுங்கள்

**LEARNA**
because every child is unique
Computer-Based Education Centres

* தனிப்பட்ட மதிப்பீடு * கலந்துரையாடல் திறமை * ஊக்கப்படுத்துதல்

பிரித்தானிய பாடத்திட்டத்திற்கு அமைவாக 4-16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஆங்கிலம் மற்றும் கணித வகுப்புக்கள் நடைபெறுகின்றன

உங்களது குழந்தைகளின் பெயரை Learnaவில் பதிவு செய்து அவர்களது அடுத்த நகர்வுக்கு சரியான வழியைக் காட்டுங்கள்

♦ Individualised ♦ Interactive ♦ Inspiring



- உங்கள் சிறார்களின் கல்வித் திறனை மேலும் மேம்படுத்தவும்....
- உங்கள் சிறார்கள் கல்வியில் சிறக்கவும்...
- நாளைய உலகின் சவால்களை வெல்லவும்...

**FREE Assessment**

5-6 The Broadway, Sutton, Surrey SM1 4BU

Learnies – because they are unique

www.learna.co.uk

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் - 0845 094 0061



அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# sarasas
SOUTH INDIAN RESTAURANT

- தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
- உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
- சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
- நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே



* Outdoor catering * Function hall * Party orders

புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது



# SARASAS CATERING

எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்

We make 30 different Types of Dosa

630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com

FREE CAR PARKING UPTO 100 CARS

**Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)**



அனைவருக்கும் எமது தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
www.poojasweets.com
Best Quality Vegetarian Food for Any Occasions!
5% OFF
ON-LINE PURCHASES
ENTER:
"ORUPAPER "AT
CHECKOUTS!
...tempting?
discover a new heaven on earth:
ORDER ON LINE
FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!*
We also do International deliveries*
*Terms apply. See online for details
POOJA
SWEETS & SAVOURIES
The Taste That You Will Love, The Quality That You Can Trust
TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com
KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com




MERLYN
KUDOS
hansgrohe
JSN BATHROOMS
WIDE RANGE OF BATHROOMS & SHOWERS
KUDOS
GROHE
GRUNDFOS
Hudson Reed
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!.
மாபெரும் சிறப்பு மலிவு விற்பனையைத் தவறவிடாதீர்கள்
European Toilet & unit £180
European Single sink with tap 45cm £79 55cm £89
Hansgrohe mixer taps Start from £59
Thermostatic shower mixer Start from £49
European bathroom suite Start from £90
Sliding shower doors CALL FOR PRICES
SPECIAL DISCOUNTS FROM MERLYN, KUDOS, & SANEUX SHOWERS
Thermostatic concealed shower mixer 1 option £150 2 option £170
ITALIAN FURNITURE Start from £256
FULL BATHROOM SUITE Start from £220
Free standing baths CALL FOR PRICES
SPECIAL DISCOUNTS FROM SANEUX
• BATHROOMS • SHOWERS • GRANITE TILES
• MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES
JSN HEAT SUPPLIES LTD
• PLUMBING • ELECTRICALS • BOILERS • RADIATORS
ALL AT DISCOUNT PRICES
WATER SOFTENERS AVAILABLE ALL BRANDS
Heated towel rails 600x1000 start from £49
DISCOUNTED PRICES ON BOILERS, RADIATORS & UNDERFLOOR HEATING
WIDE RANGE OF BOILERS & RADIATORS IN STOCK
WE STOCK ALL MAKES OF BOILER
ALL MEGAFLOW SYSTEM BOILERS SUPPLIED & FITTED AT AFFORDABLE PRICES
TEL: 020 8427 0553
Ideal Standard Roca GROHE mira MAIN Hudson Reed ARISTON AQUALUX Armitage Shanks Vaillant AQUALISA KESTON Glow-worm WORCESTER saneux
148 PINNER ROAD, HARROW HA1 4JE TEL: 020 8427 6969

# யாழ்.குடிநீர் விநியோகத் திட்டம்



ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என ஊரவர்கள் கூறுவார்கள். அந்தக் கூற்றின் உண்மையை, இரணைமடுக்குளத்து நீரை வைத்து அரசியல்வாதிகளும், சமூக சேவையாளர்களும் பகிரங்கமாக கூட்டங்களிலும், ஊடகங்களிலும் விடுக்கும் செய்திகள் மெய்ப்பிக்கின்றன.

காதும் காதும் வைத்துபேசித்தீர்க்க வேண்டிய விடயங்களை அற்பத் தனமாக அரசியல் இலாபம் கருதியே, சுய விளம்பரத்துக்காகவோ ஊதிப் பெருக்குவது, எந்த விதத்திலும் எவருக்கும் நன்மை தரப் போவதில்லை. மாறாக நசிக்கப்பட்ட ஈழத் தமிழ் இனம் மேலும் நொந்து போக இடம் தரப் போவது நிதர்சனம்.

இந்தப் பிரச்சினைக்கு, அடித்தளமான யாழ். குடிநீர் விநியோகத் திட்டம் இன்றல்ல, நேற்றல்ல எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே எழுந்த சிந்தனையாகும். யாழ்.குடாநாட்டில் வாழும் மக்களுக்கு குடிநீரை வழங்கும் கிணறுகளில் சுரக்கும் நீர் வளம் உவர் நீராக மாறிவரும் இயற்கையின் மாற்றம் மெல்ல மெல்ல அதிகரித்து வருவது ஆய்வாளர்களால் எப்போதோ எச்சரிக்கப்பட்டுவிட்டது. இதற்கு ஈடுசெய்யவே, யாழ். குடிநீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் திட்டமிடப்பட்ட மகாவலி ஆற்றை வடக்குக்கு திசை திருப்பும் திட்டம் யாழ். குடிநீர் தேவையையும் கருத்தில் கொண்டே வரையப்பட்டது. காலத்தின் கோலமும், நாட்டின் நிலைமைகளும் இத்தகைய திட்டங்களை எட்டிப் போக வைத்தது எமது சாபக்கேடு.

இயற்கை தரும் மழை வெள்ளத்தை, கடலில் கலந்து வீணாகாமல் இரணைமடு நீர்த்தேக்கத்தில் நிரப்பி வைத்து கிளிநொச்சியையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் விவசாயத்துக்குட்படுத்த முந்திய அரசுகள் எடுத்த முயற்சிகளுக்கு நன்றி கூறும் அதேசமயம், இதே நீர்த்தேக்கத்தின் உயரத்தை 2 அடி கூடுதலாக உயர்த்தி, யாழ்.குடிநீர் விநியோகத்தை அமுலாக்க, 20000 மில்லியன் பணமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் பெய்த மழை, முழுமையாகக் கிடைத்தும் 12 அடி மட்டத்திலேயே இரணைமடுக் குளம் நிரம்பியுள்ளதாகவும், இதை நம்பி யாழ்.குடிநீர் திட்டத்தை அமுலாக்கினால், கிளிநொச்சி விவசாயிகள் தற்கொலை தான் செய்ய வேண்டி வருமென பொறுப்புள்ள ஒரு நாடாளுமன்ற பிரதிநிதி கூறுவது கொஞ்சம் மிகையாகத் தோன்றவில்லையா?

# உயிர்ச் சத்துக் குளிசைகளால் கெடுதல்

வருடமொன்றுக்கு 600 மில்லியன் விட்டமின் ‘சி’ குளிசைகளையும் பலதரப்பட்ட உயிர்ச் சத்து குளிசைகளையும், பிரித்தானியாவில் வாழும் மக்கள் கிரமமாக உட்கொள்வதாக சமீபத்தில் வெளியான புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இவ்வாறு உட்கொள்ளும் விட்டமின் குளிசைகளால் ஏதாவது பலன் கிடைத்துள்ளதாகவென ஆராய்ந்த ‘இதின் வான் துலக்’ என்பவர் பி.பி.சி. இரண்டில் ஒளிபரப்பாகிய ‘நம்புங்கள் நான் ஒரு டாக்டர்’ என்ற நிகழ்ச்சியில் தனது அனுபவத்தைக் கூறுகிறார்.

அவரது ஆய்வின்படி, ஒவ்வொருவரும் உட்கொள்ளும் நாளாந்த உணவின் மூலம் உடலின் ஆரோக்கியத்துக்கு தேவைப்படும் உயிர்ச் சத்துகள் அனைத்தையும் உடலின் உறுப்புகள் பெற்றுக் கொள்வதாகவும் தேவைக்கு அதிகமாகச் சேர்க்கப்படும் உயிர்ச்சத்துகளை சிறுநீர் மூலம் வெளியேற்றி விடுவதாகவும் தனது ஆய்வுகள் மூலம் நிரூபித்துள்ளனர்.

அதேநேரம், உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட நோயாளிகள், சிறுபிள்ளைகள், சைவ உணவை மட்டும் உட்கொள்பவர்கள், மாதவிடாய் நின்றுவிட்ட பெண்கள், மற்றும் வைத்திய ஆலோசனையின் பிரகாரம் பரிந்துரைக்கப்பட்ட நோயாளிகள் அவரவர்க்குத் தேவைப்படும் விட்டமின் குளிசைகளை உபயோகிப்பதில் தவறில்லையெனவும், அநாவசியமாக உட்கொள்ளும் குளிசைகளால் எதுவித பலனுமில்லை என்பதே அவரது வாதமாகும்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

விட்டமின் குளிசைகளைத் தயாரித்து, விற்பனைக்கு விடும் விளம்பரங்களை நம்பி, ஏராளமாக பணத்தை வீண்விரயமாக்கும் பழக்கத்திலிருந்து மக்கள் விடுபட வேண்டுமெனவும், இந்த விழிப்பு மக்களால் உணரப்பட்டால் வருடமொன்றுக்கு 750 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸை சேமிக்க முடியுமென ஆய்வாளர் கிறிஸ் வான் நம்புகிறார்.

# இடம் படவீடெடேல்

அளவான குடும்பமும், அளவான வீடும் ஒருவருக்கு அமைந்து விட்டால் இவ்வுலகில் வேறு எதுவும் வேண்டுமோ என எண்ணத் தான் தோன்றுகிறது. ஆனால் யார் தான் இதை மதிக்கிறார்கள். பாழாய்ப் போன ஆசை பேராசையாகி பொறாமையில் போய் முடிவது தான் தேவைக்கு மிஞ்சிய விசாலமான வீடுகள். இரண்டு பிள்ளைகள் மாத்திரம் வாழும் குடும்பங்களுக்கு 4 படுக்கையறைகளும், மாடியில் இளைப்பாற ஒரு அறையும் தேவை தானா என்று கணக்குப் போடும்போது, அத்தகைய ஒரு வீடு பிடித்துள்ள இடத்தைக் கணக்கிட்டால் அதுவும் விசாலமாகத் தான் இருப்பதை உணரலாம்.

விசாலமான வீடுகள், பயனுள்ள நிலத்தை கபளீகரம் செய்வதோடு அன்றாட பாவனையில் வீண் விரயத்தையும் செலவுகளில் சேர்க்கிறது. குறிப்பாக மேற்கு நாடுகளில் வீடுகளைப் பராமரிக்க தேவைப்படும் அன்றாடச் செலவு கட்டுக்கடங்காமல் தினமும் ஏறுவது சர்வசாதாரணம். அதேநேரம் உஷ்ணப் பிரதேசங்களான ஆசிய நாடுகளில், உறங்கும் நேரத்தை தவிர மற்றைய பொழுதுகளில் அனேகமானவர், காற்றும் வெளிச்சமும் தரக்கூடிய வீட்டுக்கு வெளியேயுள்ள பகுதிகளில் தான் தமது பொழுதைக் கழிப்பார்கள். ஆகவே தேவைக்கு உதவாத விசாலமான வீடுகளை நிர்மாணிக்க இடம்படவீடெடேல் என ஔவையார் கூறியதில் அர்த்த முண்டல்லவா.

தாயகத்தில் குறிப்பாக யாழ்.மண்ணில் சிவந்த மண் பிரதேசங்களில் கூடியளவு சிறு பயிர் விவசாயம் செழிப்பாக காணப்படுவது கண்கொள்ளாக் காட்சி. வீதிகளின் இரு மருங்கிலும் வளர்ந்து நிற்கும் தோட்டங்கள் அருகிப் போய், அழகான மாடிக் கட்டிடங்களும் விசாலமான வீடுகளும் இடம்பிடித்துள்ளதை காண மனதுக்கு மகிழ்ச்சி தந்தாலும், பயிர் விளையும் பகுதியெல்லாம், புதிய கட்டிடங்களுக்கு இடம் கொடுத்து விட்டதை நினைக்க, கவலைதான் வரச் செய்கிறது.

சில வீடுகளை நிர்மாணிக்கும்போது, காணியில் நடுப்பகுதியில் பெரிதாகக் கட்டுவதால், பயனுள்ள நிலமும் வீணாகும், அவைதரும் பயனும் வீணாகும். சிங்களமயமாகும் தமிழ் பிரதேசங்களைப் பாதுகாக்க வேண்டுமாயின், இடம்பட வீடெடேல் என ஔவையார் கூறிய நல்ல அறிவுரை இக்கால கட்டத்தில் பொருந்தும்.



# தமிழ் மக்களுக்குள்ள ஒரேயொரு தெரிவு

## மாற்றுஅரசியலும், மாற்று அரசியல் இயக்கமுமே!


- சி. அ. யோதிலிங்கம்

*அண்மைக்காலமாக அடுத்தடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தில் இருக்கும் உள்ளூராட்சிச் சபைகளில் வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டு வருகின்றது. வடக்கில் ஆரம்பமான இப்போக்கு கிழக்கிலும் மிகவேகமாக பரவத் தொடங்கியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் ஊடகவியலாளர் கே.வி. நந்தன் அரசியல் ஆய்வாளர் திரு. சி. அ. யோதிலிங்கம் அவர்களை செவ்விக் கண்டிருந்தார். பொங்கு தமிழ் இணைய தளத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அவரது செவ்வியின் முக்கிய பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம்.*

நன்றி - பொங்குதமிழ் (ponguthamil.com)

***வடக்கு-கிழக்கிலுள்ள உள்ளூராட்சிச் சபைகளில் வரவு - செலவுத்திட்டம் தோற்கடிக்கப்படுவது ஏன் ?***

வடக்கில் வலி-கிழக்குப் பிரதேச சபையிலும், வல்வெட்டித்துறை நகரசபையிலும் வரவு-செலவுத்திட்டம் முதலில் தோற்கடிக்கப்பட்டது. இந்தக் காய்ச்சல் கிழக்கிற்குப் பரவியபோது, அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேசசபையிலும், காரைதீவு பிரதேசசபையிலும், திருக்கோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேசசபையிலும் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இங்கெல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களே அரசாங்கக்கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து எதிர்த்து வாக்களித்து தோற்கடிக்கச் செய்துள்ளனர். வல்வெட்டித்துறை நகரசபையில் எதிர்த்து வாக்களித்த அனைவரும் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களே.

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி பிரதேசசபையில் இது முதலில் நிகழ்ந்தது. ஆலையடிவேம்பு பிரதேசசபையிலும், இது நிகழக்கூடிய வாய்ப்பு இருந்தபோதும், மாவை சேனாதிராசா ஒருவாறு இணக்கத்தைக் கொண்டுவந்தார். இதே இணக்கம் காரைதீவு பிரதேசசபையில் ஏற்படவில்லை. அங்கு தலைவரைத்தவிர, ஏனைய அனைவரும் எதிர்த்து வாக்களித்திருந்தனர். தொடர்ந்து வெருகல் பிரதேசசபையிலும் வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

இவ்வாறு தொடர்ந்து தோற்கடிக்கப்படுவதனால் கூட்டமைப்பின் தலைமை வரவு-செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியிருந்தது. வவுனியாவில் நடைபெற்ற கூட்டமைப்பின் மாநாட்டிலும், இது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. எனினும் அவையெல்லாம் பெரிய பயனைத் தரவில்லை. இந்தத் தீர்மானம் நிறைவேற்றியபின்தான் காரைதீவு பிரதேசசபையில் இரண்டாவது தடவையாகவும் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. அங்கு பிரதேச சபைத் தலைவர் இராசையா இராஜினாமா செய்துள்ளார்.

*வல்வெட்டித்துறை நகரசபை விவகாரம்*

வல்வட்டித்துறை நகரசபையில் இரண்டாவது வாக்கெடுப்பின்போது, தலைவர் பொதுமக்களைக் கொண்டு எதிர்ப்பவர்களை சபை மண்டபத்திற்குள் வரவிடாமல் தடுத்து, மூன்று பேருடன் மட்டும் வரவு-செலவுத்திட்டத்தை நிறைவேற்றினார். இந்தத் தகராறினைத் தீர்க்க இறுதியில் பொலிஸ் கூட வரவேண்டியநிலை இருந்தது. தற்போது தடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளூராட்சி சபை ஆணையாளரிடம் முறையிட்டுள்ளனர். தடுக்கப்பட்டமை தவறென ஆணையாளர் தீர்மானித்தால், நிறைவேற்றப்பட்ட வரவு-செலவுத்திட்டமும் செல்லுபடியற்றதாகிவிடும்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் வல்வெட்டித்துறை நகரசபைக் குழப்பத்திற்கு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான குலநாயகமும், வலி-கிழக்கு பிரதேசசபைக் குழப்பத்திற்கு ஈ.பி.டி.பியுடன் இணைந்த தமிழரசுக் கட்சிக்காரருமே காரணம் எனக் குற்றஞ்சாட்டியிருக்கின்றார். வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் அனந்தராஜ் இரண்டாவது வாக்கெடுப்பின்போது இடம்பெற்ற குழப்பத்திற்கு வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கமே காரணமென குற்றஞ்சாட்டியிருக்கின்றார். ஓர் உள்ளூராட்சி சபையினையே கொண்டு நடாத்த முடியாத உங்களுக்கு, எதற்கு தனிநாடும், சுயாட்சியும் என வட மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கிண்டலடித்திருக்கின்றார்.

வலி-தெற்கு பிரதேசசபையில் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படலாம் எனக்கருதி, தலைவர் ஜெபநேசன் முன்கூட்டியே இராஜினாமா செய்ததினால், தப்பிப்பிழைத்தது. அங்குங்கூட ஒரு கூட்டமைப்பு உறுப்பினர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. இன்னொருவர் எதிர்த்து வாக்களித்திருந்தார்.

அதேவேளை உள்ளூராட்சிச்சபை தலைவர்களின் கெட்டித்தனத்தால், எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் ஏகமனதாக வரவு-செலவுத்திட்டத்தினை நிறைவேற்றிய பிரதேச சபைகளும் உண்டு. திருக்கோணமலை பட்டணமும், சூழலும் பிரதேசசபையிலும் ஆலையடிவேம்பு பிரதேசசபையிலும், இவ்வாறு இடம்பெற்றுள்ளது. திருக்கோணமலை பட்டினமும், சூழலும் பிரதேசசபையில் அரசாங்க கட்சியினைச் சேர்ந்த மூவரும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் ஆதரவாக வாக்களித்துள்ளனர். இதேபோல நாவிதன்வெளி பிரதேசசபையில் எதிர்ப்புக்காட்டியிருந்த பிள்ளையானின் கட்சியும், அரசாங்கக்கட்சியும் ஆலையடிவேம்பில் ஆதரவு தெரிவித்திருந்தது. இங்கு மாவையின் முயற்சி ஒரு காரணமாக இருந்தாலும், பிரதேசசபைத் தலைவரின் கெட்டித்தனமே முக்கிய பங்களிப்பையாற்றியிருந்தது.

தற்போது மேலும் பல உள்ளூராட்சிச் சபைகளின் வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்படலாம் என்ற கலக்கத்தில் கூட்டமைப்பின் தலைமை இருக்கின்றது. ஆனாலும், இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆரோக்கியமான நடவடிக்கைகள் எதனையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இதற்கான ஆற்றலும் கூட்டமைப்பின் தலைமைக்கு இருப்பதாக கூறமுடியாது.

***இதற்கு என்ன காரணம் என நீங்கள் கருதுகின்றீர்கள்?***

பல காரணங்கள் உண்டு என்றே நான் கருதுகின்றேன். அதில் முதலாவது கூட்டமைப்புத் தலைமையின் வழிகாட்டல் எதுவும் இல்லாமையாகும். கட்சியின் ஆளுகைக்குட்பட்ட நிர்வாக அமைப்பொன்று சிறப்பாகச் செயற்படுவதற்கு, தலைமையின் தொடர்ச்சியான வழிகாட்டலும், தொடர்ச்சியான கண்காணிப்பும் அவசியமாகும். கூட்டமைப்பின் தலைமை இவை எவற்றையும் செய்யவில்லை செய்வதற்கு வழிகாட்டக்கூடிய கொள்கைகளோ, அமைப்புப் பொறிமுறைகளோ கூட்டமைப்பிடம் இருக்கவில்லை. சம்பந்தன் தனது தனித்த ஓட்டத்திற்கு இலக்கு, கொள்கை, அமைப்புப் பொறிமுறை என்பன தடையாக இருக்கும் என்பதால் அவற்றை ஒருபோதும் விரும்பியது கிடையாது. இன்று இதன் பாதிப்பு உள்ளூராட்சிச் சபைகளிலும் தெரிகின்றது. இந்தச் சபைகள் எந்த வழிகாட்டலும் இல்லாமல் தாம் நினைத்தபடியேதான் செயற்படுகின்றன. இதனால் ஜனநாயகச் செயற்பாடு அங்கு எதுவும் இல்லாததோடு ஊழலும் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. சபையின் வினைத்திறனும் பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது,

இரண்டாவது, உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களது தனித்த ஓட்டமாகும். உள்ளூராட்சி சபை என்பது ஒரு கூட்டுவாழ்க்கையை வேண்டிநிற்கின்ற ஒரு சபையாகும். சபையின் செயற்பாடுகளில், தீர்மானங்களில் சகல உறுப்பினர்களும் பங்குபற்றக்கூடிய வாய்ப்புகள் இருக்கவேண்டும். அதற்கு ஜனநாயக விழுமியங்கள் அங்கு பேணப்படல் வேண்டும். ஆனால் கூட்டமைப்பின் பெரும்பாலான சபைகளில் இவை மருந்துக்குகூட பேணப்படுவதில்லை. தலைவர் ஒருவித சர்வாதிகாரத்துடன் தனித்தே செயற்படுகின்றார். சம்பந்தன் தனித்து தீர்மானங்களை எடுக்கும் போது, தாம் ஏன் அவ்வாறு எடுக்கக்கூடாது எனத் தலைவர்கள் கருதியிருக்கலாம்.

மூன்றாவது, தலைவருக்கும், உபதலைவருக்கும் இடையேயான முரண்பாடாகும். அனேக உள்ளூராட்சிச் சபைகளில் இதுவே காரணமாக இருந்திருக்கின்றது. நாவிதன் வெளி பிரதேசசபையின் தலைவராக இருந்த கலையரசன் கிழக்குமாகாணசபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். அவ்வெற்றிடத்திற்கு உபதலைவரும், அடுத்த அதிகப்படியான விருப்பு வாக்குகளையும் பெற்ற ஆனந்தன் வரவிரும்பியிருந்தார். ஆனால் கலையரசனின் சிபார்சினூடாக கூட்டமைப்பின் தலைமை இன்னொருவரை தலைவராக தெரிவுசெய்திருந்தது. இதனால் நீண்டகாலமாகவே முரண்பாடு வளர்ந்திருந்தது. ஆனந்தன் தருணம் பார்த்து அதனைப் பயன்படுத்தியிருக்கின்றார்.

வல்வெட்டித்துறை நகரசபையிலும் சிவாஜிலிங்கம் தலைவராக வர விரும்பியிருந்தார். தேர்தல் காலத்திலும் அவ்வாறே பிரச்சாரம் செய்தார். ஆனாலும் விருப்புவாக்கில் சிவாஜிலிங்கத்தைவிட அனந்தராஜ் கூடுதலான வாக்குகளைப் பெற்றமையினால், தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். இதனை சிவாஜிலிங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அன்றிலிருந்தே சிவாஜிலிங்கம் கோஸ்டி சேர்த்துக்கொண்டு, அனந்தராஜின் தலைமைக்கு எதிராகச் செயற்படுகின்றார். மாகாணசபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னரும், அனந்தராஜிற்கு எதிரான நடவடிக்கைகளை அவர் நிறுத்தவில்லை.

நான்காவது, கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுக்கிடையிலான முரண்பாடாகும். உள்ளூராட்சி சபைகளிலும் இம்முரண்பாடு பிரதிபலித்தது. வடக்கில், குறிப்பாக தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள், தலைவர்களாக இல்லாத உள்ளூராட்சிச் சபைகளில் இது அதிகமாக உள்ளது. வலிகிழக்குப் பிரதேசசபையின் தலைவராக சுரேஷ் பிரேமச்சந்திரனின் செயலாளர் உதயகுமார் இருக்கின்றார். இதனால் ஏனைய தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் அவருடன் ஒத்துழைப்பது குறைவு. வல்வெட்டித்துறை நகரசபையிலும் தலைவர் அனந்தராஜ், சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஆளாகவே பார்க்கப்படுகின்றார். குலநாயகமும், சிவாஜிலிங்கமும் அவருடன் ஒத்துழையாமைக்கு இவை காரணமாக இருக்கக்கூடும். கிழக்கு உள்ளூராட்சி சபைகளில் கட்சிமுரண்பாடுகள் எவ்வளவிற்குப் பங்களித்தன என்பதை அறியமுடியவில்லை.

ஐந்தாவது, தமிழ்ச்சமூக அமைப்பின் குறைபாடாகும். தமிழ்ச்சமூகம் ஒரு ஜனநாயக சமூகமல்ல. ஜனநாயக சமூகமாக வளர்வதற்கு முதலாளித்துவப் பொருளாதாரமும் அவர்கள் மத்தியில் வளர்ந்திருக்கவில்லை

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

**ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..**

**உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட...**

**Enrol them in Learna**

• Individualised • Interactive • Inspiring

**Maths & English Teaching for 4-16 years olds**

FREE Assessment

**We also prepare pupils for**

- 11 plus entrance exams
- Key Stage 2 SATS examinations
- Key Stage 3 and GCSE Maths
- A' Levels - Maths, Chemistry & Physics



LEARNA because every child is unique

Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.



# நமக்கு தான் கேட்க ஒரு நாடில்லையே.......

நச்சாந்துபட்டியில் இராமனாதன்னு சொன்னா தெரியுதோ இல்லையோ பர்மா காரர்னு சொன்னா எல்லோருக்கும் தெரியும். 75வயதிலும் திடகாத்திரமான உடம்பு..ஆறடிக்கும் அதிகமான உயரம்... வயசுல சின்னனுகளா இருந்தாலும் அய்யானு சொல்லிதான் பேசுவார். சிவன் கோவில் தெற்குபுறம் மூன்றாவது வீடு.. அவர்வீடு ஒருஅரண்மனை தான்.. முப்பது அறையும் ஆயிரம் சன்னலும் உள்ள வீடு.. ஆளும் பேருமாக இருந்த வீட்ல இப்ப இருப்பது அவரும் அவர் மனைவி மீனாட்சி ஆச்சியும் மட்டும் தான்.

கோடி கோடியாக பணம் இருந்தும் அவரின் ஒரே மகன்..மகன் நன்றாகவேபடித்தான்.நல்ல கல்லூரியும் கிடைத்தது. கல்லூரியில் படிக்கும் போதே வேலையும் கிடைத்துவிட்டது. நல்ல வேலை கிடைத்ததால் அவனுக்கு பெண்ணும் எளிதில் கிடைத்தது. 5வைர நகை 20இலட்சம் ரொக்கம் என பெண் வீட்டார் கொடுத்தாலும் நல்ல வீட்டு புள்ள என்பதால் இராமனாதனும் திருமணத்துக்கு ஒப்பு கொண்டார். திருமணமான 6 மாதத்தில் மகனுக்கு லண்டனில் வேலை. அப்போ போனவன் தான் 10 வருடத்துக்கு மேல் ஆகிவிட்டது. ஒரு பிள்ளையும் பிறந்து அவனும் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்து விட்டான். ஆனால் ஊர் பக்கம் மட்டும் வருவதே இல்லை. கேட்டால் தொழில் விட்டு விட்டு வர முடியாது அப்பா அடுத்த வருடம் கண்டிப்பா வரேன்பா என்பான்..

கடைசியா இந்த வருசம் தான் கோடைக்கு வருவாதாய் சொல்லி தேதியும் சொல்லி இருக்கிறான். இன்னும் இரண்டு மாசம் இருந்தாலும் அன்றைக்கே வேலையை ஆரம்பித்து விட்டார். முழு வீட்டுக்கும் வெள்ளை அடித்து புது சாமன்கள் மாற்றுவது என் பல வேலையை செய்தாலும், முக்கியமான வேலையாக தன் மகனும் பேரனும் வருவதை வீதி வீதியாக சொல்லிகொண்டு திரிந்தார்.. மீனாட்சி ஆச்சியோ தன் மகனுக்கு அது பிடிக்கும் இது பிடிக்கும் என எல்லா பலகாரங்களையும் செய்ய ஆரம்பிச்சுடுச்சு..

கடைசியாக அந்த நாளும் வந்தது, மகன் மருமகள் பேரன் எல்லோரையும் ஆரத்தி எடுத்து வீட்டுக்குள் ஆச்சி அழைத்து வந்தால்.. இராமனாதன் ஏதும் பேச முடியாமல் நின்று கொண்டு இருந்தார்.. வந்த சொந்தம் எல்லோரும் பேரன் அப்பச்சிய உரிச்சி வச்சிருக்கிறான் என்று சொன்னது ராமனாதனுக்கு ரொம்ப மகிழ்ச்சி. பேரனை அருகில் அழைத்தவர் அய்யா வாய்யா எப்படி இருக்க என்றார். நான் நல்லா இருக்கேன் நீங்க என்றான்..எனக்கு என்னடா ராசா உங்கள எல்லாரையும் பாத்துடேன்ல இனி என்ன கவல என்றவர் இந்த ஆச்சி யாரு தெரியுமா என்றார்..அதற்கு அவன் அப்பதா என்றான்..பாரடி பேரனுக்கு உன்ன தெரிந்து இருக்கு..பேரனை பாத்த சந்தோசத்துல மகனையும் மருமகளையும் மறந்திட்டார்.

ஊருசனம் போனபின்பு மகனிடம் பேச ஆரம்பித்தார். மகன் தன் வேலைய விட்டுட்டு 3 off licence நடத்துறது.. ஒரு chicken shop நடத்துறது என தன் தொழில் பத்திசொல்லி கொண்டிருந்தான். தான் தொழில்தான் வர முடியல, பெரிய வியாபாரம் யாரையும் நம்பி விட முடியாது இல்லாட்டி எல்லா வருடமும் வரலாம்.. இப்ப கூட இன்னும் ஒரு வாரம் தான் இருக்கலாம்,பேசாம நீங்க அங்கவந்துருங்களேன் அப்பாவை அழைத்தான் .. அவரோ இந்த கட்ட இங்கயே வேகட்டும்னு சொல்லிட்டு படுக்க சென்றுவிட்டார்..அவர்படுத்தாலும் நினைவுகள் முழுக்க பேரனையே சுற்றி வந்த்தது..

அடுத்த நாள் காலையில் பேரனை அழைத்து கொண்டுஊரணிகடை வீதியில்நடந்துசென்றார். அவருக்கு என்னவோ வானில் பறப்பது போன்று இருந்தது.. விதவிதமா காற்சட்டைகளைப் போட்ட மனிதர்களை பார்த்து பழகிய சிறுவனுக்கு சாரம், வேட்டி கட்டிய மனிதர்களை பார்த்து வியப்பாக இருந்தது.. ஊர் மக்கள் சிறுவனை பார்த்து பர்மாகாரர் பேரன் இவன் தான் என்று தங்களுக்குள் பேசி கொண்டனர்.

உங்கள பாத்து எல்லோரும் ஏன் அய்யா பர்மாகாரர்னு சொல்றாங்கனு சிறுவன் கேட்டான். அதுவா அது பெரிய கதை, எங்க அப்பச்சி நான் எல்லோரும் பர்மாவில வியாபாரம் பண்ணிணோம். அங்க நமக்கு பெரிய தோட்டம் எல்லாம் இருந்தது. இங்க உள்ள பொருள கொண்டுபோய் அங்க விக்குறது அங்க உள்ள பொருள இங்க கொண்டு வந்து விக்குறது அதான் நம்ம தொழிலே! அங்க நமக்கு வீடெல்லாம் இருந்தது. அதான் எல்லாரும் பர்மாகரர்னு சொல்றாங்க..

அப்புறம் ஏன் அய்யா இங்க வந்தீங்க.. அதுவா பர்மா பூர்வ குடிமக்கள் தங்கள் நாட்ட விட்டு எல்லோறும் வெளியேறுங்கனு சொல்லி தமிழர்களையும் சீனர்களையும் விரட்டுனாங்க. அதான் வீடு வியாபாரம் எல்லாதையும் விட்டுட்டு ஒரே நாள்ல வெளியேறுனோம்..என்ன அய்யா இப்படி சொல்றீங்க சீனாகாரங்க இன்னமும் அங்க இருக்காங்களே. பர்மாகரங்க சீனர்கள தாக்கினபோது தாக்குதல் தொடர்ந்தா சீன இராணுவம் உள்ளே வரும்னு சொன்னாங்க . அதானல பர்மியர்கள் அவங்கள விட்டுட்டு நம்மளஅடித்து துறத்துனாக. அப்ப உங்கள காப்பத்த யாரும் வரலையா அய்யா... யாரு கேட்பது இவ்வளவு கோடி பேர் இருந்தும் தமிழனுக்கு ஒரு நாடில்லையே..இப்ப இங்க பாரு எவ்வளவு மீனவர்கள் சாகுறாங்க யாராவாது கேள்வி கேட்டாங்களா ?

எல்லாம் நமக்குனு ஒரு நாடு இல்லாதது தான் காரணம். அய்யாவின் பேச்சிலும் பூர்விகத்தை அறியும் ஆவலிலுல் ஒரு வாரமும் அவர் கூடவே சுற்றினான் சிறுவன்..ஒரு வாரமே அவர் கூட இருந்தாலும் அவன் இதயத்தோடு அவர் ஒன்றி விட்டார்.

கண்டிப்பாக அடுத்த வருடம் வருவதாக சொன்னவன் கண்ணீரோடுதான் விமானம் ஏறினான்..விமானத்தில் ஏறியபிறகும் ஒரு கேள்வி அவன் நெஞ்சை துளைத்தது..

தாத்தாவை போன்று பல தலைமுறைகளாக வாழ்ந்தவர்களை பர்மா அடித்து விரட்டியதை போல் நம்மையும் ஒரு நாள் எங்கள் நாடு என்று சொல்லி அங்கு இருந்து அடித்து விரட்டுவார்களா? இருந்தாலும் அவனே மனதை தேற்றிக் கொண்டான்

இங்கு தான் இனவெறி கிடையாதே

இங்கு பல்வேறு இன மக்கள் வாழ்கிறார்கள்.. நாம் இந்துவாக இருந்தாலும் மரம் வைக்கிறோம் எனவே நம்மை ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று நினைத்தவனுக்கு தாத்தாவின் குரல் மீண்டும் ஒலித்தது

நமக்கு தான் கேட்க ஒரு நாடில்லையே !!

*சிறுகதை ஆக்கம் - இரா.பா.புகழேந்தி*

*ஓவியம் - மணிவர்மா*









# மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின்

## பதினான்காம் ஆண்டு நினைவு

*"இற்றைவரை ஆயுதமேந்தாத எந்த அரசியல் செயற்பாட்டாளரையும் விடக் கூடுதலான ஆபத்தான முயற்சிகளை எடுத்தவர் குமார் பொன்னம்பலம். ஒரு போதும் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படாத போதிலும் தனது எந்த பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த மற்றைய தமிழ் அரசியல்வாதிகளை விட அதிகம் சாதித்தவர்"*

*- பேராசிரியர் சி. சிவசேகரம்*

தமிழ் மக்களின் விடிவிற்காக சிங்களத்தின் மண்ணில் நின்றவாறு துணிந்து குரல் எழுப்பிப் போராடி வந்தவர் மாமனிதர் திரு குமார் பொன்னம்பலம். சிங்கள அடக்கு முறையாளர்களை, ஆக்கிரமிப்புக்காரர்களை, மனித உரிமை மீறல்களை எதிர்த்து எழுந்த அவரது குரல் தனித்து நின்று பலமாக துணிவாக சிங்களத்தின் தலைநகரில் ஓங்கி ஒலித்து வந்தது.

**'நான் ஒரு ஈழத்தமிழ் மகன், தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளன்'' என்று பகிரங்கமாக மார்தட்டி சொல்லிக் கொண்டு மக்கள் சேவை இந்த தன் மகனை தமிழீழம் மாமனிதர் என்ற அதியுயர் தேசிய விருதை அளித்து கௌரவித்தது.**

திரு குமார் பொன்னம்பலம் ஓர் ஆயுதம் தாங்கிய போராளி அல்ல. ஆனால் ஆயுதப் போராட்டம் வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தவர். அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அல்ல. ஆனால் தமிழீழ மக்களது நெஞ்சிலும், உலகத் தமிழர்கள் நெஞ்சிலும் நீங்காத இடத்தை பிடித்துக் கொண்ட ஒரு மாமனிதர்.

அவருக்கு அழகு தமிழில் அடுக்கு மொழியில் ஆரவாரமாக பேசத் தெரியாது. ஆனால் அவர் பேசிய பிள்ளைத்தமிழை, செல்லத்தமிழை தமிழினம் ஆவலோடு, சிரத்தையோடு கேட்டது. காரணம் அவரது பேச்சில் உண்மை இருந்தது. உரிமைக்காகப் போராடும் உறுதியிருந்தது. துணிவு ஒன்று மட்டுமே தன் துணையாக சிங்களப் பேரினவாதத்தை எதிர்கொண்டு போராடியவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள்.

இன்று தமிழீழத்தின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பலர் கொழும்பில் இருந்து தமிழ் தலைவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்களில் சிலர் அன்றும் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு குடை பிடித்து சாமரம் வீசிக் கொண்டிருக்கையில் தன்னந்தனியனாக அஞ்சாது தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுத்தவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்.

காலம் காலமாக சிறிலங்காவில் கைது செய்யப்படுகின்ற அப்பாவித்தமிழ் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் நீதி கிடைத்திடுவதற்கு மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் ஆற்றிய சேவை அளப்பரியது. இன்று உலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற இளையவர்களின் நெஞ்சு அவரின் பெயர் சொல்லிக் கலங்குகின்ற காட்சியை நாம் இப்போதும் காண்கின்றோம். கிருஷாந்தி போன்ற அப்பாவி யுவதிகள் சிறிலங்கா படையின் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டு கொலையும் செய்யப்பட்டதனை உலகின் கண்முன்னே நிறுத்தி உண்மை வெளிப்படுவதற்கு திரு குமார் பொன்னம்பலம் உழைத்திட்டதனை உலகறியும். மாபெரும் மனிதப் புதைகுழியான செம்மணியின் அவலம் இன்று வெளிப்படுவதற்கு காரணியாக விளங்கியவர் திரு குமார் பொன்னம்பலம் அவர்கள். தாம் படித்த படிப்பை சட்டத்திறமையைக் கூட தன் நாட்டின் சோகம் களைவதற்காக உபயோகித்தவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள்.

சிறிலங்கா அரசுகள் அதிலும் குறிப்பாக சந்திரிக்காவின் அன்றைய அரசு தமிழ் மக்கள் மீதுமேற்கொண்ட அடக்குமுறைகளையும் மனித மீறல்களையும் பகிரங்கத்திற்கு கொண்டு வந்தவர். தமிழ் பிரச்சனையை தீர்ப்பதற்கு தீர்வுப் பொதி உண்டு என்று சொல்லித் திரிந்த சந்திரிக்காவின் வேடத்தைக் களைந்து உண்மை உருவைக் காட்டுவதில் திரு குமார் பொன்னம்பலம் அயராது உழைத்து வந்தார். அவர் சந்தித்த வெளிநாட்டு ராஜதந்திரிகளும் உத்தியோகத்தர்களும் எண்ணில் அடங்கார். தமிழீழ விடுதலைக்காகவும், தனது மக்களின் விடிவுக்காகவும் தனித்து நின்று போராடிய மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள். அவர் ஆற்றிய சேவைகள் இவை மட்டுமல்ல தன் மக்களின் விடிவுக்காக தன்னுயிர் தந்த இந்த மாமனிதன் ஆற்றிய சேவைகளின் முழுப் பரிமாணத்தையும் தமிழர் வரலாறு சொல்லும் நாள் வரும்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள், தன்னை அடிமையாகி கட்டுகிறது என்பதால் சிறிலங்காவின் தேசிய அடையாள அட்டையை தம்முடன் எடுத்து செல்வது கிடையாது. ஒரு முறை கொழும்பு தொடரூந்து நிலையத்தில் காவல்துறையினரால் தமிழர்களை விசாரணை செய்யப்பட்டுக் கொண்டு இருந்த நேரத்தில் அங்கு பயணத்துக்காக நின்ற குமார் பொன்னம்பலத்திடம் சிறிலங்காவின் தேசிய அடையாள அட்டையை காட்டுமாறு காவல்துறை வினவிய போது.. நான் அதனை என்னுடன் எடுத்து வரவில்லை என்பதுடன் அதை எங்கும் என்னுடன் எடுத்து செல்வதே கிடையாது, முடிந்தால் கைதுசெய் அல்லது வழக்குப்போடு நான் பார்த்துக் கொள்கிறேன் என்று துணிந்து சவால் விடுத்தவர்.

ஒரு முறை ஐ.நா. மனிதவுரிமைக் கூட்டத் தொடரில் தன்னந்தனியாக சென்று ஈழத்தமிழர்களின் அவலங்களை எடுத்துரைத்துவிட்டு, மீண்டும் சிறிலங்காவுக்கு செல்வதற்கு முன்பு, அன்றைய அரசுத்தலைவர் சந்திரிக்காவுக்கு தொலை நகல் மூலம் "நான் விடுதலைப் புலிகளின் ஆவணங்களையும் சில கடிதங்களையும் என்னுடன் எடுத்து வருகிறேன் முடிந்தால் குடிவரவுத் திணைக்களத்திடம் கூறி கைது செய்யுங்கள் பார்க்கலாம்'' என்று சவால் விடுத்தார்.

அது போலவே விடுதலைப் புலிகளின் ஆவணங்களை தன்னுடன் எடுத்து வந்திருந்தார், வானூர்தித் தளத்தில் தானாகவே அந்த ஆவணங்கள் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளிடம் காட்டி உங்களுக்கு துணிவிருந்தால் இதை எடுத்து கொண்டு சென்று என் மீது வழக்கு பதிவு செய்யுங்கள் என்று கூறியிருந்தார்.

"நான் ஒரு ஈழத்தமிழ் மகன், தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளன்'' என்று பகிரங்கமாக மார்தட்டி சொல்லிக் கொண்டு மக்கள் சேவை இந்த தன் மகனை தமிழீழம் மாமனிதர் என்ற அதியுயர் தேசிய விருதை அளித்து கௌரவித்தது. நாட்டுப் பற்றுள்ள நல்லவர்கள் எல்லோரும் இவ்வேளையில் இம் மாமனிதனின் தாகம் தணிவதற்கு நாம் செய்யவேண்டிய கடமை குறித்தும் சிந்திப்போம்.

ஒரு தமிழீழ நாட்டுப்பற்றாளன் தேசாபிமானி தன் வாழ்நாளில் செய்யக்கூடிய அரும் பணிகளைச் செய்தது மட்டுமல்லாது மானுடத்தின் அதியுயர் விலையான தன்னுயிரையே தன்னினத்திற்கு தந்து உதாரணங்களுக்கு எல்லாம் முன்னுதாரணமாக திகழ்ந்துள்ளார்.

தமிழன் ஈழத்தமிழன் மாமனிதன் குமார் பொன்னம்பலம் உண்மைக்காகவும் உரிமைக்காகவும் அந்த உயரிய மனிதன் செய்த பணியின் சிறு பகுதியையாவது நாம் செய்திட முன் வந்திட வேண்டும். அது தான் நாம் செய்யக் கூடிய உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

*- சபேசன் (அவுஸ்திரேலியா)*

## எது பலம் இணைந்து இருப்பது !!

தண்ணியில் இருக்கும்போது
முதலைக்கு பலம்
ஈழத்தில் இருக்கும்போது
அண்ணனின் பலம்
என் மண்ணில் நான்
இருந்தால் தான் எனக்கு பலம்
என் உறவுகள்
அக்கம் பக்கம்
கூட இருக்கும் பலம் ...

அகதியா வந்தபின்
எனக்கு ஏது பலம்
அசூல் கிடைத்த
பின் இரட்டிப்பு பலம்
அங்கின இங்கின
உரக்க பேசும் பலம்
யாரு கேட்பார் என்னும்
நினைப்பு பலம்..

எவரையும் கேள்வி கேட்பேன்
என்னும் திமிர்
எழுந்தமானமா கருத்து
சொல்லும் என் திமிர்
தேசியத்தில் புதைத்து
போனவர் கொடுத்த திமிர்
எம் தேகம் எல்லாம் தீயை
மூட்டியோர்
விட்டு போன திமிர்...

எல்லாம்
இன்றுதான் பார்த்தேன்
அவர் முகம் சோகமா
என்ன கதைப்பது எதை
கதைப்பது என
ஏங்கும் முகம் பாவமா
தேசியம் பேசவா
புரட்சி பேசவா
சமத்துவம் பேசவா
வேகமா கேட்பவர்களுக்கு
தெரியுமா அங்கு
நான் ஒரு கைதி என்று ...

இனியாவது
புரிந்து கொள்ளுங்கள்
எங்கள் மனநிலை
எம்முடன் இணைத்து
செயலில் வாருங்கள் உளநிலை
எம்முடன் என்றும்
இணைத்து இருங்கள்
உங்கள் பணிநிலை
அதுவே
நான் சொல்லி
செல்லும் இறுதி நிலை...

*~ அஞ்சரன் (யாழில்)*

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

**Expert in Criminal Defence Services.**
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

**Contractual Disputes**
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

**Immigration Law Specialists**
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

**Civil Litigation**

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

**அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்**

Criminal Defence Service | Community Legal Service | The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY · Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk
Emergency 079 4764 1876 079 1225 3418

# அரசியல் அறியாமை இந்த ஆண்டோடு நீங்கட்டும்

பாகம் 145

அலசுவாரம் வாசகர்களுக்கு மலர்ந்துள்ள 2014 புத்தாண்டுவாழ்த்துக்களையும் தைப் பொங்கல் வாழ்த்துக்களையும் ஒரு சேரத் தெரிவிக்கிறேன். இந்தப் புதுவருடமாவது எமது இனத்திற்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தைக் கொண்டுவருமென நம்புவோம். நம்பினார் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு.

இந்த வருடத்தில் நடக்கவிருக்கும் மனித உரிமை மாநாடுகளுட்படப் பல அரசியல் நிகழ்வுகளில் சிறீலங்கா அரசின்மீது அதிகரித்த நெருக்குவாரங்கள் ஏற்படுத்தப்படலாமென்று பல எதிர்வுகூறல்கள் வெளிப்படுத்துகின்றன. ஆனால் வழமைபோல சிறீலங்கா இந்த நெருக்குதல்களைத் தனது நேசநாடுகளின் ஆதரவோடும் ராஜதந்திர வழிமுறைகளோடும் தட்டிக்கழித்துச் சமாளித்து விடுமென்பது நன்கு தெரிந்த விடயமே. ஆயினும், அத்தகைய நெருக்குதல்களைக் கொண்டுவரும் அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற மேற்குலக நாடுகளின் சுயமரியாதை பாதிக்கப்படும் விதத்தில் இலங்கையின் அலட்சியப் போக்கு அமையுமானால் அந்நாடுகள் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கப் போவதில்லை. அதனால், இனிவரும் காலங்களில்? தமிழர் பிரச்சனை தொடர்பான இலங்கையின் அணுகுமுறை மாற்றமடைந்தே ஆகவேண்டிய கட்டாய சூழ்நிலை படிப்படியாக உருவாகியே வருகின்றது. இத்தகைய மாறிவரும் சாதகமான சூழ்நிலைகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள ஈழத்தமிழர்களாகிய நாம் மலர்ந்துள்ள புத்தாண்டில் முழு முயற்சியோடு முயல்வதே இன்றுள்ள எமது கடமையாகும்.

**‘முதற் கோணல் முற்றும்கோணல்’ என்பது போல கவர்னருக்கெதிரான எமது முதற் தீர்மானத்திலேயே நாம் தோற்றுப் போனோம். அரசுக்கு அந்தத் தீர்மானத்தை நிராகரிப்பதற்குப் போதிய நியாயங்கள் இருக்கின்றன.**

உண்மையில் இலங்கையரசுக்கும், பெரும்பான்மைச் சிங்கள சகோதரர்களுக்கும் தமிழர் பிரச்சனையைத் தீர்த்து வைப்பது ஒன்றும் பெரிய சிக்கலான காரியமில்லை. இலங்கைத் தீவைத் தாங்களே ஆளவேண்டும், ஏனையவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக அவர்களுக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டும், என்ற முரட்டுப் பேராசையைத்தளர்த்தினால் விடயம் மிக எளிதில் முடிந்துவிடும். ‘ஆசையே துக்க காரணம்’ என்கிறார் புத்த பகவான். தீவில் தாங்களே ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற நீதிக்குப் புறம்பான வாதத்தை ஏற்கவேண்டுமென்று சிங்களம் விடாப்பிடியாக நிற்பதுதான் இன்று எமது பிரச்சனை ஐநா வரை போய் விட்டதற்கான காரணமாகிவிட்டது.

பிரிவினை கோரி ஆயுதவழிமுறைகளைப் பின்பற்றிய ஒரு தேசிய இனம் தற்போது யதார்த்தத்தை உணர்ந்து ஜனநாயக வழிகளில் போக முற்பட்டாலும், வென்றுவிட்டோமென்ற மமதையில் முற்றான அடிமைகளாக அந்த இனத்தை வைத்திருந்து காலாகாலத்திற்கும் ஆண்டுவிடலாமென்று நினைப்பதுதான் புத்திசாலித்தனமாகத் தெரியவில்லை. தமிழர்கள் நிரந்தர அடிமைகளாய் தங்களின் கீழ் வாழ்வதற்கு அவர்கள் யாருமற்ற அநாதைகளல்ல என்பதைச் சிங்களப் பெரும்பான்மை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பாக்கு நீரிணைக்கு வடக்கே சுமார் ஆறு கோடித் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் வளர்ச்சியடைந்து வரும் இந்தியாவின் மிக முக்கிய தேசிய இனத்தினர். பொருளாதார கலைகலாச்சார முன்னேற்றங்களில் இந்தியாவின் தென் பிரதேசத்தில் முன்னணியில் இருப்பவர்கள். தங்களுக்கு அருகேயிருக்கும் குட்டித் தீவான இலங்கை தங்களுக்கு நெடுக வாலாட்டிக் கொண்டிருப்பதைச் சகித்துக்கொண்டிருக்கப் போவதில்லை. ஏற்கனவே இலங்கையில் தமிழர் நடத்தப்படும் விதம் குறித்தும், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும் கொதித்துப் போய் இருக்கிறார்கள். அவர்களால் என்ன செய்ய முடியும்? என்ற கேள்விக்குக் காலம்தான் பதில் சொல்லமுடியும். ஆனால் இற்றைவரை தமிழ் நாட்டுத் தமிழர்களின் அரசியல் செயற்பாடுகள் இலங்கைப் பேரினவாதிகளின் வயிற்றில் புளியைக் கரைத்துக்கொண்டுதான் இருக்கின்றன. போதாததற்கு ஜெயலலிதாவை இந்தியாவின் பிரதமராக்குவதற்கான முயற்சிகளும் ஒரு புறத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இந்தியாவின் தலைமைப் பொறுப்பைத் தற்செயலாக ஒரு தமிழர் ஏற்றால் என்ன கதியென்று இலங்கைப் பேரினவாதிகள் திகைத்து நிற்கிறார்கள். பெரும்பாலும் இந்தியாவின் பிரதமராக ஜெயலலிதா வருவதற்கான சாத்தியங்கள் தற்போதைக்கு இல்லாவிடினும், எதிர்காலத்திலும் அந்தநிலை, அதாவது ஒரு தமிழர் இந்தியப் பிரதமாராகும் நிலை ஏற்படாதென்று அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை.

மொத்தத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பலம் பொருந்தியவோர் தேசிய இனமாக தமிழினம் வளர்ச்சியடைந்தே வருகிறது. அந்த வளர்ச்சியில் ஈழத்தமிழர்களாகிய எமக்கும் நிறைந்த பாத்தியதை இருக்கிறது. ஆகவே போரிலே தோற்று வீழ்ந்துபட்டவோர் அநாதரவான இனமாக நாம் இன்றில்லை. இந்த உண்மையைச் சரியாகப் புரிந்துகொண்டால் எமது அரசியல் அணுகுமுகைளில் நாம் எத்தகைய போக்கினைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் பெரிய இடர்ப்பாடுகள் ஏற்படப் போவதில்லை. அவ்வகையில் ‘வாழு வாழவிடு’ என்னும் கோட்பாட்டை இறுதிவரை கைவிடாது இலங்கை அரசுடன் எமது பேரம்பேசல்கள் அமைவதே சரியான நிலைப்பாடாக இருக்க முடியும்.

தற்போது தமிழீழ மக்கள் ஜனநாயத்தில் நம்பிக்கை வைத்துத் தாம் விரும்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வடமாகாணத்தின் ஆட்சி பீடத்திலும் ஏற்றியிருக்கிறார்கள். ஆனால் அந்த மாகாண சபையை எவ்வளவு செயலிழக்கச் செய்ய முடியுமோ அவ்வளவு செய்துவிட வேண்டுமென்று பேரினவாதிகளும் தீவிரவாதிகளும், அரசும் காய் நகர்த்துவது தங்கள் தலைகளில் தாங்களே மண்ணையள்ளிப் போடுவதற்குச் சமனாகவே இருக்கிறது. தமிழ் பிரதேசங்களில் தமிழர்களுக்கான காணியுரிமைகளை வழங்கி, அவர்களது பிரதேச பாதுகாப்பையும் அவர்களே பார்த்துக் கொள்ளக் கூடியவாறான அதிகாரப் பரவலாக்கலைச் செய்யாமல் சும்மா சமாதானம், சமாதானம் என்று மேடைக்கு மேடை சிங்களத் தலைவர்கள் கூச்சலிடுகிறார்கள். இவர்கள் ஒன்றையும் எமக்குத் தரப்போவதில்லையென்ற அவநம்பிக்கையைத் தமிழர்களுக்கு ஏற்படுத்திவிட்டு, பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் ஏமாற்றத்தையே தந்து பழக்கப்படுத்திவிட்டு, தெரிவுக் குழுவுக்கு வாருங்கள் நாங்கள் எண்பது வீத பெரும்பான்மையினர் உங்களது கோரிக்கைகளைப் பரிசீலிக்கிறோமென்று நம்மையும், உலகத்தையும் ஏமாற்றுவதற்காக அழைக்கும் போது அந்த அழைப்பை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? மொத்தத்தில் தெரிவுக் குழு என்பதே தமிழர்களுக்குத் தேவையற்ற ஒன்று. பெரும்பான்மையினர்தான் அக்குழுவில் ஒன்றுகூடியிருந்து தமிழர் பிரச்சனையை எப்படித் தீர்பபது என்ற முடிவை எடுக்க வேண்டும். அந்தத் தீர்வுப் பொதியைத்தான் அவர்கள் தமிழர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் அது நடைபெறக்கூடிய சாத்தியம் தென்படவேயில்லை. அவர்களுக்குள் ஆயிரம் முரண்பாடுகளுடன் பெரும்பான்மையினர் மோதிக் கொண்டிருக்கிறார்கள். இந்த லட்சணத்தில் தான் அரசாங்கம் தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு தமிழர்களை அழைக்கிறது.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

போரில் வென்று புகழ் சேர்த்துவிட்ட ராஜபக்ஸ அரசை எப்படி வீழ்த்துவது என்று தெரியாமல் ஐ.தே.க. தடுமாறுகிறது. போரை வென்று கொடுத்தவன் நான் எனக்கு ஆட்சியில் இடமில்லையா? என்ற நப்பாசையில் பொன்சேகா அணிசேர்த்து நிற்கிறார். இழந்து போன குடும்ப ஆதிக்கத்தை எப்படி மீட்டெடுப்பது என்று தெரியாமல் சந்திரிகா தடுமாறுகிறார். யார் ஆண்டாலும் தமது செல்வாக்கை நிலை நிறுத்த வேண்டுமென்று பேரினவாதிகள் முயற்சிக்கிறார்கள். எல்லோருக்கும் தமிழர் பிரச்சனையே துருப்புச் சீட்டாயிருக்கிறது. ஏனெனில், அதைப் பயன்படுத்தித்தான் அரசியல் நடத்த முடியும். அவர்களுக்குள்ளும் நிறையப் பிரச்சனைகளுண்டு, அவற்றுடன் போராடித்தான் அவர்கள் எம்மை ஆளமுடியும். இத்தகைய பலவீனங்கள் நிறைந்த சந்தர்ப்பத்தை நாம் ஏன் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியாது? நமது அரசியல் காய் நகர்த்தல்கள் புத்திசாலித்தனமானதாக இருக்குமாயின் எமது மாகாண சபை நிர்வாகத்தையும் வெற்றிகரமானதாகக் கொண்டு செல்ல முடியும்.

இந்தப் பத்தியில் வட மாகாண கவர்னரை நீக்குவது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி முன்னரும் விமர்சிக்கப்பட்டது. அதற்கான காரணங்கள் சரிவர முன்வைக்கப்படவில்லை என்பதுசிலாகிக்கப்பட்டது. உண்மையில் அந்தத் தீர்மானம் எந்தளவுக்கு அறிவுபூர்வமானது என்று தெரியவில்லை. பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்திலுள்ள எந்தவித சட்டரீதியான பக்க பலங்களுமின்றி, வெறும் உணர்வு பூர்வ அடிப்படையில், அரசுடன் தேவையற்றவோர் முரண்பாட்டை ஏற்படுத்தும் விதத்தில், நன்கு சட்டம் தெரிந்த முன்னாள்நீதிபதியான வட மாகாண முதல்வரின் தலைமையில், அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கவர்னரின் மீது விரும்பத்தகாத குற்றங்களெதுவும் சுமத்தப்படவில்லை. அரசியலமைப்புக்குச் சற்றும் உடன்பட்டுப்போகாத அந்தத் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்ட ஒரே காரணம் கவர்னர் ஓர் ராணுவப் பின்னணியில் வந்த அதிகாரி என்பது மட்டும்தான். அது போதுமானதல்ல. யுத்தக் குற்றச்சாட்டொன்று அவர்மீது சுமத்தப்பட்டிருந்தாலும் பரவாயில்லை. ஆனால், உள்நாட்டில் அவருக்கெதிராக எந்தக் குற்றச்சாட்டுகளுமில்லை.

**மொத்தத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பலம் பொருந்தியவோர் தேசிய இனமாக தமிழினம் வளர்ச்சியடைந்தே வருகிறது. அந்த வளர்ச்சியில் ஈழத்தமிழர்களாகிய எமக்கும் நிறைந்த பாத்தியதை இருக்கிறது. ஆகவே போரிலே தோற்று வீழ்ந்துபட்டவோர் அநாதரவான இனமாக நாம் இன்றில்லை.**

‘முதற் கோணல் முற்றும்கோணல்’ என்பது போல கவர்னருக்கெதிரான எமது முதற் தீர்மானத்திலேயே நாம் தோற்றுப் போனோம். அரசுக்கு அந்தத் தீர்மானத்தை நிராகரிப்பதற்குப் போதிய நியாயங்கள் இருக்கின்றன. நமக்கோ அந்தத் தீமானத்தைக் கொண்டுவர கவர்னரோடு கொண்ட உணர்வு ரீதியான வெறுப்பைத் தவிரச் சட்டரீதியான எந்தக் காரணமும் இருக்கவில்லை. எல்லா நாடுகளிலும் ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள் பொறுப்பான அரச சேவைகளில் அமர்த்தப்படுவது ஒன்றும் பெரிய விடயமில்லை. ராணுவ சேவையிலிருந்த ஒருவர் சிவில் அதிகாரியாக மாறிச் சேவையாற்ற இயலாதவராகிவிடுவார் என்ற வாதத்தை மட்டும் முன்வைப்பது சிறுபிள்ளைத் தமானது. துரதிஷ்டவசமாக, நமது சமூகம், அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அவ்வாறு எண்ணிச் செயல்பட்டிருக்கிறது. இனி மேலாவது புத்திசாலித்தனமாகச் செயற்படுவோம்.

*தொடருவம்...*

பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

லண்டனை மையமாகக் கொண்டு இயங்கும் பத்திரிகை நிறுவனத்துக்கு Tooting மற்றும் Croydon பகுதிகளில் பத்திரிகை விநியோகஸ்த்தர்கள் உடன் தேவை !

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

Contact Number - 020 7043 4310

SRI KANTH & CO SOLICITORS



We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649



நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
Niru BRAND®
Bringing Great Food to Life.
The No 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

# தென்னாபிரிக்கா: முடியாத விடுதலைப் போரும் விடியாத வாழ்வும்




**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

நிறவெறிக்கு எதிரான படைக்கலன் ஏந்திய தென் ஆபிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டம் பல தடங்கல்கள் மத்தியில் திசை மாறியது உண்டு. தென் ஆபிரிக்க பொதுவுடமைக் கட்சியின் மையக் குழு உறுப்பினராக இருந்த நெல்சன் மண்டேலா 1962 நீதி மன்ற விசாரணையின் போது தான் அக்கட்சியின் உறுப்பினர் அல்ல என மறுத்தார். அப்போது தடை செய்யப்பட்ட சட்ட விரோத அமைப்பின் உறுப்பினர் என்று சொல்ல மண்டேலா விரும்பவில்லை. இதை வைத்து வரலாறு திரிக்கப்பட்டு மண்டேலாவிற்கு பொதுவுடமைக்கும் சம்பந்தம் இல்லை என மாற்றுப்பட்டு விட்டது.

தென் ஆபிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டம் அரசியல் முனையில் வெற்றி கண்டது. அதற்கு முக்கிய காரணம் உலகெங்கும் இருந்து அவர்களிற்கு கிடைத்த பேராதரவு. தென் ஆபிரிக்க மக்களிற்காகப் போராடிய ஆபிரிக்க தேசிய காங்கிரசின் படை பலம் அப்போதைய நிறவெறி ஆட்சியாளர்களின் படை பலத்துடன் ஒப்பிடுகையில் ஒரு தூசி என்றே சொல்லலாம். ஆபிரிக்க தேசிய காங்கிரசு படைபலத்தைப் பெருக்கி புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி வெள்ளையர்கள் சுரண்டிச் சேர்த்த சொத்துக்களை நாட்டு உடமையாக்குவதை வெள்ளை ஆட்சியாளர்களும் அவர்களின் மேற்கத்தைய நண்பர்களும் விரும்பவில்லை. இதைத் தவிர்க்க சிறையில் இருந்த மண்டேலாவுடன் ஒரு உடன்பாடு எட்டப்பட்டது. பொதுவுடமைவாதி மண்டேலா தாராண்மைவாதியாக்கப்பட்டார்.

தென் ஆபிரிக்க மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆனால் சமூக விடுதலை, பொருளாதார விடுதலை போன்றவை தென் ஆபிரிக்க மக்களுக்குக் கிடைத்ததா? தற்போது உலகிலேயே எழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் இடைவெளி அதிகமான நாடுகளில் தென் ஆபிரிக்காவும் ஒன்று. கறுப்பின மக்களின் சராசரி வருமானம் வெள்ளை இன மக்களின் சராசரி வருமானத்துடன் ஒப்பிடுகையில் பத்தில் ஒரு பங்காகும். கறுப்பின மக்களில் 44 விழுக்காட்டினர் மோசமான வறுமையில் அன்றாட வாழ்விற்கே அல்லல் படுகின்றனர். வெள்ளையர் ஆட்சி செலுத்திய போது வெள்ளையர் வாழ்ந்தனர். கறுப்பினத்தவர்கள் தாழ்ந்தனர். கறுப்பினத்தவர்கள் ஆட்சி அதிகாரம் பெற்ற பின்னரும் வெள்ளையர்கள் வாழ்கின்றனர் கறுப்பினத்தவர்கள் தாழ்கின்றனர். பல நூற்றுக் கணக்கான கிராமங்கள் நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மின்சாரம் போன்ற பொது வசதிகளின்றி இருக்கின்றன.

ஆபிரிக்காவின் வளங்களைக் கொள்ளையடித்தவர்களிடம் இருந்து சொத்துக்களை ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்க முடியவில்லை. ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிப்பதற்கு இடப்பக்கத்தில் இருந்து வலப்பக்கம் திரும்பியது. 1998-ம் ஆண்டிற்கும் 2011-ம் ஆண்டிற்கும் இடையில் தென் ஆபிரிக்காவில் சிசுக்கள் இறக்கும் விழுக்காடு இரு மடங்காக அதிகரித்து விட்டது. தென் ஆபிரிக்காவில் வன்முறைகள் தொடர்கின்றன. பெண்களுக்கு எதிரானவன்முறைகள் அதிகரிக்கின்றன. வேலையில்லாப்பிரச்சனை 25முதல் ஐம்பது விழுக்காடாக இருக்கின்றது. மூன்று இலட்சத்திற்கு அதிகமானவர்கள் எச்.ஐ.வீ நோயால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

பல ஆபிரிக்க நாடுகள் உலகிலேயே வேகமாக வளரும் பொருளாதாரங்களாக மாறியுள்ள வேளையில் தென் ஆபிரிக்காவின் பொருளாதாரம் 1.9விழுக்காடு மட்டுமே வளர்கின்றது. நெல்சன் மண்டேலா அரசியலில் இருந்து ஓய்வு பெறும்போது தனக்கு அடுத்துசிரில் ரமபோசா வரவேண்டும் என எதிர்பார்த்தார். ஆனால் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தபோ எம்பெக்கியைத் தேர்ந்தெடுத்தது. இது வரை சமூக ஏற்றத் தாழ்வுகளால் ஒரு பெரும் மக்கள் எழுச்சி வராமல் பார்த்துக் கொண்ட தென் ஆபிரிக்க ஆட்சியாளர்கள் இன்னும் எத்தனை நாட்கள் முறையான பொருளாதார மேம்பாடின்றி தாக்குப் பிடிக்க முடியும். சில பொருளாதார நிபுணர்கள் நெல்சன மண்டேலாவிற்குப் பின்னர் தென் ஆபிரிக்காவில் பொருளாதாரம் சீர் குலையும் இனக்குழுமங்களிடை மோதல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கின்றனர்.

மண்டேலாவின் இருப்பு தென் ஆபிரிக்காவில் ஒரு திடமான அரசியல் சூழ்நிலையை உருவாக்கி இருந்தது. ஒரு அரசியல் நிகழ்வு பொருளாதாரத்தில் எவ்வளவு தாக்கம் செய்யும் என்பதை அந்த நிகழ்வின் பின்னர் அந்த நாட்டின் பங்குச் சந்தையின் விலைகளின் அசைவு சுட்டிக்காட்டும். நெல்சன் மண்டேலாவின் மறைவின் பின்னர் தென் ஆபிரிக்கப் பங்குச் சந்தை விலையில் சிறிய அளவு அதிகரிப்பு ஏற்பட்டது. இது தென் ஆபிரிக்கப் பொருளாதாரம் இப்போது உள்ள நிலையில் தொடரப் போகிறது என்பதை அதாவது கறுப்பின மக்களுக்குப் பாதகமான நிலை தொடர்ப் போகிறது என்பதைக் காட்டுகிறது.

> **ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் அரச பதவிகளில் அமர்த்துபவர்களுக்கு தகுதிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அவர்களின் இன ஒதுக்கல் கொள்கைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. இதனால் அமைச்சரவைப் பொறுப்புக்களிலும் அரச உயர் பதவிகளிலும் தரம் குறைந்தவர்கள் அமர்த்தப்பட்டனர்.**

ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் அரச பதவிகளில் அமர்த்துபவர்களுக்கு தகுதிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அவர்களின் இன ஒதுக்கல் கொள்கைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. இதனால் அமைச்சரவைப் பொறுப்புக்களிலும் அரச உயர் பதவிகளிலும் தரம் குறைந்தவர்கள் அமர்த்தப்பட்டனர். இது தென் ஆபிரிக்க அரசின் செயற்படுதிறனைப் பாதிக்கின்றது.

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் ஒரு திறன் மிக்க ஆட்சி மூலம் கறுப்பின மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதில் இன்னும் வெற்றி காணவில்லை. இந்த நிலை தொடருமானால் ஆபிரிக்காவிலும் ஒரு அரபு வசந்த பாணியில் மக்கள் புரட்சி வெடிக்கும் ஆபத்து மண்டேலா உயிருடன் இருக்கும் போதே இருந்தது. அவரது மறைவின் பின்னர் அது இன்னும் அதிகரிக்கலாம்.

மண்டேலாவிற்குப் பின்னர் ஆபிரிக்காவின் வழிகாட்டியாகவும் அரசியல் திடத் தன்மை பேணக் கூடியவராகவும் ஒருவர் தேவை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இப்போது சில ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் உறுப்பினர்கள் டெஸ்மண்ட் டுடுவின் பக்கம் திரும்புகிறார்கள்.

## தேடிப் பார்க்கின்றேன்...

*– வல்வையூரான் (யாழில்)*

இன்னமும் பெரிதாக எதுவும்
இங்கு மாறிவிடவில்லை
எல்லாம் அப்படியே இருக்கின்றன
இயல்பாகவே மண்ணில் இருக்கும்
செங்குருதியின் நிறம்
தோட்டத்தின் நடுவே
இழுத்து போடப்பட்டு
உருண்டு போய் பந்தாக
காவிளாச் செடிகள்
பச்சையாக வெட்டி
சூடு மிதிக்கப்பட்ட
பனை ஓலைகளும் மூரி மட்டைகளும்
வேலிக்கரையில் வளர்ந்து
ஆழமாக வேர் விட்ட அறுக்கம்புல்
வேலியில் படந்து
காய்த்து தொங்கும் பாவல்காய்
முன்னர் பாட்டி வைத்த இடத்திலேயே
அடுப்பு எரிக்க – இப்போதும்
பனையின் மட்டைகளும்
கொக்காரைகளும்
அதே சாணி மெழுகிய நிலம்
தாத்தாவின் கயித்து கட்டில்
கொடியில் படபடக்கும்
தோய்த்த நாலுமுழ வேட்டி
துலா கயிற்று கிணறு
தாவாரத்தில் தொங்கும்
தென்னோலை பூக்குடல்
வானம் காட்டும் ஓலைக் கீற்று கூரை
புகையேறிய கறுத்துப்போன
குமிழ் பல்ப்
ஓலைக் கீற்றில் சிக்கிய நூலில்
தொங்கும் கொசுக்கூட்டம்
சன்னமாக எரியும் குத்துவிளக்கு
மூலையில் சுருட்டி வைத்த பாய்
அதே அலுமினியம் பாத்திரங்கள்
சீனி போட்டு வைக்கும் தகர டப்பா
வாசலில் பூக்கும் செவ்வரத்தம் பூ

பல் காட்டும் நித்தியா கல்யாணி
முற்றத்தில் நிற்கும்
கொய்ய மரத்தில் அணிலின் கூடு
கிளியும் அணிலும் கடித்து போட்ட
விலாட்டு மாமரத்தின் அங்கொன்றும்
இங்கொன்றுமான காய்கள்
இப்படி இன்னமும் பெரிதாக எதுவும்
இங்கு மாறிவிடவில்லை
எல்லாம் அப்படியே இருக்கின்றன
இவற்றோடு ஒட்டி அணு அணுவாக
ரசித்து அனுபவித்து இவற்றோடு
வாழ்ந்து இவற்றை சொர்க்கமாக
எண்ணி வாழ்ந்த என்னை
தேடித் தேடித் பார்க்கின்றேன்
என்னால் காணமுடியவில்லை
இவற்றிலிருந்து அந்நியனாகவே
இப்போது நான்

ஏனெனில் நான் புலத்தில் இருந்து
வந்தவன் இன்னமும் பெரிதாக
எதுவும் இங்கு மாறிவிடவில்லை
எல்லாம் அப்படியே இருக்கின்றன

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா



# நாற்சார் வீடு

அண்மையில் தமிழ்த் திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்த போது அதில் வந்த நாச்சார் வீடு என்னை பாரிய நினைவுக்கு இழுத்துச் சென்றது. நாகரீக மாற்றத்துக்குள் நாச்சார் வீடுகளும் இப்பொழுதும் எம் தாயக பூமியிலும் அழிந்து விட்டது. நவீன வீடுகள், மாடிகள் எங்கும் காணப்படுகின்ற காட்சிகள். கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் நாச்சார் வீடுகள் பிரசன்னம் பெற்றிருந்தன.

காசு சேர்த்து கல் வீடு கட்டுவதை வழக்கமாக இருந்த காலம் அது. நடுத்தர வர்க்கக்குடும்பங்கள் மட்டுமல்ல பணவசதிகள் படைத்தவர்களின் வீடுகளும் நாச்சார் வீடுகளாகவே காணப்படும். நாலுபுறமும் அறைகள் கொண்ட கட்டடங்கள் விறாந்தையோடு அமைய நடுவில் முற்றத்தை கொண்டு அமைவது நாச்சார் வீடு.

தெல்லிப்பளையில் கொல்லங்கலட்டியில் அமைந்திருந்த எங்கள் வீடும், நாச்சார் வீடு தான். என்னுடைய பத்தாவது வயது வரை முன்புறம் தலைவாசல் என ஓலைக் கொட்டிலைக் கொண்டிருந்தது. அதனோடு ஒட்டி 'ப' வடிவில் பக்கவாட்டாக சமையல் கூடம் அடுத்து களஞ்சிய அறை அதையடுத்து மூத்த அண்ணன் பாவித்த அறை பின்னதாக மூன்று படுக்கையறைகள், அடுத்த பக்க வாட்டாக நீண்ட விறாந்தை தலை வாசல் வரை அமைந்திருந்தது. மனை சாத்திரப்படி வடக்கு வாசல் வீடு அது. கிழக்கு பார்த்த சமையல் கூடம் அமைந்திருந்தது. வடகிழக்கு மூலையில் சமையல் கூடத்துக்கு அண்மையாக கிணறு அமைந்திருந்தது.

எமது காணியின் வடகிழக்கு மூலையில் உபதபால் கந்தோரும் எம் கட்டடத்தில் இயங்கியது. அதில் நிரந்தர உப தபால் அதிபராக இருந்தவர் சிவதாசன். வெகு அப்பாவி. கொண்ணை. 'ஹலோ' என்று சொல்லவே ஒரு நிமிடம் எடுக்கும். அவரை மகாஜன பள்ளிக்கூடப் பெடியள் பகிடி விடுவதும் அவரோடு பெடியள் மல்லுக்கட்டுவதும் வழக்கமான காட்சிகள். அந்த 16 பரப்புக் காணியின் நடுவே நாச்சார் வீட்டைச் சுற்றி எலுமிச்சை, மாதுளை, நாரத்தை என்ற தோடை, பப்பா, மா, பலா, வாழை, முருங்கை மரம், கமுகுகள், தென்னைகள், வேம்புகள் என பயன் மரங்கள் அமைந்திருந்தன.

தலைவாசல் கொட்டிலையொட்டி ஒரு பெரிய பலாமரம் இருந்தது. தலைவாசல் கொட்டிலை மேயப் பயன்படுவதும், சுற்று வேலிகளை அடைக்கப் பயன்படுவதும் வீட்டின் பனை, தென்னை ஓலைகள் தான். பின்புறம் ரத்தினமாமி வீடு. சீமைக்கிளுவைக் கதியாலால் அவவின் எல்லை வேலி அடைக்கப்பட்டிருந்தது. அடுத்த புறம் பனை வளவைக் கொண்ட காணி எல்லை வேலியாக அமைந்த காணி, பால் கிளுவைக் கதியால்கள் மிக நெருக்கமாக வரிச்சுக்கட்டி அடுக்கப்பட்டிருந்தது. கோழிக் குஞ்சுகள் கூட உள்நுழைய முடியாத அறுக்கையாக அமைக்கப்பட்ட கிளுவங்கதியால் வேலி அது. குசினிக்கு நேர் முன்னதாக இருந்த கொட்டிலுக்குள் மாடு, ஆடுகளும் அந்த கொட்டிலுக்குள்ளேயே மா வறுக்க, மிளகாய் பொரிக்க என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

குசினிக்கும் தலைவாசலுக்குமிடைய நிறைய பலா மரம், நிறைய காய்க்கும். சின்னச்சுளைகள் கொண்ட பலா மரம் தான். பலாமர இலைகள் முற்றத்தில் நிரந்தரமாகக் கொட்டப்படுவதும், ஒவ்வொரு காலையிலும் குத்தூசியால் அதை குத்திச் சேர்த்து மாட்டுத்தொட்டிலுக்குள் போடுவது எங்கள் வேலை.

கூரையால் வடியும் மழை நீர் ஓட்டால் வடியும். உட்புறம் மடிப்பு நாச்சார் வீட்டு முற்றத்தில் விழும். தலை வாசலை ஒட்டியிருக்கும் வடி வாய்க்காலால் அது உடன் வெளியேறி விடும். மாரி மழை காலத்தில் நடு முற்றம் வெள்ளத்தால் தேம்புவதும் தலை வாசல் வழியாக அது வெளியேறும் வாய்ப்புகளும் உண்டு.

சித்தி பின் ஓலை தலைவாசல் இருபுறமும், குசினி என்பன கொண்ட அமைப்பாக பின்னர் மாற்றி விட்டா. நீர் இலகுவாக வடியவும் நிலத்தடி குழாய் அப்பொழுது அமைக்கப்பட்டிருந்தது. அதுவரை நடு முற்றம் மண் முற்றம் தான். தைப்பொங்கல், சித்திரைப் பொங்கல், ஆவணி ஞாயிறுப் பொங்கல் என கோலம் போட்டு மிகச் சிறப்பாக அந்த முற்றத்தில் தான் பொங்கல்கள் பொங்கப்படும்.

இரவு நேரம் நறுமணம் வீசும் மல்லிகைப் பந்தல் ஒன்று மிக நேர்த்தியாக அந்த முற்றத்தில் இருந்தது. இரு மருங்கிலும் முருங்கை மல்லிகையோடு ஒட்டியிருந்தன. அவை அம்மா, சித்தி ஆகியோரின் கல்யாண நாட்களில் நடப்பட்ட கன்னிக்கால் முருங்கை என்று சொல்லப்பட்டன.

தலைவாசல் கல் வீடானபோது அந்த மல்லிகையும், குண்டாக இருந்த முருக்கை மரங்கள் இரண்டும் நவீன மயப்படுத்தலுக்கு பலியாகின. மண் முற்றம் சீமெந்து முற்றமான பின்னரும் தைப் பொங்கல் அந்த முற்றத்தில் தான். சோக்கால் போடப்பட்ட கோலத்தோடு நடக்கும். தலைவாசலுக்கு படலை மரத்தால் தான் இருந்தது. இடையேயான பாதையோரம் செம்பரத்தம் செடிகளால் மலர்ந்திருந்தது.

**ஊரின் வாசம்**

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

மாரிக்கு வெட்டி கட்டையாக்கப்பட்டாலும் நிரந்தரமாக பூத்து நிற்கும் செவ்வரத்தைகள் அது. வீட்டின் இடையிடையே மத்தியான உணவாக செவ்வரத்தம் பூ வறை இருந்த காலம் அது. படலையையொட்டி சங்கடப் படலை இருந்தது. சிறிய ஓலைக் குடிலைக் கொண்ட சங்கடப் படலை அது. பலகை சட்டங்களால் ஆன அமைப்பைக் கொண்டிருந்தது. போவோர், வருவோர் நின்று நிரல் ஆற, களைப்பாற மண்பானையில் தண்ணீரும், தகரப் பேணியும் வைத்திருப்பது வழமை. ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தப் பானை புதுத் தண்ணீரால் நிரப்பப்படும்.

தலைவாசல் மாறிய கையோடு அந்தச் சங்கடப் படலையும் அகற்றப்பட்டு நவீன வேலைப்பாடுகளோடு இரும்புப் பந்தலை மதில்களோடு சேர்ந்து முன்புறத்தை அலங்கரிக்கத் தொடங்கின. அதுவரை செவ்வரத்தைகள் பக்கவாட்டில் செழித்திருந்தவை எல்லாம் மாறி நிறங்களை அழகாகத் தரும் குறோட்டன்கள் இருபுறமும் வைக்கலாகின. நவீனபடுத்தலின் விளைச்சல் இவை.

பின்புறம் ரத்தினமாமி வீட்டுக்குள் போவதற்கு இருந்த பொட்டுக் கடவை. நளாபளா வளைவைத் தாண்டி, பாப்பம்மா மாமி வீட்டிற்கு போவதற்கு இருந்த கடவை. பெரிதாக வளர்ந்திருந்த புளியமரம். முற்றத்தில் காய்கின்ற பனங்காய் பிராட்டு, எலுமிச்சம் ஊறுகாய் காலத்துக்கு காலம் காய்த்து வெளவால்களை வரச் செய்கின்ற நளாபளா வளவு மூளையில் இருந்த அந்த இலுப்பமரம். மற்றும் வேப்பமரத்தடியில் கதிர்பாயை விரித்து வேப்பம்பூ சேகரித்து வடகம் போடுகின்ற அம்மம்மாவின் கை வண்ணம் எல்லாமே கனவாய் பழம் கதையால் போய் விட்டன.

போரின் விளைவாய் இடிபாடுண்ட மொட்டைச் சுவர்களையும், பட்ட மரங்களையும் தான் இரு ஆண்டுகளின் முன்னர், இருபது ஆண்டுகளின் பின் நான் போனபோது பார்க்க முடிந்தது. நாங்கள் பிறந்து, தவழ்ந்து வளர்ந்த வீட்டின் காட்சியைப் பார்த்த போது, நெஞ்சு விம்மியது. எங்களுக்கு ஏற்பட்ட உயிர் இழப்புகள் ஒரு புறம். ஆனால் இந்த இயற்கை இழப்புகளை எவ்வாறு நிரப்ப முடியும்.

# தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு நிகழ்வு






















காலஞ்சென்ற தமிழறிஞர் தனிநாயம் அடிகளாரின் பிறந்த தின நூற்றாண்டினை முன்னிட்டு லண்டனில் இயங்கும் தனிநாயம் அடிகளார் தமிழ் கலாச்சாரக் கூடம் கடந்த வார இறுதியில் இசை நிகழ்ச்சிகளை நடாத்தியது. சனிக்கிழமை (ஜனவரி 4) என்பீல்ட் பகுதியில் Lea Valley High School மண்டபத்திலும், ஞாயிற்றுக்கிழமை மில்ரன் கீன்ஸ் பகுதியிலுள்ள Ridgeway Centre மண்டபத்திலும் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

என்பீல்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கஜநாத் ஜெயக்குமார், கமலநாத குருக்கள் ஆகியோர் தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணி பற்றி உரையாற்றினர். தனிநாயகம் அடிகளார் எழுதிய கட்டுரைகளடங்கிய 'தமிழ்த்தூது' என்ற நூலும் அங்கு வெளியிட்டு வைக்கப்பட்டது. இசைநிகழ்ச்சியினை ரெயின்போ இசைக்குழுவினர் வழங்கினர். தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த ரீ.எம். சௌந்தரராஜன் அவர்களது புதல்வர் ரீ.எம்.எஸ் செல்வகுமார், லண்டன் கலைஞர்கள் சிறீபதி, பாரதி ஆகியோருடன் இரண்டாம் தலைமுறைச் சேர்ந்த பல இளையவர்களும் திரையிசைப் பாடல்களைப் பாடி சபையோரை மகிழ்வித்தனர். வேறும் சில கலைநிகழ்ச்சிகளும்நடைபெற்றன.

முன்னணி தமிழ் தொலைக்காட்சிகளுடன் அனைத்து SKY சனல்களும் £ 200 இருந்து

079 4715 9598 - 074 2472 6790

KATPY SATELLITE கற்பி சட்ரலைற்

Satellite & Communication Experts, Satellite Dishes, Satellite Receivers, New Installation, Troubleshooting, Upgrades

Special Offer £100

சட்டலைட் திருத்த வேலைகள் சகல இடத்தில் பொருத்துதல் மற்றும் டிஸ்க் பொருத்த முடியாத இடங்களில் இன்டர்நெற் தொலைக்காட்சி (IP Tv) பொருத்துதல் போன்ற வசதிகள் செய்து தரப்படும்

சகலவிதமான சட்டலைட் தொலைக்காட்சி இணைப்புக்களையும் சட்டலைட் ரிசீவர்களையும் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# தன்னைப் போல் ஒருத்தி




- சிறுகதை

“காரோ ...”

மூன்றாவது தடவையாக ஆஞ்சலிகா என்னைக் கூப்பிட்டாள். காரோ என்பது அன்பே என்பதற்கான இத்தாலியச்சொல். “சொல்லுடி ...’ அவளுக்குத் தமிழ் தெரியாது என்றாலும் இந்த வார்த்தைப்புரியும்.

‘ அந்த டோல்சே - கப்பானா (Dolce & Gabbana The One: "Street of Dreams") விளம்பரம் பார்த்தாயா?” இத்தாலியத்தில் கேட்டாள். “ஆமாம் பார்த்தேன், ஸ்கோர்லத் யோகன்சன் நடித்தது... கறுப்பு வெள்ளையில் கவனத்தை ஈர்க்கின்றது ’ ஆங்கிலத்தில் பதில் கொடுத்தேன்.

“அதில் வரும் ஸ்கோர்லத் யோகன்சனைப் போல அச்சு அசப்பில் நான் இருக்கின்றேன் அல்லவா ’

எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. இருவருக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. ஸ்கோர்லத் அத்தனை அழகு. யுடிப்பில் வரும் அத்தனை விளம்பரங்களையும் தவிர்க்க முடியாத அந்த ஐந்து வினாடிகள் மட்டும் காத்து இருந்து ,முழு விளம்பரத்தையும் பார்க்காமல் நேரிடையாக பாடலுக்கு தாவி விடுவேன். ஆனால் இந்த டோல்சே கப்பானா வாசனைத் திரவிய விளம்பரம் மட்டும் விதிவிலக்கு.ஸ்கோர்லத் ஜான்சன் மட்டும் என் கண் முன் வந்து நின்றால் இந்த ஆஞ்சலிகா, இந்த இத்தாலிய வேலை , பணம், புகழ் அத்தனையையும் விட்டுவிட்டு ஸ்கோர்லத் காலடியில் கிடப்பேன்.

எனது நக்கல் சிரிப்பைக் கவனித்த ஆஞ்சலிகா , பழைய நாளிதழ்களில் சிலவற்றுடன் தனது படங்களையும் எடுத்து வந்து அதில் இருந்த ஸ்கோர்லத் படங்களுடன் ஒப்பிட்டு பேசிக்கொண்டு இருந்தாள். ஆஞ்சலிகாவும் அவளது படங்களில்நன்றாகத்தான்இருந்தாள்.ஆனால்ஸ்கோர்லத்யோகன்சனின் சினிமா ஸ்டில்களுக்கு முன்னால் ஆஞ்சலிகா தூசு.

பெரும்பாலும் வெள்ளைக்காரப் பெண்கள் ஓர் அதிக ஈர்ப்புடன் இருப்பதற்கான காரணம் அவர்களின் உடலுக்கு ஏற்ற உடை தேர்வும் அவர்களின் நிறமும். ஆஞ்சலிகா உட்பட, பெரும்பாலான வெள்ளைக்காரப் பெண்களை மாநிறமாக மாற்றிவிட்டால் நம்மூரின் சுமாரானப் பெண்களைவிட சுமாராகத்தான் இருப்பார்கள். ஆனால் ஸ்கோர்லத் ஒரு விதிவிலக்கு. அவளை ஆப்பிரிக்க கறுமை நிறத்திற்கு மாற்றினாலும் அழகு. அனேகமாக கிளியோபட்ரா கறுப்பு ஸ்கோர்லத்தாக இருந்து இருக்கவேண்டும். ஐரோப்பா வந்ததும் வெள்ளைக்காரத் தோழி இருக்கின்றாள் என்பதை உலகத்திற்குக் காட்டிக் கொள்ள முதலில் சிக்கும் பெண்ணிடம் பெரும்பாலான இந்தியர்கள் அதீதநட்புடன் இருப்பார்கள். இங்கு நட்பு படுக்கைக்கும் சில சமயங்களில் போய்விடுவதால் அது காதலாய் கசிந்துருகிவிடுகின்றது. இந்திய் ஆண்களுக்கு வெள்ளைக்காரத் துணை இருப்பது, ஒருவிதத்தில் சமூக பாதுகாப்பு மேலும் விசா போன்ற விசயங்களுக்கும் துணைபுரியும், கடைசி வருடப்படிப்பின் பொழுது ஆஞ்சலிகாதான் மெக்டோனல்ட்ஸில் வேலை பார்த்து என்னைப் படிக்க வைத்தாள். ஆக வெள்ளைக்கார மோகம் காமத்தில் ஆரம்பித்து இப்பொழுது ஓர் அளவிற்கு வேறு வழி இல்லாத அன்பில் வந்து நிற்கின்றது. மறுநாளும் ஆஞ்சலிகா , ஸ்கோர்லத் புராணத்தை ஆரம்பித்தாள்.

“கடைசிபத்து ஆண்டுகளாகவே ஸ்கோர்லத் போல இருக்கின்றேன் என எனக்குத் தெரியும்... ஆனால் யாரிடமும் சொன்னதில்லை... உன்னைக்கூட , உனது விருப்பமான நடிகை ஸ்கோர்லத் யோகன்சன் என சொன்னபிறகுதான் மிகவும் பிடித்துப் போனது ” நான் ஒன்றும் சொல்லவில்லை. கல்லூரியில் படிக்கும்பொழுது நடிகர் மாதவன் அலைபாயுதே படத்தில் காட்சிதந்த பக்காவாட்டுதோற்றம் எனக்கும் இருந்ததாக நானும் நினைத்துக் கொண்டதுண்டு. பின்னர் நந்தா சூரியா போல அசப்பில் நான் இருப்பதாக நினைத்துக் கொண்டு சிலப்படங்கள் எடுத்து வைத்திருக்கின்றேன். அவர்களுக்கும் எனக்கும் ஸ்னான பிராப்தி கூட இல்லை என்பது மிகவும் தாமதமாகத்தான் புரிந்தது. ஒரு நாள், இரு நாள்,, இரு மாதங்களாய் இந்த ஸ்கோர்லத் புராணம் தொடர்ந்தது. எனக்கு ஸ்கோர்லத்தின் மேல் வெறுப்பு வந்துவிடுமோ என்ற பயத்துடன் ஒரு வேளை என் ஆஞ்சலிகா பைத்தியமாகிவிட்டாளோ என்ற பயமும் சேர்ந்துவிட்டது. ஒருநாள் என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று

“ஆஞ்சி, நீ ஸ்கோர்லத் யோகன்சனைப் போல கொஞ்சம் கூட முக அமைப்பில் இல்லை ”

“இல்லை, அவளைப்போலத்தான் இருக்கின்றேன்.. வேண்டுமானால் என் அம்மா அப்பா என் தோழிகளைக் கேட்போம்” சாமியாடும் பெண்களைப் போலப் பேசினாள்.

அந்த வார இறுதியில் அனைவரும் வந்தார்கள். அவர்கள் எவ்வளவு எடுத்து சொல்லியும் ஆஞ்சலிகா தன் கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை. இறுதியாக ஆஞ்சலிகாவை ஒரு மனநல மருத்துவரிடம் கூட்டிப்போவது என முடிவு எடுக்கப்பட்டது. இந்தியத் துணைக்கண்ட ஆண்களுடன் காதல் வயப்படும் ஐரோப்பிய பெண்கள் கொஞ்சம் மறை கழன்டவர்கள் என்ற எனது கருதுகோள்களில் ஒன்று நிஜமாகிவிடுமோ எனத் தோன்றியது.

பலத்தரப்பட்ட பரிசோதனை, தனி ஆலோசனைகளுக்குப்பின்னர்... “Apopheniaவில் ஒரு வகை இது... Pareidolia, மேகங்களில் , மலைகளில் மனித உருவங்களையோ தனக்குப்பிடித்த உருவங்களையோ பார்ப்பதைப்போல... தான் தனக்குப் பிடித்த ஓர் ஆளுமையைப்போல முகச் சாயலுடன் இருக்கின்றோம் என்பதை ஆழமாக நம்புவது.. இந்த வகையான மயக்குறு சூழலில் உங்களது ஆஞ்சலிகா இருக்கின்றார்” என்ற மருத்துவர் தொடர்ந்து “ஆஞ்சலிகாவைவேறு ஏதாவது ஊருக்கு சுற்றுலாவாக கூட்டிக்கொண்டுபோங்கள்... ஸ்கோர்லத் யோகன்சனைப் பற்றி பேசாதீர்கள்’ என அறிவுறுத்தினார்

அதற்குப்பின்னர் ஆஞ்சலிகா, ஸ்கோர்லத்தைப் பற்றி எதுவும் பேசவில்லை. உற்சாகமாகவே பாரீஸ் பயணத்திற்குத் தயாரானாள். ரோம் விமானநிலையத்தில் நடைமுறைகளை முடித்துவிட்டு விமானத்திற்காகக் காத்துக் கொண்டு இருக்கையில், தூரத்தில் ஒரு பரபரப்பு. அது நடிகை ஸ்கோர்லத் யோகன்சன் என மக்கள் உற்சாகமாகினர். இந்த சூழலில் எனக்கு ஆஞ்சலிகாவே முக்கியம் எனத் தோன்றியதால் அங்கு போகவில்லை. ஆஞ்சலிகாவிற்கு அந்த பரபரப்பில் கவனம் போகவில்லை. அவள் இளையராஜா பாடல்களை கேட்டுக்கொண்டு இருந்தாள். ஸ்கோர்லத் பாரீஸ் தான் போகப்போகின்றார் போலும்... எங்கள் இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். பிரயாணிகள் தங்களது கைபேசிகளில் அவரைப் படமெடுத்துக் கொண்டு இருந்தனர். ஸ்கோர்லத் எங்கள் இருக்கைகளுக்கு எதிரே வந்து நின்றார்.

வியப்புடன், ஆஞ்சலிகாவைக் கண்ணுக்குக் கண் பார்த்த ஸ்கோர்லத் ஆங்கிலத்தில் சொன்னது “என்ன ஆச்சரியம்... நீ அச்சு அசப்பில் என்னைப் போலவே இருக்கின்றாய்? ”

- *வினையூக்கி செல்வகுமார்*

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ வேற்றுலகத்தில் இருந்து வந்த கிரகங்கள்.

முன்னாள் கனடியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் எம்மத்தியில் பல வேற்றுலக வாசிகள் நடமாடுவதாக இரசிய ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் அடித்துக் கூறியுள்ளார்.

இந்த ஆள் எப்ப குங்குமப் பொட்டுக்காரனைச் சந்தித்தார்?

## ■ தண்டிக்கப்பட்ட தமிழ்த் தலைமை அமைச்சர்

நாடுகடந்த அரசின் ‘தலைமை அமைச்சர்’ தவறான காரியங்களுக்காக நிதி திரட்டியமைக்காக அமெரிக்க நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டதாக சிங்கள ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

## ■ மீண்டும் பழைய கிலுகிலுப்பை

இந்திய வெளிநாட்டமைச்சர் சல்மன் குர்சித் இலங்கை அரசு ராஜீவ் ஜே ஆர் ஒப்பந்தத்தை மதிக்க வேண்டும் என்று ஒரு ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் கூறியுள்ளார். மாகாண அரசுகளுக்கு முழுமையான அதிகாரப் பரவலாக்கம் செய்யப் படவேண்டும் என்றால் குர்சித். இந்த ஆளுக்கு ராஜீவ் ஜே ஆர் ஒப்பந்தத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது என்பது மட்டுமல்ல அதிகாரப் பரவலாக்கம் என்றால் என்ன என்று கூடத் தெரியாது!!

## ■ இந்தியாவில் உள்ள உண்டியல்களையும் உடைக்கப் போறாங்களோ?

இந்தியாவில் உள்ள மத வழிபாட்டிடங்களில் உள்ள உண்டியல்களில் போடப்பட்ட இலங்கை நாணயங்களை இலங்கைக்குக் கொண்டு வர வேண்டும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## ■ சேடம் இழுக்கும் காங்கிரசுக்கு கடைசி மருந்து

இந்திய அரசியலில் சேடம் இழுத்துக் கொண்டிருக்கும் காங்கிரசுக் கட்சிக்கு கடைசிச் சிகிச்சையாக தலைமை அமைச்சர் மன் மோகன் சிங் இலங்கைப் பயணம் ஒன்றை மேற் கொள்ளவிடுக்கின்றார். அவரது பயணத்தில் யாழ்ப் பாணமும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

அவர் விக்கினேஸ்வரனைச் சந்தித்து நற்சான்றிதழ் பெறுவார். ராஜபக்ச வாக்குறுதி கொடுத்தார் என்று ஒரு பொய் சொல்லி அதாவது 2009 மே மாதம் 18-ம் திகதி கடைசி நேரப் போர் நிறுத்தம் போல், அதை திரித்துப் புரட்டி தமிழ்நாட்டு வாக்காளர்களை மீண்டும் ஏமாற்றும் திட்டம்.

- *ஊருளவாளி*

## நிரந்தர சுதந்திரம் பெற்றவர்கள்

பெற்றது – பத்து
கடத்தல் வானுக்கு –
ஒன்று
காவியமாய் – இரண்டு
கண் முன்னே கதறக்
கதறச் சுட்டது – ஒன்று

மலேரியாவிற்கு
மருந்தில்லாமல் –
ஒன்று
மறியற்சாலை மரண
அடிக்கு – ஒன்று
பாலியல்
படுகொலைக்கு –
ஒன்று
பாலில்லாமல்
பட்டினியால் – ஒன்று

ஷெல்லுக்கு – ஒன்று
அரைவயிற்றுக்
கஞ்சியால்
குறைப்பிரசவமானது – ஒன்று
இராணுவத்தின்
கடுந்தாக்குதலில் – கணவன்
பாழும் முகாம்
படுக்கையில் – நான்கு

தடிகளுக்கு
மேல் தரைப்பாள்
சுதந்திரம் சுழற்றியவளியில்
சுயநினைவில்லாமல் – அம்மா
பன்னிரண்டாவதாய் பயணிக்க
பாதை தேடுகிறாள்

– *க.சிவனடியான்*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP
creative artwork from concept to design

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com




## மணமகள் தேவை

1. 39 வயது, 5'9" British citizen, self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4782

2. 30 வயது, 6'0" Graduate, civil engineering in Australia, Australian citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4783

3. 27 வயது, 5'8" Graduate, working in Colombo தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4784

4. 34 வயது, 5'11" Divorced born and broughtup in uk doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4781

5. 30 வயது, 5'3" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4775

6. 34 வயது, 5'6" Permanent residence in uk doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4598

7. 41 வயது, 5'8" British citizen working in a IT department in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

8. 29 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4195

9. 48 வயது, 5'8" Permanent residence divorced accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422

10. 33 வயது, 5'7" German citizen working as a health care assistant in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4757

11. 38 வயது, 5'9" work permit visa working as a cashier in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4412

12. 47 வயது, 5'11" British citizen working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4755

13. 23 வயது, 5'5" Residence permit for 5 years self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4752

14. 32 வயது, 5'11" Permanent residence in france working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4746

15. 27 வயது, 5'5" Graduate student visa working as a web developer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4745

16. 26 வயது, 5'10" Graduate German citizen working in company in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4744

17. 34 வயது, 5'1" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4733

18. 25 வயது, 6'0" British citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4743

19. 42 வயது, 5'7" Permanent residence shop keeper தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4742

20. 29 வயது, 5'8" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4740

21. 33 வயது, 5'7" working in a company in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4737

22. 28 வயது, 5'5" Student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4713

23. 31 வயது, 6'1" Graduate student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4732

24. 40 வயது, 6'1" Divorced Graduate working in a Administrative service தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1684

25. 26 வயது, 5'10" Permanent visa working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4722

26. 42 வயது, 5'8" British citizen woking in Investment Bank தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

27. 30 வயது, 5'6" British citizen doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3272

28. 35 வயது, 5'4" PSW visa graduate working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4730

29. 31 வயது, 5'6" Australia citizen working as a system engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4729

30. 26 வயது, 5'10" Permanent residence in uk working தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4722

31. 31 வயது, 5'7" Geman citizen manager in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4615

32. 42 வயது, 5'8" British citizen working in investment banking தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

33. 33 வயது, 5'8" Permanent residence in uk software engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4503

34. 33 வயது, 5'8" divorced work permit visa graduate doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4713

35. 30 வயது, 5'8" Born and brought up in uk working as a IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4710

36. 31 வயது, 6'3" Permanent residence in Singapore Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4708

37. 40 வயது, 5'3" British citizen working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4706

38. 21 வயது, 5'5" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4701

39. 30 வயது, 5'2" Teacher in srilankan தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4009

40. 42 வயது, 5'8" British citizen working as a investement banking as accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

41. 45 வயது, 5'6" German citizen Living in UK, Divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4660

42. 26 வயது, 6'1" Born and brought up in uk working as a Software engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4699

43. 41 வயது, 5'8" PR holder in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

44. 59 வயது, 5'4" British citizen handicap தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4697

45. 32 வயது, 5'5" Permanent residence in France working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4695

46. 28 வயது, 5'8" student visa in uk graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4690

47. 34 வயது, 5'5" Canadian citizen working in a bank as a manager in Canada தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4724

48. 34 வயது, 5'6" Asylum seeker living in uk for 14 years தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4688

49. 29 வயது, 6'1" PSW visa working as a Electrical engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4687

50. 32 வயது, 5'7" British citizen working as a Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4683

51. 33 வயது, 5'4" Asylum seeker Graduate in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4680

## மணமகன் தேவை

1. 48 வயது, 5'2" German citizen divorced working as a teacher with the child தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4770

2. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4766

3. 40 வயது, 5'10" German citizen Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4756

4. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4754

5. 34 வயது, 5'0" Graduate working in a IT field in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4749

6. 24 வயது, 5'3" Graduate working in a Bank in uk French citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4161

7. 43 வயது, 5'3" Graduate British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4731

8. 38 வயது, 5'3" Graduate British citizen working as a Graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4646

9. 43 வயது, 5'2" German citizen Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4666

10. 29 வயது, 5'5" Residing in Srilanka, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4519

11. 31 வயது, 5'4" Canadian, Residing in Canadian தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4527

12. 39 வயது, 5'2" Born and brought up in uk working as a Project manager in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4704

13. 35 வயது, 5'5" divorced british citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4709

14. 24 வயது, 5'8" German citizen graduate working in a private sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4702

15. 38 வயது, 5'3" German citizen working as a graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

16. 27 வயது, 5'2" Born and broughtup in uk nurse தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4681

17. 28 வயது, 5'6" PSW visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4673

18. 29 வயது, 5'6" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4659

19. 27 வயது, 5'1" medical student living in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3350

20. 27 வயது, 5'4" srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4414

21. 27 வயது, 5'3" Permanent residence working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

22. 28 வயது, 5'3" British citizen working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4629

23. 21 வயது, 5'3" born and brought up in Norway student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4607

24. 35 வயது, 5'5" working as a manager in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4591

25. 39 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660

26. 31 வயது, 5'6" British citizen accountant working in NHS Hospital தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4584

27. 44 வயது, 5'2" divorced, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4576

28. 25 வயது, 5'3" Permanent residence working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

29. 30 வயது, 5'3" British citizen Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4562

30. 32 வயது, 5'10" srilanka, graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4552

31. 32 வயது, 5'3" British citizen working in a company as a manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4539

32. 24 வயது, 5'4" born and brought up in uk working as a financial investment in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3504

33. 33 வயது, 5'5" Accountant in Singapore தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3947

34. 40 வயது, 5'3" divorced German citizen living in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4542

35. 30 வயது, 5'7" British citizen working in NHS as a Personal assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4357

36. 33 வயது, 5'2" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4513

37. 31 வயது, 5'5" Graduate working in a supermarket in a work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102

38. 39 வயது, 5'3" widowed living with childrend in netherland wishes to move to uk accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4511

39. 28 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4496

40. 22 வயது, 5'3" British citizen accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4491

41. 34 வயது, 5'4" PR in Uk divorced working in a factory தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4489

42. 21 வயது, 5'8" PR in Uk student graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4488

43. 26 வயது, 5'0" PR in Uk graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4487

44. 27 வயது, 5'2" British citizen Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4485

45. 25 வயது, 5'6" PR in Uk working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4484

46. 29 வயது, 5'7" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4483

47. 34 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4473

48. 24 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4481

49. 27 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4477

50. 23 வயது, 5'2" British citizen graduate student தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4471

51. 37 வயது, 5'5" Accountant working in srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4465

52. 40 வயது, 5'4" Doctor work permit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4455

53. 32 வயது, 5'0" working in pharmacy US citizen living in US தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4398

54. 29 வயது, 5'2" British citizen graduate working in NHS தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

55. 28 வயது, 5'8" British citizen working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

56. 33 வயது, 5'2" British citizen divorced working as a IT manager தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4373

57. 23 வயது, 4'10" Permanent residence in uk student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4362

58. 24 வயது, 5'4" Graduate living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4536

59. 28 வயது, 5'3" British citizen, working in an IT field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4338

60. 26 வயது, 5'3" British Citizen, Doctor in USA தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4348

61. 32 வயது, 5'3" British citizen, working as a Tutor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4322

62. 29 வயது, 5'5" Doctor, working in Ireland தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4321

63. 33 வயது, 5'2" working in a factory in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4310

**இணையத்தில் மேலதிக விபரங்கள்**
**www.orumanam.com**

# ஆண்டு என்றால் என்ன ?




காலத்தை அளக்கும் ஒரு அலகு. நாம் எல்லாம் நூறு ஆண்டுகள் வாழ்பவர்கள் என்று சொல்லளவில் என்றாலும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டு மனித ஆயுளின் 100ல் ஒரு பங்கு என்று கூறுவோம். ஆண்டு எப்போது தொடங்குகிறது என்றால் அவற்றின் முதலாம் திகதி உலகில் பயன்பாட்டில் உள்ள பல நாட்காட்டிகள் மத்தியில் ஒன்றுக்கொன்று வேறுபட்டு, 12 மாதங்களுள் எந்த மாதத்திலும் புத்தாண்டு வரலாம் என்ற நிலையே உள்ளது.

இலங்கையில் நடைமுறையிலுள்ள மூன்று வகையான ஆண்டுகளில் இஸ்லாமிய ஆண்டில் பருவ காலங்களுக்கு ஒப்ப முழுமைபெறப் போதிய நாட்கள் போதாத காரணத்தால் அதை இஸ்லாமின் புனித ஆண்டாக மட்டும் மதித்து பருவ காலங்களை முழுமையாக உள்ளடக்கக் கூடிய தமிழ் ஆண்டையும் ஆங்கில ஆண்டையும் பற்றி மாத்திரம் இங்கு பார்ப்போம்.

**தமிழ் ஆண்டு**

நாங்கள்தமிழ்ப்புத்தாண்டுஎன்றுசொன்னாலும் அது விண்மீன் சம்பந்த ஆண்டு அல்லது வேத சோதிட ஆண்டு என்றே காலம் காலமாக அழைக்கப் படுகிறது. உண்மையில் கதிரவனைப் பூமி வலம் வலம் வருவது எங்கள் கண்களுக்கு கதிரவன் பூமியைச் சுற்றுவது போல்தான் தென்படுகிறது.

ஒரு புள்ளியிலிருந்து தன் பயணத்தை ஆரம்பிக்கும் கதிரவன் மாதம் 30பாகையாக ஒரு ஆண்டில் 360 பாகையை அல்லது ஒரு வட்டத்தைச் சுற்றி புறப்பட்ட இடத்திற்கே திரும்பவும் வந்தடைகிறான். இதுவே ஒரு தமிழ் ஆண்டு. ஒவ்வொரு 30 பாகையையும் ஒவ்வொரு ராசியாக வகுத்து 12 ராசிகளை வைத்துள்ளார்கள்.

0 பாகையிலிருந்து 30 பாகை வரையுள்ள பகுதியைமேட ராசி என்றும் 30பாகையிலிருந்து 60 பாகை வரை உள்ள பகுதியை இடப ராசி என்றும் மிகுதி உள்ள 10 பகுதிகளையும் முறையே மிதுனம் (60-90), கற்கடகம் (90-120), சிங்கம் (120-150) கன்னி 150-180) துலாம் (180-210) விருட்சிகம் (210-240) தனு (240-270) மகரம் (270-300) கும்பம் (300-330) மீனம் (330-360) என்று வகுத்துள்ளார்கள். சைபர் பாகையும் 360 பாகையும் ஒன்று என்பதை நான் சொல்லத் தேவை இல்லை.

தமிழ் ஆண்டு பல சிறப்புப் பண்புகளைக் கொண்டது. இந்த 12 ராசிகளுமே நிரந்தரமாக வானில் வரையப்பட்ட கோடுகள். புள்ளிகள் என்ற சொல் பயன் படுத்தாமல் கோடுகள் என்று சொல்வதற்கும் அர்த்தம் உண்டு. பூமி 23.5 பாகை சரிந்த நிலையிலேயே வலம் வருவதால் எங்கள் கண்களுக்கு கதிரவன் கற்கடக ரேகைக்கும் மகர ரேகைக்கம் இடையில் வளைந்து வளைந்து செல்வது போலவே காட்சிதருகிறான். ஆதனால்புள்ளி என்ற சொல்லிலும் கற்கடக ரேகையையும் மகர ரேகையையும் தொடுக்கும் கோடுகள் கொண்ட பட்டியாக இந்தச் சோதிட வட்டத்தைக் கணிப்பதுதான் சிறந்த முறை.

360 பாகையையும் சைபர் பாகையையும் தொடுக்கும் கோடுதான் மேட ராசியின் தொடக்கம். இங்கு கதிரவன் நுழையும் நேரம்தான் மேட சங்கிராந்தி. இதையே நாம் சித்திரைப் புத்தாண்டு என்கின்றோம். இந்திய இலங்கை நேரப்படி இரவு நேரத்தில் சங்கிராந்தி நிகழ்ந்தால் மறுநாள்தான் சித்திரைப் புத்தாண்டாக அறிவிக்கப் படும். பாய்ந்தடித்துக்கொண்டு இரவு புத்தாண்டு என்று அறிவிக்கத் தேவையில்லை. இதுதான் பாரம்பரியம். இப்பொழுது சிலர் பிறக்கும் புத்தாண்டையே கனடாவுக்கு ஒருநாள் இந்தியா இலங்கைக்கு வேறுநாள் என்று பிரிக்கிறார்கள். ஒரு நாட்டில் ஒரு நாளும் வேறு ஒரு நாட்டில் மறு நாளும் புத்தாண்டைக் கொண்டாடுவது முட்டாள்தனம் என்பதை இவர்கள் ஏன் உணருகின்றார்கள் இல்லை என்பது தான் புதிராக உள்ளது.

தமிழ் ஆண்டின் இன்னொரு சிறப்பு என்ன வென்றால் லீப் ஆண்டு என்று ஒன்றை கணக்கில் வைக்கத் தேவையில்லை. ஒவ்வொரு மாதத்திலும் எவ்வளவு நாட்கள் என்று கணக்கிடுவதுமில்லை. ஒவ்வொரு ராசியிலும் எத்தனை நாட்கள் கதிரவன் நிற்கின்றானோ அத்தனை நாட்கள்தான் அந்தந்த மாதத்திற்குரிய நாட்கள். எடுத்துக்காட்டிற்கு இவ்வாண்டு 32 நாட்கள் மிதுன ராசிக்குள் கதிரவன் நிற்கின்றான். நாட்காட்டியைப் பாருங்கள் 32 நாட்கள் ஆனி மாதத்தில் இருப்பதை அவதானிப்பீர்கள். இக் கணிப்பு கடந்த ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பதிவிலுள்ளது. வருகிற ஏப்ரல் 14ல் பிறக்கும் ஜெய சித்திரைப் புத்தாண்டு, கலியுகம் 5116 ஆகும். பாரதக் கதை முடிவில் கலியுகம் பிறந்ததாகவும், அது பிறந்ததை பீமன் தர்மரிடம் கூறியதாகவும் இதிகாச வரலாற்றில் ஒரு குறிப்புக்கூட உண்டு.

**ஆங்கில ஆண்டு**

ஜுலியர் சீசர் காலத்தில் இருந்து பயன்பாட்டில் உள்ள இந்த ஆண்டு 1582ல் போப் பாண்டவர் 13வது பிரகவுரியின் சீரமைப்பினால் பருவ காலங்களுக்கு ஒப்ப ஒரு இம்மிகூடப் பிசகாத துல்லிய கணிப்புடன் நடைமுறையிலுள்ளது. பூமி கதிரவனை ஒரு முறை வலம் வர முன்நூற்றி அறுபத்தைந்தே கால் நாட்களிலும் பார்க்கக் கிட்டத்தட்ட .0075 நாட்கள் குறைவாகவே தேவைப்படுகிறது. இது 400 ஆண்டுகளில் மூன்று நாட்களாகிவிடும். இதை போப் பாண்டவர் வியக்கத் தக்க முறையில் கையாண்டுள்ளார். ஜுலியர் சீசர் காலத்திலிருந்து ஏற்பட்ட தவறால் கூடிய 10 நாட்களை முதலில் சரி செய்தார். ஒக்டோபர் 4ம் தகதி 1582 ஒரு வியாழக் கிழமை வந்தது. மறுநாள் வெள்ளிக்கிழமையை ஒக்டோபர் 15 என்று அறிவத்து ஒரு பெரிய மாற்றததின்மூலம் 10 நாட்களை வெட்டினார். அதன் பின் அதே தவறு தொடராதிருக்க 00ரில் முடியும் எல்லா ஆண்டுகளுமே நானூறால் மிச்சமின்றிப் பிரிபட்டால் மட்டுமே அவை லீப் ஆண்டு. இல்லாவிடில் அவை சாதாரண ஆண்டு என்றறிவித்தார். எடுத்துக் காட்டிற்கு 2000மாம் ஆண்டு லீப் ஆண்டு. 2100, 2200, 2300 ஆகியவை சாதாரண ஆண்டுகள். 00ரில் முடியும் அடுத்த லீப் ஆண்டு 2400. இப்படிச் சீர் செய்த பின்பும் சில வினாடிகள் மிஞ்சும். இப் போதைக்கு அவைபற்றிப் பேசி நாங்கள் குழம்பத் தேவையில்லை. அவை ஒரு நாளாகத் திரள்வதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலே செல்லும். அதுவரை பேசாதிருப்போம்.

எங்கள் தமிழ்ப் புத்தாண்டு பருவ காலங்களுக்கு ஒப்ப ஓடினாலும் பூமியின் சிறு தளம்பல் காரணமாக (தன்னைத்தானே சுற்றி ஓடும் பம்பரம் எப்படிச் சிறிது தளம்புகிறதோ அதே தளம்பல்தான் பூமிக்கும் ஏற்படுகிறது) ஒரு ஆண்டில் 20 நிமிஷங்களை கூடுதலாய் விழுங்குகிறது. அதாவது 72 ஆண்டுகளுக்கு ஒரு நாளை விழுங்குகிறது. இதற்கு யாருமே எதுவுமே செய்ய முடியாது. ஆனால் அதன் விளைவாக ஏற்பட்ட சில பதிவுகளை மட்டும் கீழே தருகிறேன்.

கலியுகம் 5116 ஏப்ரல் 14ல் பிறக்கிறது. ஆனால் கலியுகம் 01 பெப்ரவரி 18ம் திகதிதான் பிறந்தது. கி பி 285ல் தமிழ்ப் புத்தாண்டு மார்ச் 21ல் பிறந்தது. நாம் உழவர் திருநாள் என்று கொண்டாடும் வள்ளுவர் 01 ஆண்டு ஜனவரி 14ல் பிறக்கவில்லை. டிசெம்பர் 16ல்தான் பிறந்திருக்கும்.

இந்தத் தளம்பல் இப்போது சில நிமிடங்களை விழுங்குகிறது. மறுபக்கம் சரியும்போது அது நிமிடங்களைக் கக்கும் ஒருமுறை தளம்பி நிமிரத் தேவையான 26000 ஆண்டுகள் கணக்கைப் பார்த்தால் விழுங்கிய கக்கிய ஆண்டுகள் ஒன்றுக்கொன்று சரியாக அமையும்.

# தமிழ் மக்களுக்குள்ள..

*20ம் பக்கத் தொடர்ச்சி*

இதனால் அரைகுறை நிலப்பிரபுத்துவ பண்புகளைக்கொண்ட, அதிகாரப்படிநிலை சமூகமாகவே, தமிழ்ச்சமூகம் காணப்படுகின்றது. நீண்ட காலனித்துவ ஆட்சியும் இதனை வளர்த்திருக்கின்றது. இதனால்தான், தமிழ்மக்கள் மத்தியில் செயற்பட்டிருந்த அரசியல்கட்சிகள் என்றாலும் சரி, பின்னர் வந்த விடுதலை இயக்கங்கள் என்றாலும் சரி, அவற்றிடம் ஜனநாயகப் பண்புகள் போதியளவு இருக்கவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடமும், எந்த ஜனநாயகப் பண்பும் கிடையாது. ஜனநாயகப் பண்பைப் பேணினால், சம்பந்தனால் தனித்து ஓடவும் முடியாது. இன்றைய தமிழ்ச்சூழலில் ஜனநாயகரீதியான தலைவர்கள் இல்லை. மாறாக, ஜனநாயகரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட சர்வாதிகாரத் தலைவர்களே உள்ளனர்.

ஜனநாயகப் பண்புகள் இல்லாமையினால் தமிழ் அரசியலில் கூட்டுவாழ்க்கையை நினைத்தே பார்க்கமுடியாது. கூட்டுவாழ்கையும், அதன் அடிப்படையில் அமைந்த, கூட்டுச் செயற்பாடுகளும் இல்லாமல், தமிழ்மக்கள் ஒரு போதும்விடுதலையடைய முடியாது.

***இதனைத் தடுக்க என்ன செய்யலாம் என நீங்கள் கருதுகிறீர்கள்?***

தமிழ்த்தேசிய அரசியல் இயக்கத்தை ஒரு பிரக்ஞைபூர்வ அமைப்பாக மாற்றுவதன் மூலம் தான் இதனைத் தடுக்க முடியும் என நான் கருதுகின்றேன். மேல்மட்டத்தில் பிரக்ஞைபூர்வ அமைப்பு இல்லாமல், கீழ்மட்டத்தில் அவை இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. தமிழ்மக்கள் பேரினவாத ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலைபெறுவதற்கும், சுயநிர்வாகத்தைக் கட்டியெழுப்புவதற்கும், பிரக்ஞைபூர்வ அமைப்பு அவசியம். பிரக்ஞைபூர்வ அரசியல் இல்லாமல், பிரக்ஞைபூர்வ அமைப்பு ஒரு போதும் எழுச்சியடைய மாட்டாது. பூசணிக் கொட்டையைநட்டுவிட்டு, அவரைக்காய் காய்க்கும் என எதிர்பார்க்கமுடியாது.

பிரக்ஞைபூர்வ அரசியலுக்கு தெளிவான இலக்கு, உறுதியான கொள்கை, அர்ப்பணிப்புள்ள தலைமை என்பன அவசியம். கூட்டமைப்பிடம் இவை எதுவும் கிடையாது. அது இந்தியாவிற்கு சேவகம் செய்யும் ஒரு எடுபிடிஅமைப்பு.

இன்னொன்றின் எடுபிடியாக இருக்கும் ஓர் அமைப்பிடம், பிரக்ஞைபூர்வ அரசியலை ஒரு போதும் எதிர்பார்க்கமுடியாது. பிரக்ஞைபூர்வ அரசியல் இல்லாமல், பிரக்ஞைபூர்வ அமைப்பையும் கட்டியெழுப்ப முடியாது. கூட்டமைப்பிடம் உள்ள எல்லாக் கோளாறுகளுக்கும் காரணம், அதனிடம் பிரக்ஞைபூர்வ அரசியல் இல்லாமையே.

பிரக்ஞைபூர்வ அரசியலும், அதனை முன்னெடுக்கும் அமைப்பும் இருந்துவிட்டால், உள்ளூராட்சிசபை பிரச்சினைகள் எல்லாம் சிறிய பிரச்சினைகளே. இவ்வமைப்பைக் கட்டியெழுப்பிவிட்டால், ஒரு ஜனநாயகபூர்வ சமூகமாக தமிழ்ச்சமூகத்தைக் கட்டியெழுப்பி அதன் குறைபாடுகளையும். சிறிது சிறிதாகத் திருத்த முடியும். கட்சிப் பிரச்சினைகளை கட்சிப் பொறிமுறைகள் மூலம் தீர்த்துக்கொள்ளவும் முடியும்.

ஒரு இலட்சியத்திற்காக ஆயிரக்கணக்கில் உயிர்களைக் காவுகொடுத்த மக்களிடம், இவற்றை ஏற்படுத்துவது கடினமான காரியமல்ல.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் திருந்தப் போவதில்லை. திருந்துவதற்கான பொறிமுறைகளும் அங்கு கிடையாது. ஒரு எடுபிடி அமைப்பிடம், இதனை எதிர்பார்க்கவும் முடியாது. பிரக்ஞைபூர்வமான மாற்று அரசியலுடன் ஒரு மாற்று அரசியல் இயக்கத்தை, கட்டியெழுப்புவதன் மூலமே மேற்கூறிய குறைபாடுகளை நிவர்த்திசெய்யமுடியும்.

இன்று தமிழ் மக்களுக்குள்ள ஒரேயொரு தெரிவு மாற்று அரசியலும், மாற்று அரசியல் இயக்கமுமே.

*நேர்கண்டவர் - நந்தன்*

# அகவை 80 காணும் அருட்தந்தை



ஆன்மிகப்பணியிலும் தமிழ் மக்களின் விடுதலைக்கான செயற்பாடுகளிலும் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு செயலாற்றி வரும் அருட்தந்தை சீமாம்பிள்ளை ஜோசப் இமானுவல் அடிகளார் தனது எண்பதாவது அகவையினை இம்மாதம் ஆறாம்திகதி நிறைவு செய்துள்ளார்.

1934ம் ஆண்டு ஜனவரி ஆறாம் திகதி பிறந்த அடிகளார் யாழ் சென்ற் ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி பயின்றார். பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பௌதீக விஞ்ஞானத் துறையில் பட்டப்படிப்பினை மேற்கொண்ட அவர் சிறிது காலம் இரசாயன பாடத்தை கற்பிக்கும் ஆசிரியராகவும், பத்திரிகையாளராகவும் தொழில் புரிந்தார்.

1966ம் ஆண்டு டிசம்பர் மாதம் உரோமிலுள்ள St Peter's Basilica இல் கத்தோலிக்க குருத்துவ நிலையை எய்தினார். அதன்பின்னர் நாடுதிரும்பிமதப்பணியில் ஈடுபட்டார். 1976இல் மீளவும் இத்தாலிக்குச் சென்று ஆன்மீகத்துறையில் ஆய்வு மாணவனாகி முனைவர் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்.

1986ம் ஆண்டிலிருந்து 1995ம் ஆண்டு வரை யாழ்பாணத்தில் குருத்துவ ஆசிரியராகப் பணியாற்றினார். 1995ம் ஆண்டு இடப்பெயர்வின் போது வன்னிக்கு சென்ற இமானுவல் அடிகளார், அங்கிருந்த காலத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார். தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் அன்பினையும் மதிப்பினையும் பெற்றுக்கொண்ட அடிகளாருக்கு தலைவர் அவர்கள் தனது அன்பினை பரிமாறு முகமாக கைக்கடிகாரம் ஒன்றினை பரிசளித்தார். அடிகளார் இப்போதும் அக் கடிகாரத்தை அணிந்து கொள்வதுண்டு.

## மக்கள் பணியில் தன்னை முழுமையாக இணைத்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் இமானுவல் அடிகளாரை வணங்கி நிற்கிறோம்.

1997ம் ஆண்டில் ஜேர்மனிக்கு புலம்பெயரந்த அடிகளார் அங்கிருந்து தனது ஆன்மீகப்பணியினைத் தொடர்வதுடன், 2010ம் ஆண்டிலிருந்து உலகத் தமிழர் பேரவையின் தலைவராகவும் செயற்பட்டு வருகிறார்.

இவ்வயதிலும் அடிக்கடி பல்வேறு நாடுகளுக்கும் பயணம் செய்து தமிழ் மக்களையும், சர்வதேச இராசதந்திரிகளையும் சந்தித்து வருகிறார்.

மக்கள் பணியில் தன்னை முழுமையாக இணைத்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் இமானுவல் அடிகளாரை வணங்கி நிற்கிறோம்.

*- ஒரு பேப்பர்*

# தைப் புத்தாண்டில் தமிழீழ விடியலுக்கான பூபாளம் கேட்கட்டும்



- திருமகள்

தை முதல்நாள் தமிழர்களின் திருநாள். உழவர்களின் பெருநாள். தமிழர்கள் இயற்கைக்கு விழா எடுக்கும் இனிய நாள். தமிழ்கூறு நல்லுலகம் போற்றும் இன்ப நாள்.

களனி திருத்தி, வயல் உழுது, எரு இட்டு, நீர் பாய்ச்சி, நெல் விதைத்து, களை எடுத்து,விளைந்த நெல்மணிக் கதிர்களை அரிவி வெட்டி, சூடு மிதித்து, நெல்லை வீட்டுக்குக் கொண்டு வந்து கூடையில் போட்டு பின்னர் அதில் கொஞ்சம் எடுத்து உரலில் போட்டுக் குத்தி அரிசியாக்கி, புதுப்பானையில் பாலும் சர்க்கரையும் பாகும் பருப்பும் இட்டுப் பொங்கி, மஞ்சளும், இஞ்சியும், கரும்பும், கற்கண்டும் இயற்கைத் தெய்வமான ஞாயிறுகுப் படைத்து மனைவியும் மக்களும் கொண்டாடி மகிழும் விழாவே பொங்கல் நாள் !

அறுவடைக்கு முன்னதாக நல்ல நாளில் வயலில் தலை சாய்த்து காற்றினால் தலையசைத்து நிற்கும் நெல்மணிக் கதிர்களில் கைப்பிடி அரிந்து தட்டில் எடுத்து வந்து வீட்டு வாசலில் கட்டுவார்கள். இதற்குப் புதிர் எடுத்தல் என்று பெயர். பின்னர் தைப்பூசத் திருநாளில் புதிர் குழைத்தல் இடம்பெறும். புத்தரிசி பொங்கி, சர்க்கரையும் வாழைப் பழமும் சேர்த்துப் படைக்கும் இப்புதிர் சோற்றை சுற்றமும் நட்பும் சூழ இருந்து உண்டு மகிழ்வர்.

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். இந்நாளில் வயல் உழவும், வண்டி இழுக்கவும், பால், தயிர், நெய் கொடுக்கவும், எரு எடுக்கவும் காரணமாக இருந்த எருதுகளையும, பசுக்களையும், கன்றுகளையும் குளங்களில் குளிப்பாட்டி, குங்குமம், சந்தனம், மலர் மாலைகளால் அலங்கரித்து குடிக்கப் பச்சையரிசிக் கஞ்சி கொடுப்பர்.

உழவன் கமத்துக்கு துணையாக இருந்த கால் நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே மாட்டுப் பொங்கலாகக் கொண்டாடப் படுகிறது. இந்த விழா பட்டிப் பொங்கல் என்றும் அழைக்கப்படும்.

பொங்கல் நாளை "சங்கராந்தி"யாக புராணிகர்கள் மாற்றமுற்பட்டபோதும் அடிப்படையில் பொங்கல் உழவர் விழாவாகவே உயர்ந்தும் நிலைத்தும் உள்ளது.

ஞாயிறு வணக்கம் இயற்கை வழிபாடு. உலக நாகரிகங்கள் எல்லாவற்றிலும் ஞாயிறு வணக்கம் இருந்ததற்கு சான்றுகள் இருக்கின்றன. உலகில் வாழும் உயிர்களுக்கு ஆதாரமாக ஞாயிறு இருப்பதால் ஆதி மனிதன் ஞாயிற்றைக் கடவுளாக உருவகப்படுத்தி வணங்கிப் போற்றி வந்ததில் வியப்பில்லை.

வேத காலந்தொட்டு இந்திரனுக்கும், அக்கினிக்கும் அடுத்த தெய்வமாக ஞாயிறு விளங்குகின்றான். ஒரு காலத்தில் ஞாயிறு முதல் தெய்வமாகவே வணங்கப் பட்டு வந்தது. அதுவே இந்து மதத்தின் உட்பிரிவுகளில் ஒன்றான சௌர மதம் ஆகும். பிற்காலச் சோழர் காலத்தில் சூரியனுக்கு தனிக் கோவில்கள் எழுப்பப்பட்டன.

தமிழ்க் காப்பியங்களில் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் -

*"ஞாயிறு போற்றுதும் ! ஞாயிறு போற்றுதும் !*

*காவிரி நாடன் திகிரிபோல் பொன்கோட்டு*

*மேருவலம் திரிதலான்."*

*- (சிலம்பு 1, 4-6)*

என ஞாயிற்றை வாழ்த்திப் போற்றுகிறார். காவிரி ஆற்றையுடைய நாடனாகிய சோழனது ஆணைச் சக்கரம் போன்று பொன் உச்சியை உடைய இமயமலையை வலம் வருதலால் ஞாயிற்றை வணங்குவோம் ! ஞாயிற்றை வணங்குவோம் !

தைப்பொங்கல் திருநாளுக்கு வானவியல் அடிப்படையும் இருக்கிறது. தென்திசை நோக்கி நகர்ந்த கதிரவன் (பூமியில் இருந்து பார்க்கும்போது) இந்நாளில் வடதிசை நோக்கி பன்னிரண்டு இராசிகளில் ஒன்றான மகரராசியில் புகுகின்றான்.

தமிழர்கள் கொண்டாடும் விழாக்களில, சமயசார்பற்ற எல்லோருக்கும் பொதுவான விழா பொங்கல் திருநாளாகும். பொங்கல் விழாவில் கற்பனைக்கோ, புனைவுகளுக்கோ, அருவருக்கத் தக்க பகுத்தறிவுக்குப் பொருந்தாத கட்டுக் கதைக்கோ இடமில்லை.

புராணக் கதைகள் எல்லாமே பொதுவாக ஆரிய-திராவிடப் போராட்டங்களைச் சித்தரிப்பதாகும். கொல்லப்படுகிற திராவிடர்கள் அசுரர்கள், இராட்சதகர்கள், இயக்கர்கள் என இழிவாகச் சித்தரிக்கப்பட்டார்கள்.

அவர்களை பெரும்பாலும் கடவுள் அவதாரங்கள் சூழ்ச்சியாலேயே கொலை செய்தார்கள். திருப்பால் கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்த கதை, மாபலி மற்றும் இரணியன் கதைகள் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

பொங்கல் நாள் விடுதலைப் புலிகளின் தலைசிறந்த தளபதி கேணல் கிட்டு மற்றும் அவரது தோழர்களான மேஜர் வேலன, கேணல் குட்டிஸ்ரீ கடற்புலி கப்டன் றோசான கடற்புலி கப்டன் அமுதன கடற்புலி லெப். நல்லவன் கடற்புலி கப்டன் குணசீலன் கடற்புலி கப்டன் நாயகன் கடற்புலி கப்டன் ஜீவா வங்கக் கடலில் வீரமரணம் எய்திய நினைவு நாளாகவும் கொண்டாடப்படுகிறது.

பொங்கலுக்கு அடுத்த நாள் (தை 02) பொதுமறை தந்த திருவள்ளுவர் பிறந்த நாள். அவர் பிறந்த ஆண்டு கி.மு. 31 என தமிழ் அறிஞர்களால் கொள்ளப்பட்டு தை 02 திருவள்ளுவர் ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் தமிழ் நாட்டில் விடுமுறை நாளாகும்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர் நம்பிக்கை. புத்தாண்டில் உலகம் வாழ் ஆறு கோடி தமிழர்களின் வாழ்வில் தென்றல் வீசட்டும்.

இன்பம் சேரட்டும். மகிழ்ச்சி பொங்கட்டும்.

*நன்றி: tamilnation.org*

திரை விமர்சனம்

## The Wolf Of Wall Street



அமெரிக்கப் பங்குச் சந்தையைப் புரட்டிப் போட்ட ஒரு ஸ்டாக் புரோக்கரின் Jordan Belfortன் கதை என்று ஒரே வரியில் சொல்லி விடலாம். ஒரு பங்குத் தரகர் எப்படி என்னென்ன தகிடுதத்தங்கள் செய்து வாழ்வில் உயர்ந்தார். பணக்காரரானர் . பின் வழக்கம் போல சட்டத்தின் பிடியில் அகப்பட்டு சிறைக்குச் செல்கிறார் என்பதே கதை. அதில் அவருக்கு ஏற்பட்ட ( 200 மில்லியன் டாலர். அதில் பாதியை - 110 மில்லியன் டாலர் ) கடனை அடைக்க புத்தகங்கள் எழுதினார், அதை சினிமாவாக எடுக்க உரிமத்தை விற்றார், Motivational Speakerஆக ஆனார். சரி கதைக்கு வருவோம்...

Black Monday எனப்படும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அக்டோபர் 19, 1987 இல் பங்குச் சந்தை தாறுமாறாகச் சரிய மனைவி தெரசா கணவருக்கு ஒரு விளம்பரத்தின் மூலம் லாங் ஐலண்ட் பாய்லர் ரூம் என்ற நிறுவனத்தில் வேலை இருப்பதாகக் கூறுகிறார். பின் நண்பர் அசாஃப் (Jonah Hill) உதவியுடன் ஜோர்டான் ( Leonardo DiCaprio ) Stratton Oakmont என்ற நிறுவனம் ஆரம்பித்து அதன் மூலம் பத்திர மோசடி, பண மோசடி , நிறுவனத்தின் பங்குகளை போலியாக உயர்த்துதல், மொத்தமாகப் பங்குகளை வாங்கி அதை ஏற்றி விற்பது போன்ற அனைத்து வித மோசடிகளையும் செய்து முன்னேறுகிறது. இதன் நடுவில் போதைப் பொருட்களை உபயோகம் அவர்கள் ஆரம்பித்த நிறுவனத்தில் ஊடுருவி வளர்கிறது. தவறான வழியில் வரும் பணம் அனைத்துத் தவறுகளையும் கைபிடித்தே அழைத்துவருகிறது. மாட மாளிகையோடு 20,30 வேலைக்காரர்களோடு வீடு. என்று பணத்தில் உச்சத்தில் இருக்கிறார் ஜோர்டான். ஆனால் அதைச் சம்பாதிக்க மக்களைப் போலியாகப் பேசி ஏமாற்றிப் பங்குகளை விற்றுவிடுகிறார்கள். வாய் சாமர்த்தியம் என்று வேறு வியாபார நுணுக்கங்களைப் பட்டியலிடுகிறார்.

சட்டவிரோதமாகச் சேரும் பணத்தை சுவிஸ் வங்கியில் ஒரு பெண்ணின் பெயரில் வைப்பீடு செய்கிறார்கள். ஆனால் அப்பெண் திடீரென இறந்து விடுவதால் நிறுவனத்தின் நிதி நிலமைகள் மோசமடைகிறது அதன் பின் வாழ்வின் நிலையாமையைப் பற்றி யோசிக்கத் துவங்குகிறார் ஜோர்டான்.

அதன்பின் இவர்கள் செய்யும் தகிடுதத்தங்களை ஆராயும் FBI ஐயை சேர்ந்த ஒரு நேர்மையான அதிகாரி கைல் சாண்ட்லர் இவர்களைப்பின் தொடர்ந்து கண்டுபிடித்து சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கிறார். அவர் Stratton Oakmontல் வேலை செய்த 1000 பேரில் முக்கியமாக 20 பேரைக் கைது செய்து சிறையில் அடைக்கிறார். சிறையில் அடைத்ததைத் தொடர்ந்து அவருக்கு 3 ஆண்டு தண்டனை பெற்று சிறைக்குச் செல்கிறார் ஜோர்டான். அத்துடன் படம் நிறைவுறுகிறது....

Share market தொடர்பாக விலாவாரியா தெரிந்தவர்கள் நிச்சயம் விலா நோக சிரிக்கலாம். Martin Scorsese தன் 71 வயதிலும் இப்படத்தை எடுத்திருப்பது தான் ஆச்சரியமே. பணமும், பெண்களும், போதையும் படுத்தும் பாட்டை நிறையவே விலாவாரியாகச் சொல்லி இருக்கிறது படம். பணம் இல்லையெண்டால் மனிதன் பிணம் என்று சொல்ல வந்த கதை. பணத்தைச் சம்பாதிப்பது எப்படி.. எப்பிடி வேணாலும் சம்பாதிக்கலாம். அதுக்கு எந்த வழியை வேணாலும் பின்பற்றலாம் என்ற கருத்தைச் சொல்கிறது.. எல்லாமே விற்பனைக்குத்தான் என்ற தாரக மந்திரத்தைப் போதிக்கிறது படம். எல்லாத்துக்கும் ஒரு விலை உண்டு. மனிதர்களுக்கும் கூட . அதைப் பணம்தான் நிர்ணயிக்கிறது. பணம்தான் தீர்மானிக்கிறது. பணம்தான் கடவுள். என்பதை அழுத்திச் சொல்லியிருக்கிறது படம்.

*- கிறுக்கல்கள் இணையம்*







# சினிமா




அதாகப்பட்டது...

விஜய்-மோகன்லால் என பெரிய கூட்டணியுடன், நீண்ட நாளைக்குப் பிறகு ஆர்.பி.சௌத்ரி தயாரிப்பில் இன்று வெளியாகும் படம். அஜித்-விஜய் படங்கள் நேரடியாக மோதுவதால் களை கட்டுகிறது இந்த பொங்கல். இப்போ ஜில்லா எப்படின்னு பார்ப்போம், வாருங்கள்.

ஒரு ஊர்ல..

தாதா மோகன்லாலில் அடியாள் மகன் விஜய். தனக்காக உயிரைக் கொடுத்த அடியாளின் பிள்ளையை தன் பிள்ளையாகவே வளர்க்கிறார். மோகன்லாலை யார் எதிர்த்தாலும் காலி பண்ணும் பாசக்காரப்பிள்ளையாக உருவெடுக்கிறார் விஜய். தனது தாதாயிசம் பிரச்சினையின்றித் தொடர, பொலீஸில் நம் ஆள் ஒருவன் இருந்தால் நல்லதே என்று மோகன்லால் விஜய்யை பொலீஸ் ஆக்குகிறார். பொலீஸ் ஆன பிறகே, அப்பாவின் செயல்பாடுகளால் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாவது விஜய்க்கு புரிகிறது. எனவே நல்ல பொலீஸாக மனம் திருந்தி, மோகன்லாலையும் திருத்திக்காட்டுவேன் என்று சவால் விடுகிறார். ஜெயித்தாரா என்பதே படம்.

படத்தின் முதல்பாதி ஆக்சன்-ஜாலி என சரிசமமாக விறுவிறுப்பாகவே போகிறது. தன் அப்பாவைக் கொன்றது பொலீஸ் என்பதால், விஜய்க்கு பொலீஸ் காக்கி என்றாலே பிடிப்பதில்லை. அதைவைத்து அவர் அடிக்கும் லூட்டிகள் அட்டகாசம். காஜலைப் பார்த்தவுடனேயே காதலில் விழுகிறார். பெண் கேட்டு அடியாள் பட்டாளத்துடன் போகும்போது தான் தெரிகிறது அவரும் பொலீஸ் என. அந்த காட்சியும், அதைத் தொடரும் காஜல்-சூரி காட்சிகளும் நல்ல நகைச்சுவை விருந்து. இன்னொரு பக்கம், பாசக்காரப்பிள்ளையாக விஜய், மோகன்லாலில் கட்டளைகளை அடிதடி-அதிரடியாக நிறைவேற்ற, ஆக்சனுக்கும் பஞ்சமில்லை. படத்தில் ஒரே பிரச்சினை, படத்தின் நீளம் தான். விஜய் பொலீஸ் ஆகி (ஸ்ட்ரெய்ட்டா அசிஸ்டெண்ட் கமிசனர் தான்!) பின்னர் மனம் திருந்தி மோகன்லாலிடம் சவால் விடும்போது இண்டர்வெல். அதற்கே ஒன்றரை மணிநேரம் ஆகிவிடுகிறது. அதன்பிறகு மோகன்லாலுக்கும் விஜய்க்கும் நடக்கும் பாசப்போராட்டம்-நீதிப் போராட்டத்திலேயே அடுத்து ஒரு மணிநேரம் போகிறது. மோகன்லால் திருந்த தடையாக இருப்பது அவரது ஈகோ தான். அதை அவரது வளர்ப்புப்பிள்ளை எப்படி மாற்றுகிறார் என்று படத்தை முடித்திருந்தாலே, நல்ல படமாகத் தான் இருந்திருக்கும்.

ஆனால் இரண்டரை மணிநேரம் படம் ஓடியபின், கூடவே இருந்த சம்பத் வில்லன் என்று தெரிகிறது. பிறகு சம்பத்திடம் இருந்து மோகன்லால் குடும்பத்தைக் காப்பாற்ற விஜய் போராடுவது, அதில் தம்பியை இழப்பது, அந்த பழி விஜய் மீதே விழுவது என்று வழக்கமான விஜய் மசாலாவிற்குள் கடைசி அரைமணி நேர படம் சிக்கி விடுகிறது. இழுவையான காட்சிகள் சுவாரஸ்யத்தைக் குறைக்கின்றன. அதைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், மாஸ் ஹிரோவுக்கே உரிய ஆக்சன் காட்சிகள் - நகைச்சுவைக் காட்சிகள் - காதல் காட்சிகள் என ஜாலியான படம் என்றே சொல்லலாம்.

விஜய் - ஜாலியான ஆளாகவும், ஆக்ரோசமான ஆளாகவும் ஒரே நேரத்தில் ஸ்கோர் பண்ணுகிறார். ஆனால் சீரியஸான காட்சிகளில்கூட அவர் கொடுக்கும் சில முக பாவனைகள், வசனம் பேசும் முறை என்பன எரிச்சலை உண்டு பண்ணுகிறது. ஆனால் சண்டைக்காட்சிகளிலும், பாடல்காட்சிகளிலும், நகைச்சுவையிலும் மனிதர் கலக்குகிறார்.

மோகன்லால் - அட்டகாசமான நடிப்பு. ஆரம்பத்தில் காட்டும் கம்பீரமாகட்டும், பிள்ளையே எதிர்ப்பதை நினைத்து கலங்குவதாகட்டும் கலக்குகிறார் பாதிப் படத்திலேயே சோலியை முடித்துவிடுவார்களோ என்று நினைத்தால், இறுதிவரை வருகின்ற முக்கியமான பாத்திரம். இன்னொரு ஹிரோ என்றே சொல்லலாம்.

காஜல் - பெரிதாக கதையில் முக்கியத்துவம் இல்லையென்றாலும், காமெடிக்காட்சியிலும் கலக்குகிறார்.

சூரி - இப்போது தான் இவர் சரியான இடத்துக்குக்கு வந்திருக்கிறார். இரண்டாம் கட்ட ஹிரோக்களுடனே நடித்தவருக்கு இது நல்ல வாய்ப்பு. கிடைத்த வாய்ப்பை நன்றாகவே பயன்படுத்தி இருக்கிறார். இவர் வரும் காட்சிகள் எல்லாமே சிரிப்பு மழை தான்.

இவையிருந்தும் படத்தில் நம்மை சோதிக்க வைப்பது இழுவையான கடைசி அரைமணி நேரம் அது மட்டுமல்ல படத்தின் நீளம். மூணு மணி நேரமாய்யா படத்தை ஓட்டறது ? கர்ணன் படமா எடுக்கிறீங்க, கமர்சியல் படம் தானே ?

லாஜிக் பத்தியெல்லாம் கனக்க அலட்டிக்கொள்ளாதது.. இறுதிக் காட்சிகளில் அமைச்சர் சம்பத்தையே கொன்று போட்டுவிட்டு ஸ்லோமோசன்ல கேசுவலா நடந்துபோறது, விஜய் அசிஸ்டென்ட் கமிசனர் ஆகுறது, சம்பத் மோகன்லாலை கொல்ல எத்தனையோ வழி இருந்தும் தலையைச் சுத்தி மூக்கைத் தொட்டதுன்னு நிறைய இடத்துல லாஜிக்கே இல்லை. அட கமிசனர் கையை வெட்டுனா, ஒரு கேஸ்கூட போட மாட்டாங்களா? இப்படி நிறையக் கேட்கலாம்..ஆனால் இதெல்லாம் இருந்தாத் தானே, அது விஜய் படம்னு டைரக்டர் நினைச்சிட்டாரு போல.

ஜில்லா - உங்களுக்கு வேலை வெட்டியே இல்லையென்றால், மூன்று மணிநேரம் உட்கார பொறுமையும் இருந்தால் ஒருமுறை பார்க்கலாம்.

*- அகிலன் - வண்ணப்பூக்கள் வலைப்பதிவு*

## சினித்துளி

### புத்தாண்டில் கோச்சடையான் !



சௌந்தர்யா இயக்கத்தில், ரஜினி இரட்டை வேடங்களில் நடித்துள்ள அனிமேஷன் படம் ‘கோச்சடையான்’. கடந்த டிசம்பர் 12-ந்தேதி ரஜினியின் பிறந்த நாள் அன்றே இப்படம் திரைக்கு வருவதாக சில மாதங்களுக்கு முன்பு பேசப்பட்டு வந்தது. அதையடுத்து,பொங்கல் அன்று படத்தை வெளியிட திட்டமிட்டனர். ஆனால், பொங்கலுக்கு விஜய்யின் ஜில்லா, அஜீத்தின் வீரம் படங்கள் திரைக்கு வருவது உறுதியானதால், தியேட்டர் பிரச்னை ஏற்படும் என்று வெளியீடு தள்ளி வைக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது கோச்சடையான் ஆடியோவை வாங்கியுள்ள சோனி நிறுவனம் ஆடியோவை பிப்ரவரி 15-ந்தேதி வெளியிடப்போவதாக அறிவித்துள்ளது. இதையடுத்து படம் தமிழ்ப்புத்தாண்டு தினத்தில் வெளியாகும் என்பது உறுதியாகியிருக்கிறது.

### நல்ல விலை போன மான்கராத்தே !



ஒரு படத்தின் படப்பிடிப்பு முடிவதற்குள்ளே அதன் எல்லா உரிமமும் விலை பேசி விற்றுவிடுகிறார்கள். அதே போல் ‘மான் கராத்தே’ படத்தின் படப்பிடிப்பு முடிவடைவதற்குள் எல்லா ஏரியாக்களிலும் விலை பேசப்பட்டு வருகிறது. வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தின் வெற்றியை தொடர்ந்து சிவகார்த்திகேயன் நடித்து வரும் ‘மான் கராத்தே’ படம் மீது பெரும் எதிர்பார்ப்பு கிளம்பியிருக்கிறது. திரு குமரன் இயக்கி வரும் இந்தப் படத்தில் சிவகார்த்திகேயன் மற்றும் ஹன்சிகா நடித்துள்ளனர்

சிவகார்த்திகேயன் நடித்த படங்கள் தொடர்ந்து வெற்றி பெற்றிருப்பதால், மான் கராத்தே படத்தின் எல்லா ஏரியாக்களும் இப்போதே விலை பேசப்பட்டு நல்ல விலைக்கு விற்பனை ஆகியிருக்கிறது...

### மிஷ்கினின் அடுத்த படம்



‘முகமூடி’க்குப் பிறகு மிஷ்கின் இயக்கத்தில் பெரிதாகப் பேசப்பட்ட படம் ‘ஓநாயும் ஆட்டுக்குட்டியும்’. படத்துக்குக் கிடைத்த வரவேற்பு திருப்தியை அளித்தாலும், வசூல் பெரிய அளவில் இல்லை. இந்நிலையில் அடுத்த படத்துக்குத் தயாராகிவிட்டார். மிஷ்கின் இயக்கும் பெயரிடப்படாத இந்தப் புதுப்படத்தில் ஹிரோவாக சரத்குமார் நடிக்கிறார். ராதிகாவின் ராடன் நிறுவனம் இப்படத்தைத் தயாரிக்கிறது. நாயகி யார் என்பதை இன்னும் முடிவு செய்யவில்லையாம்.

### சூப்பர் ஸ்ராருடன் மோதும் பவர் !



‘லத்திகா’ படத்தின் மூலம் ஹிரோவாக அறிமுகமானவர் ‘பவர்ஸ்டார்’ சீனிவாசன்.அந்தப் படத்தை ஒரே தியேட்டரில் ஓடவைத்து வெள்ளிவிழா கொண்டாடினார். அதற்குப் பிறகு. ‘ஆனந்தத் தொல்லை’, ‘இந்திர சேனா’, ‘மூலக்கடை முருகன்’, ‘தேசிய நெடுஞ்சாலை’ என பல படங்களுக்கு ஒரே சமயத்தில் பூஜை போட்டார்.அதில். ‘ஆனந்தத் தொல்லை’ படம் மட்டும் எடுக்கப்பட்டு, வெளியீட்டுக்குத் தயாராக உள்ளது.இதற்கிடையில் தான் ‘கண்ணா லட்டு தின்ன ஆசையா’ படத்தில் நடித்தார்.

‘ஆனந்தத் தொல்லை’ படத்தை எப்போது வெளியிடுவீர்கள் என்று அவரிடம் கேட்டால், ‘கோச்சடையான்‘ எப்போது ரிலீசாகுமோ அன்றே எனது ‘ஆனந்தத் தொல்லை’யும் வெளிவரும் என கூலாக சொல்கிறார்.

We offer our clients expert and focused legal advice, quality, care and efficiency

- Residential Property and commercial property (WE CAN ACT FOR ALL THE LENDERS)
- Immigration Law
- Intellectual Property
- Company law
- Landlord and Tenant
- CRIME (Business Immigration and Regulatory)
- Outsourcing Law
- Partnership Law
- Contract Law
- Serious Fraud




KTS LEGAL Solicitors & Advocates
KTS Legal Solicitors & Advocates
Tel:020 8367 0505
Fax:020 8367 0404
Nicholos House, 12 River Front, Enfield, EN1 3TF
Email: info@ktslegal.co.uk | Web:www.ktslegal.co.uk

வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதிக்கு அருகாமையில் (Pointpetro Road, Jaffna ) வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 5 அறைகளுடன் கூடிய வீடு 1 1/2 பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு.




Jaffna Teaching Hospital இலிருந்து 100 Yards தூரத்திலும் Jaffna Railway Stationஇலிருந்து 300 Yards தூரத்திலும் அமைந்துள்ளது.

மேலதிக விபங்களுக்கு : 0094 773 448 863

MercuryPay

# Merchant Credit Card Processing for your business

Static Terminal | Wireless Terminal | Mobile Terminal




- ✓ Fast and secure transactions
- ✓ Highly competitive card Processing rates
- ✓ UK based customer support 24*7*365
- ✓ Outstanding customer service
- ✓ Clear, honest and transparent price plan designed to suit your business

- Contact us for a quote today -

**020 8550 6677**

Email : **sales@mercurypay.net** Web : **www.mercurypay.net**

Follow us on :

# Southall Travel

*Redefining Travel*

*Why travel with*
## Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
## சவுத்ஹோல் டிராவல்
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED